நன்றி - நூலகத்திட்டம்

சரிநிகர்
SARINIHAR
# சரிநிகர்
சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே - பாரதி

### சுடுகாடு தந்தோம் சுகி!

வந்தேறு குடிகள் நீர் வரலாறும் உமக்கில்லை.
சொந்தம் உமக்கந்தச் சுடுகாடே-முந்தாநாள்
செம்மணியில் நாம்புதைத்த சிதைகளைப் பார்க்கவென
அம்மணியைக் கேட்கநீ ரார்?

-ஈழமோகம்

இதழ் 160 நவ.26 — டிச.09. 1998 விலை ரூபா 10.00



கிளிநொச்சி: இராணுவ முகாமொன்றின் அருகிலுள்ள மலக்குழி.
கைவிடப்பட்ட

## சந்திரிகாவை பாராட்டும் நளின் டி சில்வா!



## சென்னன் எம்.பி. கைதாவார்?

## சமாதான சமிக்ஞை இருட்டடிப்பு!





## 6வது (சு)தந்திர இலக்கிய விழா

'98

## வவுனியா கொலை முயற்சி: சூத்திரதாரி யார்?


## பெண்கள் வன்முறை எதிர்ப்பு வாரம்




## தொடரும் தணிக்கை 175 வது நாள்

நன்றி - நூலகத்திட்டம்





## பேரிரைச்சல் கொண்ட துயரம் !

நிகழ்ச்சி தொடங்கப் போகின்றது. கேள்விகள் கேட்கப்பட விருக்கின்றன. அதற்கெனவே சிலர் கையில் தயார்ப்படுத்திய கேள்விகளுடன் காத்திருக்கின்றனர். சுவர்ணவாஹினியின் நிகழ்ச்சித் தயாரிப்பாளரும் ஒருங்கிணைப்பாளரும். எல்லோரும் கேள்விகளைத் தயார்ப்படுத்தி வைத்திருக்கின்றனர். அக்கேள்விகளின் குறியைத் தீர்மானிக்கின்றனர். குறி? தமிழ்மக்களின் பிரச்சினையை முற்று முழுதுமான பயங்கரவதாப் பிரச்சினையாக சித்திரிக்க வைக்கும் குறி! அடக்கப்படும் உரிமைகளிற்காக கிளர்ந்தெழும் தமிழ்மக்களின் உரிமைப் பிரச்சினையை பயங்கரவாதமாக்கும் குறி! ஒட்டுமொத்த தமிழ் மக்களின் பயங்கரவாதிகளாக பிரகடனப்படுத்தி பயங்கரவாதத்திற்கு எதிரான யுத்தம் எனும் பெயரில் இன அழிப்பிற்கு அதிகாரம் அளிக்கும் குறி!

குமார் பொன்னம்பலம் தோன்றுகிறார். 'ரத்து இர' (சிவப்புக் கோடு) எனும் சுவர்னவாஹினி நிகழ்ச்சியில் தமிழ்மக்களின் பிரச்சினையைப் பற்றி கலந்துரையாடலை மேற்கொள்ள அழைக்கப்பட்டிருக்கிறார். கேள்விகள் கேட்கப்பட தொடங்கின்றன. குறி - தீர்மானிக்கப்பட்ட குறி நோக்கி கேள்வி வருகின்றது. புலிகளின் ஆயுதப் போராட்டம் பற்றி கேள்விகள் மழையாக பொழிகின்றன. தமிழ் மக்களின் அரசியல் பற்றி கிஞ்சித்தும் இல்லை.

சுலபம் புலிகளின் இன அழிப்பிற்குரிய செயல்களாக, வரை விலக்கணப்படுத்தப்பட்ட செயல்களைப்பற்றி, இன அழிப்பிற்குரிய அம்சங்களை கொண்ட செயல்களைப் பற்றிக் கேள்விகளைக் கேட்டால் அவர்களின் குறியை அடைவது சுலபம். தம்முடைய கொடூரமாக - பள்ளிச் சிறுவரைக் கூட விட்டு வைக்காமல் அழிக்கும் செயல்களைப் பற்றிய எந்தவிதமான ஒரு சலனமோ, வெட்கமோ இல்லாமல் - புலிகளின் படுகொலைகளைப் பற்றி மட்டுமே கேட்டபின் அக்குறியை அடைவது சுலபம். கேட்கின்றனர். தமிழ்மக்களின் பிரச்சினைப்பற்றி கலந்துரையாடலை மேற்கொள்ள அழைத்த சுவர்ணவாஹினி புலிகளின் பிரச்சிப்பற்றிய கேள்விகளை கேட்டு நிகழ்ச்சியை ஆரம்பித்து தொடர்கின்றனர். விளைவு நிகழ்ச்சி எந்நோக்கத்திற்காக வைக்கபட்டதோ அந்நோக்கத்திற்கு முழு எதிராக - தொடர்கிறது. வெளியிலிருந்து தொலைபேசி மூலம் கேள்விகளைக் கேட்பவர்களும், வேறுவழியின்றி அப்போக்கிலேயே அடித்துச் செல்லப்படுகின்றனர். இதற்கென்றே இப் போக்கையே விரும்புகின்ற ஏனைய இனவாதிகளும் தம் கேள்விகளை அடுக்குகின்றனர். குமாரை வேண்டும் என்றே உணர்ச்சி வசப்பட, கொதிப்படைய, அதன் மூலம் நிதானம் இழக்கவைக்க முயல்கின்றனர்.

தெரியும். இது இப்படித் தான் போகும் என்பது தெரியும். புரிந்து கொள்ள முடியாத தத்துவார்ந்தம் அல்ல இதன் பின்னால் இருப்பது. புரிதல் முடியும். இனவாதிகள் ஒருபோதும் தமிழ் மக்களின் பிரச்சினைப்பற்றி கதைக்க விரும்புவதில்லை. ஏனெனில், அதில் நூற்றுக்கு அதனைவிட அதிக வீதம் நியாயம் இருப்பது அவர்களிற்கும் தெரியும். ஆக, அதனை அவ்வழியில் கேட்காமல் அதே பெயரில் வேறுவழியில் திசைதிருப்பவே முயல்வர் என்பது தெரியும். சிங்கள இனவாதம் ஒரு போதுமே தமிழ் பிரச்சினையைத் தானாகக் கேட்கப் போவதில்லை. கேட்டதும் இல்லை.

தெரியாது. இது குமாரிற்கு தெரியாது போலும். ஏனெனில், அதற்குரிய எந்தவிதமான தயார்படுத்தலிற்கும் உள்ளாகமல் வந்திருந்தவர் போல் அவர் வந்திருந்தார். குமார் இவர்களின் இவ் கபட நாடக இயல்பை முன்பே உணர்ந்து புலிகள் சம்பந்தமான - இராணுவ ரீதீயான கேள்விற்கு எந்த விதமான பதிலும் தான் அளிக்க மாட்டேன் என கூறி இருக்கலாம். அவர் தவறிவிட்டார். நிகழ்ச்சி முடியும் தறுவாயில் தான் குமார் அதனை அவதானித்து, அவ்வாறு தான் புலிகள் தொடர்பான கேள்விக்கு பதில் அளிக்க முடியாது என்றார். ஆனால் நிகழ்ச்சியின் போக்கு அவரை மீறி போய்விட்டது. சிங்கள அரசியல் கட்சிகளை நம்பமுடியாது என்பவர் அவற்றின் ஊதுகுழலான சுவர்ணவாஹினி மட்டும் நேர்மையாக நடக்கும் என எப்படி நம்பினார்?

விளைவு? பேரிரைச்சல். குமார் சொல்லியது சரியா? தவறா? சட்ட வரம்பிற்குட்பட்டதா இல்லையா என இனவாதிகள் வரிந்து கட்டிக்கொண்டு பேரிரைச்சல் எழுப்புகின்றனர். தாம் பேரிரைச்சல் இட ஏதாவது - தமிழ் மக்கள் தொடர்பாக கிடைக்காதா என ஆவலுடன் இருக்கும் இனவாதிகளால் பேரிரைச்சல் இட ஆரம்பித்து விட்டனர். இவ் இரைச்சலில் அடிபடப் போவது மீண்டும் ஒரு முறை தமிழ் மக்களின் பிரச்சினை என்பது மட்டும் துயரமான உண்மை. அதைவிட - அவர்களிற்கு இந்நிகழ்ச்சியல்ல. கிடைக்க போவது எதுவும் இல்லை.

## சங்கரியாரின் வீரம் !

சங்கரியார் பேசுகிறார். தீவிரமாக விமர்சிக்கிறார். கோபம் கொப்பளிக்க வார்த்தைகள் தடுமாறி போக விமர்சிக்கிறார். இலங்கை வானொலியின் 'வாரம் ஒரு வல'த்தில், ஆதாரங்களை அள்ளி விசுகின்றார். ச்சா... மனுசர் நல்லாத்தான் விமர்சிக்கிறார். போங்கோ எதை?


வன்னியில் உள்ள அப்பாவி பொதுமக்களை சிறுவர், சிறுமியரை பட்டினி போட்டு உணவு தரமறுக்கும் அரசையா? செம்மணி புதைகுழியில் புதைந்து போனவர்கள் தம் மகனை, மகளை என அறியாது நடுராத்திரியிலும் கதறி விழும் அன்னையரின் கண்ணீரைத் துடைக்காத அம்மணின் செயல்களையா? சிவில் நிர்வாகம் என்ற போர்வையில் தமிழ் மக்களின் மீது பலவந்தமாக திணிக்கப்படும் இராணுவ நிர்வாகத்தையா? ஆயிரமாயிரம் ஆண்டுகளாக தமக்கென ஒரு தாயகத்தை கொண்டிருக்கும் தமிழ் மக்களை வந்தேறு குடிகள் என விமர்சனம் செய்த அரச தலைவியின் அகங்காரத்தையா?

இல்லை. இல்லவே இல்லை. இவற்றை விமர்சனம் செய்தால் சங்கரியாரிற்கும், அவரின் கூட்டணிக்கும் - காலில் விழுந்தே பழகிப்போன இக்கூட்டத்தினரிற்கும் போக்கிடம் ஏது? தமிழ் மக்களின் பிரதிநிதிகள் எனும் பெயரில் பாராளுமன்றம் போய் - அவர்களின் அழிவிற்கு கட்டளை இடும் அரசுகளை ஆதரவு கொடுத்தே காப்பாற்றி வரும் இவர்களிற்கு எங்கனம் இவ்வீரமும் தன்மானமும் வரும்? இன்றுவரை இவ் பேரினவாத பாராளுமன்றம் ஒன்றுமட்டுமே தமிழ் மக்களின் பிரச்சினையைத் தீர்க்கும் என பகல் கனவு காணும் கூட்டத்திற்கு எப்படி ரோசம் வரும்? வரவே வராது. அப்ப யாரை அப்படி விமர்சனம் செய்தார்?

அவர் விமர்சித்தது பத்திரிகைகளை தம் கட்சியின் வெட்கம் கெட்ட செயலை விமர்சிக்கும் தழிழ்ப் பத்திரிகைகளை குறிப்பாக தினமுரசையும், சரிநிகரையும். தினமுரசை விமர்சிக்கையில் அதனை ஈ.பி.டி.பியினரே நடத்துகின்றனர். அரசிற்கு பேராதரவு கொடுக்கும் கட்சியை சேர்ந்தவர் ஆசிரியராக இருந்துகொண்டு பத்திரிகையில் இரட்டை வேடம் இடுகிறார் என அவர் விமர்சிக்கவில்லை. ஏனெனில், அவரை விமர்சிக்கப் போனால் அதில் தன் முகமும் தெரிந்துவிடும் எனபதால், அப்பத்திரிகை பூலான்தேவியின் படத்தையும் டயனாவின் படத்தையும் அரை நிர்வாணமாக போடுகின்றார். அப்படி போட்டுவிட்டு எம்மை விமர்சிக்கிறா எனும் ரீதியிலேயே விமர்சித்தார். தினமுரசின் அரசியல் பற்றி பேச துணிவு இல்லாமல் அதன் வேறு அம்சங்களை விமர்சிக்கிறார் பாவம்.

சரிநிகர் பற்றி அவரிற்கு நிறையவே ஆத்திரம். சரிநிகர் அரசை கவிழ்க்குமாறு கூட்டணியினருக்கு அறிவுரை கூறுகிறதாம் எனும் ஆத்திரம். தம்மை "டு" விடும் சிறுவராக கூறியதில் ஏகப்பட்ட ஆத்திரம். சரிநிகர் என்ன கூறியது என்பது அவரிற்கு விளங்காமல் விடுவதில் ஆச்சரியம் இல்லை. வாசகர் அறிவர். ஆனால், சங்கரியார் பத்திரிகைகள் கூறும் தம்பற்றிய கருத்துக்களிற்கு பதில் கூறும் துணிவு இல்லாமல் அது வெளிநாட்டு நிதியில் இயங்குகிறதா. இல்லையா என்பதிலேயே கவனம் செலுத்துகிறார்.

சங்கரியார் பற்றி நாம் அறியாதல்ல அண்மையில் கூட அவர் தான் யார் என அழகாக வெளிக்காட்டினார். ஜனாதிபதி தமிழ் மக்களை வந்தேறு குடிகள் என்று சொன்ன பின்பும் அப்படி சொல்லவில்லை என கூறியவர் ஆயிற்றே இவர். அவரிடம் இருந்து நேர்மையான அரசியல் பிறக்குமென கனவு காணுவது மடத்தனம். இனவாத அரசுகளை எதிர்த்து நிற்பார் என எதிர்பார்ப்பதும் மடத்தனம். இவரிடம் நான் கேட்பதெல்லாம் நேரிடையாகவே, பகிரங்கமாகவே "நான் இனவாத அரசுகளிற்கு முண்டுகொடுத்து கொண்டு அவற்றின் இன அழிப்பிற்கு ஆதரவு கொடுத்து தான் என் அரசியலை செய்வேன்" என மக்கள் முன் கூற வேண்டும் என்பதே. ஆகக்குறைந்தது அதை செய்யும் வீரமாவது அவரிற்கு உண்டென நாம் பெருமைப்பட. □



## இனங்களுக்கிடையே நீதிக்கும் சமத்துவத்திற்குமான இயக்கம் (மோர்ஜ்)

1998 டிசெம்பர் 10 - மனித உரிமைகள் தினத்தை அனுட்டிக்கும் முகமாக பாடசாலைகளுக்கிடையில் ஒழுங்கு செய்யப்பட்ட மனித உரிமைகள் தொடர்பான வினா விடை போட்டி.

இன்று எமது நாடு முகம் கொடுக்கும் தேசியப் பிரச்சினைக்கு அடிப்படைக் காரணமாய் அமைந்துள்ளது மனித உரிமைகளை மதிக்காமையே என்பது தெளிவாகும். இந்த சவாலுக்கு முகம் கொடுப்பது தனது பொறுப்பென்பதை மோர்ஜ் நிறுவனம் ஏற்றுக் கொள்கின்றது.

எதிர்காலத்தில் இந்நாட்டின் பொறுப்புகளின் பங்காளர்களான மாணாக்-கர்களுக்கு மனித உரிமைகள் தொடர்பான அறிவூட்டல்களை பெற்றுக் கொடுப்பது சிறந்த ஒழுக்கமான சமூகமொன்றுக்கு வழிசமைப்பதாகவிருப்பதால் மோர்ஜ் நிறுவனம் இந்த நிகழ்ச்சித் திட்டத்தை மேற்கொள்ள விரும்பியது.

இந்த ஆண்டில் இந்த நிகழ்ச்சித் திட்டத்துக்கென வட- கிழக்கு, வட மத்தி மற்றும் சப்பிரகமுவ மாகாணங்களில் இருந்து ஆண்டு 11 தொடக்கம் 13 வரை கல்வி கற்கும் மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டனர். இந் நிகழ்ச்சித் திட்டம் மூன்று பிரிவுகளை கொண்டது.

1. மனித உரிமைகள் தொடர்பாக மாணவர்களை அறிவூட்டும் கருத்தரங்-குகளை நடாத்துதல் முதலாவது பிரிவாகுவதுடன் இந் நடவடிக்கை தற்போது பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.
2. மாணவர்களை இவ்வாறு அறிவூட்டிய பின் கருத்தரங்கின் பெறுபேற்றை அறிந்து கொள்ளும் முகமாக அம் மாணவர்களை எழுத்து மூலப் பரீட்சைக்கு 01-11-98 அன்று தோற்றச் செய்தல்.
3. இப் பரீட்சையில் முதல் இடத்தை பெறும் பாடசாலை மாணவர் குழு, மாகாண மட்ட வினா விடை போட்டிக்கு அனுப்பப்-படுவதுடன் இப் போட்டியில் வெற்றி பெறும் பாடசாலை மற்றும் மாணவர்களுக்கு பணப்பரிசு, சான்றிதழ் மற்றும் மனித உரிமைகள் தொடர்பான புத்தகங்கள் பரிசாக வழங்கப்படும்.

இந் நிகழ்ச்சித் திட்டத்தின் பிரதான நோக்கமாக அனைத்து பாடசாலைகளிலும் மனித உரிமைகள் அமைப்பொன்றை ஸ்தாபிப்பது மோர்ஜ் நிறுவனத்தின் பிரதான குறிக்கோளாகும்.

## சென்னன் எம்.பி கைது?

இ.தொ.காவின் உபதலைவரும் பதுளை மாவட்ட எம்.பியுமான சென்னன் அவர்களும் மாகாணசபை உறுப்பினரான வேலாயுதம் அவர்களும் விரைவில் கைது செய்யப்படவுள்ளதாக தெரிய வருகிறது.

கடந்த மாதம் பசறையில் நடைபெற்ற வேலை-நிறுத்தப்போராட்டத்தின் போது தோட்ட அதிகாரியின் பங்களா எரிக்கப்பட்ட சம்பவத்துடன் இவர்கள் இருவரும் தொடர்பு படுத்தப்பட்டுள்ளதாகவும் அதனடிப்படையில் இவர்கள் கைது செய்யப்படவுள்ளதாகவும் தெரிய-வருகிறது.

இவ்விடயம் தொடர்பாக இ.தொ.காவின் இன்னொரு பாராளுமன்ற உறுப்பினர் முத்து சிவலிங்கம் அவர்கள் நவம்பர் 25ம் திகதி பாராளுமன்றத்தில் சபாநாயகரிடம் கேள்வி ஒன்றை எழுப்பினார்.

இ.தொ.காவின் உப தலைவரும் பதுளை மாவட்ட எம் பியுமான சென்னன் பசறைத் தோட்ட விவகாரத்தில் சமரசம் செய்யப் போனவர். தற்போது இவரைக் கைது செய்ய சபாநாயகரின் உத்தரவு கோரப்பட்டுள்ளதாகத் தெரிய வந்துள்ளது. இது உண்மையா என அவர் வினவினார்.

இதே வேளை நவம்பர் 25ம் திகதி பதுளை மாவட்ட நீதிமன்றில் பசறை விவகாரம் தொடர்பாக 23பேர் தொடர்பான வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது அந்த 23 பேரையும் தொடர்ந்து தடுத்து வைக்க உத்தரவிட்ட நீதிவான் எம்.சி.பி.ஏ. மொறாயஸ் பசறைத் தோட்ட விவகாரம் தொடர் பாக மேலும் 38 பேரைக் கைது செய்து நீதிமன்றில் நிறுத்த உத்தர விட்டிருக்கிறார். இந்த 38 பேருக்குள் ஒரு பாராளுமன்ற உறுப்பின-ரும், ஒரு மாகாணசபை உறுப்பினரும் அடங்கியிருப்பதாகக் கூறப்படுகிறது.

அந்த பாராளுமன்ற உறுப்பினர் சென்னனா?

அந்த மாகாணசபை உறுப்பினர் வேலாயுதமா?

நன்றி - நூலகத்திட்டம்



# மட்டக்களப்பு: ஆட்டுக்கு மரக்கறி! நெருப்புக்கு ரின்மீன்!

மட்டக்களப்பு வாகரைப் பிரதேசம் கடந்த ஜுன் 22ம்திகதி புலிகளிடம் இருந்து இராணுவத்தினரால் 'மீட்கப்பட்ட' ஒரு பிரதேசமாகும். இப்பிரதேசம் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த வேளையில் புலிகளிடம் இருந்து மக்களை விடுவிக்கப் போகிறோம் என்ற போர்வையில் இப்பகுதி மக்கள் மீதான இராணுவத்தினரின் பொருளாதாரத் தடையும், ஏனைய நடவடிக்கையும் இம்மக்களைப் பட்டினிச் சாவிற்கு கொண்டு சென்றது.

ஒரு நாளைய உணவுக்காக வாகரையில் இருந்து ஒருநாள் கால்நடையாக பிரயாணம் செய்து வாழைச்சேனை, ஓட்டமாவடி பகுதிக்கு வந்து அங்கு பொருட்களை வேண்டிக் கொண்டு மறுநாள் அங்கிருந்து புறப்பட்டு வந்துதான் தங்களுடைய உணவுத் தேவைகளையோ, ஏனைய தேவைகளையோ நிறைவேற்ற வேண்டி இருந்தது.

இந்த நிலைமை வாகரையை இராணுவத்தினர் கைப்பற்றிய பின்னராவது மாறும் என்றிருந்தவர்களுக்கு மேலும் தலையிடியைத் தான் கொடுத்திருக்கிறது. "ஒரு நாள் சாப்பாட்டிற்கு இரண்டு நாள் பிரயாணம் செய்த மக்கள் தற்போது வயிற்றுச் சோற்றுக்கே இரண்டு நாள் பிரயாணம் செய்யவேண்டிய" தலைவிதியை எண்ணி வெதும்பிக் கொண்டிருக்கிறார்கள்.

வாகரை மத்திய இராணுவ முகாமைத் தாண்டி ஒரு நேரச் சாப்பாட்டிற்குச் சற்று அதிகமான உணவுப் பொருட்களைக் கொண்டு சென்ற மக்களுக்கு நடந்த அநியாயத்தை எண்ணி எண்ணி மக்கள் செய்வதறியாமல் திகைத்து நிற்கின்றார்கள். மூன்று மீன் டின்களை கொண்டுசென்ற ஒரு பெண்ணிடம் ஒன்றை மட்டும் கொடுத்துவிட்டு ஏனைய இரண்டையும் பறித்து மண்ணெண்ணெய் ஊற்றி எரித்திருக்கிறார்கள். இரண்டு நாளைக்குத் தேவையான மரக்கறி வேண்டிச் சென்ற பெண்ணிடம் ஒரு வேளைக்கு அளவான மரக்கறிகளைக் கொடுத்துவிட்டு மீதியை வீதியில் நின்ற ஆடுகளுக்கு இரையாக்கியிருக்கிறார்கள் இந்த மீட்பர்கள்.

இந்தப் பொருட்களை வேண்டுவதற்கு எவ்வளவு இரத்த வியர்வை சிந்தியிருப்பார்கள் என்பதை படையினர் அறிவார்களா? அல்லது மீன் டின்னை எரிக்கும் போதும், மரக்கறிகளை ஆடுகளுக்கு இரையாக்கியபோதும் இவர்கள் வடித்த இரத்தக் கண்ணீரைத் தான் இவர்கள் அறிவார்களா?

இவர்கள் இந்த மண்ணின் மக்களின் எந்த உணர்வுகளைத் தான் மதிக்கின்றார்கள். நாங்கள் எல்லோரும் புலிகளுக்குத் தான் உணவுப் பொருட்கள் கொண்டு செல்கின்றோம் என்று படையினர் தடை செய்கின்றார்கள். நாங்கள் உணவு கொண்டு போகவில்லை என்று புலிகள் பட்டினியால் சாகவில்லையே என்று இப்பகுதி மக்கள் கேட்கிறார்கள். வாகரைப் பிரதேசம் 16 கிராம சேவகர் பிரிவுகளைக் கொண்டதும் 4700 குடும்பங்களைக் கொண்டதுமான ஒரு பிரதேச செயலகப் பிரிவாகும்.

இதில் கண்டலடி, அம்பந்தனாவெளி, கும்பிவெட்டுவான், புச்சாங்கேணி, பால்சேனை, கதிரவெளி ஆகிய கிராமங்கள் இன்னமும் புலிகளின் கட்டுப்பாட்டிலேயே இருந்து வருகின்றது.

இப்பகுதி மக்களே மிகவும் மோசமாக இராணுவத்தினரால் இம்சிக்கப்படுகிறார்கள். இத்தனையும் இப்பகுதியில் நடக்கும் போது தேசிய துணைப்படை வீரர்கள் (ராசீக்குழு) இதைப் பார்த்து ரசித்துக் கொண்டிருப்பார்களாம்.

வாகரை இராணுவ முகாமைச்சுற்றி இரண்டு கிலோ மீற்றர் வரை மக்கள் இடம்பெயர்ந்து ஊரியம் கட்டு, தட்டுமுனை என்ற பகுதிகளில் தங்கியிருக்கின்றார்கள். இதில் கிட்டத்தட்ட 467 குடும்பங்கள் இடம் பெயர்ந்திருக்கிறார்கள்.

தங்களின் இராணுவ நடவடிக்கையினால் மக்கள் எவரும் இடம் பெயரவில்லை. எவருக்கும் எதுவித பாதிப்புமில்லை என்று இராணுவம் கூறுகின்ற கருத்தை எதிர்த்து இடம்பெயர்ந்த மக்கள் தொடர்பான தகவல்களை வெளியிடவும் அதிகாரிகள் பயப்படுகிறார்கள். முகாமுக்கு அருகிலே பாடசாலையும் இருப்பதால் மாணவர்களின் வரவு வீதமும் வீழ்ச்சியடைந்துள்ளதாக ஆசிரியர்கள் தெரிவிக்கின்றார்கள். 800க்கும் அதிகமான மாணவர்கள் கல்வி கற்றுவந்த வாகரை மகாவித்தியாலயத்தில் தற்போது 300க்கும் குறைவான மாணவர்களே வருகை தருகின்றனர். பாடசாலைக்கு மகனை அனுப்பாமல் வைத்திருக்கும் ஒரு தாய் சொல்கிறார். எனது மகன் பாடசாலைக்குச் செல்வது பாதுகாப்பு இல்லை. அவ்வாறில்லை என்றால் பாடசாலை முடியும் வரை நானும் அங்கு காத்திருக்க வேண்டும், இந்த நேரத்தில் அசம்பாவிதம் நடந்தால் எங்களுடைய உயிருக்கு எந்தவித உத்தரவாதமும் இல்லை. இதேவேளையில் நான் இங்கு வந்து நின்றுவிட்டால் வீட்டு வேலைகளைச் செய்ய முடியாது போய்விடும். இதற்காக வேண்டியே பிள்ளைகளைப் பாடசாலைக்கு அனுப்பப் பயப்படுகிறோம் என அந்த தாய் கூறினார்.

இதேவேளை முகாமுக்கு அண்மையில் இருந்து இடம் பெயர்ந்தவர்களின் வீடுகளில் உள்ள கதவு நிலைகள், ஓடுகள், கைமரங்கள் போன்ற பொருட்களை எல்லாம் இராணுவத்தினர் கழற்றி லொறிகளில் ஏற்றிக்கொண்டு நகர்ப்பகுதிக்கு கொண்டு வருகின்றார். எங்கு கொண்டு செல்கின்றார்கள் என்பது தான் இன்னமும் தெரியவில்லை. இதை யாரிடம் சொல்லி அழுவது என்று இம்மக்கள் அங்கலாய்க்கிறார்கள். வாகரையில் இருந்து பத்துகிலோ மீற்றர்களுக்கு அப்பாலே கதிரவெளி இருக்கின்றது. மக்கள் தங்களது உணவு முத்திரைக்கான சாமான்களைப் பெறுவதற்கும் வாகரை இராணுவ முகாமுக்கு வரவேண்டியிருக்கிறது. இப்பகுதிக்கான உணவு முத்திரை சாமான்களை இராணுவ முகாமுக்குள் வைத்தே வழங்க வேண்டும் என வாகரை இராணுவ முகாம் பொறுப்பதிகாரி உத்தரவிட்டிருக்கிறார். அதன் பிரகாரமே அவர்கள் முகாமுக்கு வந்து பொருட்களைப் பெறவேண்டியிருக்கிறது. மாங்கேணி, பனிச்சங்கேணி இராணுவத்தினர் இரவு வேளைகளில் அயலில் உள்ள வீடுகளுக்குச் சென்று பெண்களுக்கு தொந்தரவு கொடுத்து வருவதாகவும் தெரியவருகிறது.

1993ம் ஆண்டில் இருந்தே இப்பகுதிக்கு எதுவித மருத்துவ வசதிகளும் கிடைப்பதில்லை. வாரத்தில் இரு நாட்களுக்கு ஐ.சி.ஆர்.சியும், எம்.எஸ். எப்பும் நடமாடும் வைத்திய சேவையைச் செய்து வருகின்றனர். வாகரை அரசினர் வைத்தியசாலைக் கட்டிடம் விமானக் குண்டுவீச்சினால் தகர்க்கப்பட்டது. இப்பகுதி மக்களுக்கு திடீர் வருத்தங்கள் ஏற்பட்டால் வாழைச்சேனைக்கு கொண்டு வருவதென்றாலும் சைக்கிளிலோ, வண்டிலிலோ தான் கொண்டு வரவேண்டியிருக்கிறது. இந்த நிலையில் பிணத்தைத் தான் கொண்டு வரவேண்டிய நிலையும் ஏற்படும். அண்மையில் இரவு நேரத்தில் போக்குவரத்து வசதியில்லாமல் பிரசவத்தின் போது தெய்வானை (28) என்ற பெண்ணும், பாம்பு கடித்து காளிராஜா (32) என்பவரும் இறந்திருக்கின்றார்கள்.

வாகரைப் பிரதேசத்தின் பிரதான தொழில் மீன்பிடியாகும். இங்கு கிட்டத்தட்ட 2600 குடும்பங்கள் மீன் பிடியை நம்பிவாழ்கிறார்கள் தற்போது இரவில் மீன்பிடிக்கவும் தடை விதிக்கப்பப்பட்டிருக்கின்றது.

-சடாயு

# வவுனியா: காரணம் தெரியாக் கொலைகளும், கண்டு பிடிக்க முடியாப் படைகளும்!

-திரு

வவுனியா பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் சுப்பையா வீரசிங்கத்தின் மீது நடத்தப்பட்ட தாக்குதலானது, வவுனியா இராணுவ கட்டுப்பாட்டுப் பகுதிகளில் உள்ள சாதாரண மக்களின் பாதுகாப்புக் குறித்து பலதரப்பட்ட சந்தேகங்களையும், கேள்விகளையும் எழுப்பி உள்ளது.

விடுதலைப் புலிகளுடன் சம்பந்தப்பட்டவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் வகைதொகையின்றி இளைஞர்களும், வயதானவர்களும் பாதுகாப்புப் படையினரால் பலர் கைது செய்து விசாரணைக்கு உட்படுத்துகின்ற சம்பவங்கள் ஒரு பக்கம் நடந்து கொண்டிருக்க, இவ்வாறாக, பிரமுகர்கள் மீதான தாக்குதல்கள் சமூகத்தில் மலிந்திருப்பது ஏன் என்பது புரியாத புதிராகவே உள்ளது.

பயங்கரவாதிகள் என்றும், தமிழ் மக்களை அடக்கி ஒடுக்கி வைத்திருப்பவர்கள் என்றும் இலங்கை அரசாங்கத்தினால் வர்ணிக்கப்படுகின்ற புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் இவ்வாறான அத்துமீறிய சம்பவங்கள் இடம் பெறவில்லை.

ஆயினும், அரசபடைகள் எங்கும் நிறைந்துள்ள, சட்டமும் ஒழுங்கும் நிலைநாட்டப்பட்டிருக்க வேண்டிய பகுதிகளில் ஏன் இந்த மர்மச் செயல்கள் நடைபெறுகின்றன என்பது எவருக்குமே புரியாத ஒரு புதிராகவே உள்ளது.

புலிகளின் நடமாட்டங்கள், ஊடுருவல்கள் என்பவற்றைத் தடைசெய்வது வேறு.

இனந்தெரியாதோருடைய சட்டவிரோத நடவடிக்கைகளைத் தடுத்து நிறுத்துவது வேறு. இந்த இரண்டு விடயங்களையும், பாதுகாப்புப் படையினரும், அவர்களுக்கு ஆதரவாகவும், புலிகளுக்கு எதிராகவும் செயற்படுகின்றவர்கள் பொது மக்களின் நன்மைக்காக கவனத்திற் கொண்டு செயற்பட வேண்டும் என்றே மக்கள் எதிர்பார்க்கின்றார்கள்.

பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் வீரசிங்கம் போன்றவர்கள், பொதுமக்களுக்கான அத்தியாவசிய சேவைகளுடன் சம்பந்தப்பட்ட துறைகளில் சேவையாற்றி வருகின்றார்கள். அவ்வாறானவர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படுகின்ற நடவடிக்கைகள் ஒரு வகையில் பொது மக்களுக்கு எதிரானது என்று கருதுவதற்கும் இடம் உண்டு.

இனப்பிரச்சினை விவகாரத்திறகான ஆயுதப் போராட்டம் ஆரம்பமாவதற்கு முன்னர் வவுனியா பகுதியில் நிலவிய அரசியல் போட்டிகளின்போது கூட, எதிரிகள் தமது தாக்குதல்களைத் தொடுக்கும் போது, யாருக்கு எதிராக, என்ன காரணத்திற்காக என்பது தெரியக் கூடிய வகையிலேயே நடவடிக்கைகள் அமைந்திருக்கும். ஆனால், புலிகளுக்கு எதிராக அரசாங்கத்துடன் தமிழ்க் குழுக்கள் எல்லாமே ஒன்றிணைந்து செயற்படுகின்ற இந்தக் காலத்தில் மர்மமான நடவடிக்கைகள் யாரால், ஏன் மேற்கொள்ளப்படுகின்றன என்பது தெரியவில்லை.

கடந்த 1996 ஆம் ஆண்டு முதல், இத்தகைய மர்மத் தாக்குதல்களும், கொலைகளும் இடம்பெற்று வருகின்றன. அவற்றில் பல கொலைகள் புலிகளினால் மேற்கொள்ளப்பட்டதாக பொலிசாரும், பாதுகாப்புப் படையினரும் உறுதியாகத் தெரிவித்திருக்கின்றார்கள். ஆயினும் இக்கொலைகளின் மூலம் கொல்லப்பட்டு, அடையாளம் காணப்பட்ட பலர் ஏன் கொல்லப்பட்டார்கள் யாரால் கொல்லப்பட்டார்கள் என்பது இன்னும் மர்மமாகவே உள்ளது.

கொலைகள் நடைபெற்ற உடனேயே அவற்றைக் கண்டிக்கின்ற கண்டன அறிக்கைகள் அடுக்கடுக்காக வருவது வழக்கம். கொலைகளுக்குக் காரணமானவர்களைக் கண்டுபிடிக்க வேண்டும். அவர்கள் யாராக இருந்தாலும் தண்டிக்கப்பட வேண்டும். கண்டுபிடிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதுடன் அவ்வாறான செயல்கள் இனிமேல் நடைபெறாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். அதற்கு வேண்டிய ஒத்துழைப்பை நாம் வழங்குவோம் என்ற பொதுவான உத்தரவாதங்கள் அந்த அறிக்கைகளில் காணப்படும்.

ஆயினும் மர்மக்கொலைகள் நின்றபாடில்லை. அறிக்கைகளும் தொடர்ந்து வந்த வண்ணமே உள்ளன.

எதுவும் உருப்படியாக நடைபெற்று இந்தச் சம்பவங்கள் காரணமாக மக்கள் மத்தியில் ஏற்படுகின்ற பீதிக்கு முற்றுப் புள்ளி வைக்கப்படவும் இல்லை.

இந்த வரிசையில் இன்னுமொரு சம்பவமாகவே, பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் வீரசிங்கத்தின் மீதான கொலை முயற்சித் தாக்குதல் நடைபெற்றுள்ளது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு அவர், நெளுக்குளத்தில் உள்ள தமது வீட்டில் இரவு சாப்பிட்டுக் கொண்டிருந்த வேளையில் அவருடைய வீட்டிற்குச் சென்ற இனந்தெரியாத நபர்கள், தாங்கள் புலிகள் என்ற சந்தேகத்தின் பேரில் இரண்டு பேரைக் கைது செய்துள்ளதாகவும், அவர்களை வந்து அடையாளம் காட்ட வேண்டும் என்றும் அழைத்துள்ளார்கள்.

அதற்கு, தான் வெளியில் வரமுடியாது. அவர்களை தமது வீட்டிற்கு அழைத்து வருமாறு அவர் கூறியிருக்கின்றார். இதனையடுத்து, உடனடியாக, கைத்துப்பாக்கியுடன் இருந்த இன்னுமொரு நபர், வரச்சொன்னால் உனக்கு வரமுடியாதாடா என்று மரியாதைக் குறைவாகப் பேசி, துப்பாக்கியைக் காட்டி மிரட்டியுள்ளார். இதனால், வீட்டில் இருந்த அவருடைய குடும்பத்தினர் குழறி சத்தமிட்டுள்ளார்கள். சத்தம் போட்டால், கைக்குண்டு எறிவோம் என மிரட்டி வீட்டிலிருந்தவர்களை அறையொன்றினுள்ளே தள்ளிக் கதவைப் பூட்டியது மட்டுமல்லாமல், வீட்டின் வெளிக்கதவையும் பூட்டி, திறப்பைத் தம்முடன் எடுத்துச் சென்று விட்டார்களாம்.

—20

நன்றி - நூலகத்திட்டம்



# "சந்திரிகா சரியான திசையில் ஒரு படி முன்னே..!"

-நளின் டி சில்வா

தென்னாபிரிக்காவில் வைத்து ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்த 'வந்தேறு குடிகள்' கோட்பாட்டை நியாயமானதே என்று அடித்துக் கூறிவருகிறார் 'ஜாதிக சிந்தனய'வின் பிதாமகரும், பிரபல எழுத்தாளரும், 'இலட்சிய இனவாதி'யுமான நளின் டி சில்வா அவர்கள்.

நவ. 18ம் திகதிய ஐலன்ட் நாளிதழில் வெளியான அவரது கட்டுரை யின் முக்கிய பகுதிகள் ஜனாதிபதியின் தத்துவார்த்த பின்புலத்தை விளக்கும் ஒரு முக்கிய ஆவணமாகக் கருத முடியும் என்ற அடிப்படை யில் தமிழில் தரப்படுகிறது.

தமிழில்: தேவதாசன் தேவராஜ்

"அண்மையில் கதிர்காமர் தென்னாபிரிக்காவுக்கு மேற்கொண்ட விஜயம் பல பேரிடம் பல்வேறுபட்ட உணர்வலைகளைத் தோற்றுவித்துள்ளது. புலிகள் தமது தலைமைக் காரியாலயத்தை லண்டனில் இருந்து தென்னாபிரிக்காவிற்கு நகர்த்துவதற்கு சில காலமாக முயன்று வருகிறார்கள் என்பது தெரிந்ததே. அத்துடன் புலிகள் தென்னாபிரிக்காவில் தமது செயற்பாடுகளைத் தீவிரப்படுத்தியுள்ளதும், அங்குள்ள சில அமைப்புகளுடன் தொடர்புகளையும் ஏற்படுத்தி உள்ளார்கள் என்பதும், ஊரறிந்த இரகசியம். ஆபிரிக்க தேசிய காங்கிரசும், புலிகளுடன் நெருக்கமான தொடர்புகளைக் கொண்டிருந்ததுடன் நெல்சன் மண்டேலாவின் அரசாங்கம் பதவியேற்றதுடன் இதன் சில உறுப்பினர்களின் உதவியுடன் புலிகள் பல பயிற்சி முகாம்களையும் அங்கு நிறுவியுள்ளார்கள்.

"றொகான் குணவர்தன" என்பவரின் தகவலின்படி 1996ம் ஆண்டின் ஆரம்பகாலப் பகுதியில் கதிர்காமர் தென்னாபிரிக்காவிற்கு விஜயம் செய்த காலப்பகுதியில் 14 பேர் கொண்ட புலிகளின் தூதுக்குழுவினரும், மண்டேலாவை அவரது அலுவலகத்தில் சந்தித்திருந்தனர். ஆனால், கடந்த 97 ஒக்டோபரில் எடின்பேர்க் நகரில் நடைபெற்ற பொதுநலவாய நாடுகளின் தலைவர்களின் கூட்டத்திற்கு சென்றிருந்தபோது விடுக்கப்பட்ட சந்திரிகாவின் நேரடிவேண்டுகோளிற்கு இணங்க மண்டேலா அவர்கள் புலிகளின் பயிற்சி முகாம்கள் தொடர்பாக சில நடவடிக்கைகளை எடுத்திருந்தாராம். ஆனாலும், என்ன? எடுக்கப்பட்ட சிற்சில நடவடிக்கைகளும் படிப்படிப்படியாக கைவிடப்பட்டு விட்டன.

"மண்டேலா அவர்கள் பிள்ளையும் கிள்ளி தொட்டிலையும் ஆட்டி வருகிறாரா? அல்லது தென்னாபிரிக்காவில் வசிக்கும் பலமான 6,00,000 தமிழ்த்/ திராவிட சமூகத்தைத் திருப்திப்படுத்த விரும்புகிறாரா? அல்லது அவரும் பொதுவாகவும், குறிப்பாக புலிகளாலும் செய்யப்படும் தமிழ் இனவாதப் பிரச்சாரத்தால் கவரப்பட்டு இப்படி நடக்கின்றாரா?

றொகான் குணவர்தவின் கட்டுரைப்படி 1996 ஜூன் மாதத்தில் அவுஸ்திரேலியாவில் நடைபெற்ற "மனித உரிமைகள் மாநாடு" என்று அழைக்கப்படும் கூட்டத்தில் புலிகள் மண்டேலாவிடமிருந்து ஒரு சாதகமான செய்தியைப் பெற்றுக் கொண்டார்கள். ஆபிரிக்கத் தேசியக் காங்கிரசின் ஆலோசகர்களின் ஒருவரான கோர்பான் என்பவராலேயே இச்செய்தி வழங்கப்பட்டது. மேலும் றொகான் குணவர்தவின் கூற்றுப்படி கோர்டான் அவர்களின் சில நண்பர்கள் நம்புவது என்னவென்றாள் தென்னாபிரிக்காவில் முன்னாள் வெள்ளையின அடக்குமுறைக்கு எதிராக கறுப்பினத்தவர் போரிட்டது போலவே புலிகளும் கொழும்பு அரசாங்கத்திற்கெதிராகப் போராடுகிறார்கள் என்று ஏமாற்றப்பட்டு நம்ப வைக்கப்பட்டிருக்கிறார்கள். சில கல்விமான்கள் குறிப்பாக இந்திய தமிழ் வம்சாவழியினர் கூட எல்.ரி.ரீயின் போராட்டத்தை 'இன ஒதுக்கல்' என்னும் கண்ணாடி போட்டுப் பார்க்கின்றனர்.


"பிரிட்டிஷ்காரர்ரினால் தோற்றுவிக் கப்பட்ட தமிழ் இனவாதமானது மேற்குலகத்தினால் வளர்க்கப்பட்ட தேயன்றி பௌத்தர்களாலோ, இந்துக்களாலோ அல்ல. மாறாக, கிறிஸ்தவ மற்றும் கத்தோலிக்க திருச்சபையின் ஒரு பிரிவினரே தமிழ் இனவாதத்தின் பின்னால் செயற்படுகிறார்கள். ஆகவே அருட்திரு எஸ். ஜே. இம்மானுவேல் (முன்னாள் யாழ். ஆயர்) என்பவர் இன்று புலிப்பயங்கரவாதி களின் பிரச்சார வலையமைப்பில் ஒரு முக்கிய புள்ளியாக தென்னாபிரிக்காவில் செயற்படுகிறார் என்ற தகவலை றொகான் குணவர்தவின் கட்டுரையில் கண்ட போது அது எனக்கு ஆச்சரியமூட்டவில்லை.

"தமிழ் இனவாதிகள் மிகவும் வெற்றிகரமாகத் தமது பிரச்சாரத்தை நடத்தி வருகிறார்கள் என்பதை மறுக்க முடியாது. தென்னாபிரிக்க மக்கள் அங்கு நடைபெற்ற வெள்ளையினரின் இன ஒழிப்பையும், இங்கு நடைபெறும் பிரச்சினையையும் ஒன்றாகக் கருதுவார்களேயானால், அதற்கான முழுப்பொறுப்பையும் முன்னைய மற்றும் இன்றைய அரசாங்கங்களே ஏற்க வேண்டி வரும். எல்லா அரசாங்கங்களுமே உண்மையான நிலவரத்தை வெளியுலகிற்கு காட்டுவதற்குத் தவறி விட்டன"

"இவ்வாறான தவறுகள் தலைமைகளாலேயே உருவாக்கப்பட்டன. பெரும்பாலானோர் அதிகாரத்திற்கு வந்தபின் இத்தவறை விட்டதுடன், நாட்டு நலனில் அக்கறையற்றவர்களாகவும் மாறி விட்டனர். இவர்களுள் சிலருக்கு தமிழ் இனவாதத்தை எதிர்ப்பதற்குத் தடையாக இருப்பது அவர்கள் "சிங்கள இனவாதிகள்" என்று பெயரிடப்பட்டு விடுவோமே என்ற பயம் தான். உண்மையில் நடப்பது என்னவென்றால், தமிழ் இனவாதத்தையும் முஸ்லிம் இனவாதத்தையும் எதிர்ப்பவர்களெல்லாம் சிங்கள இனவாதிகள் என்று முத்திரை குத்தப்பட்டு விடுவது தான்.

உதாரணத்திற்கு இந்நாட்டில் ஒரு முஸ்லிம் அமைச்சரால் தனக்குக் கீழுள்ள அமைச்சிலுள்ள 450 வெற்றிடங்களுக்கு 425 முஸ்லிம்களை நியமிக்கும் போது இது இனவாதமில்லை. ஆனால், இதனை ஒருவர் தட்டிக் கேட்கும் போது மட்டும் அவர் சிங்கள இனவாதியாகச் சித்திரிக்கப்பட்டு விடுகிறார்.

"இங்குள்ள நிலைமையானது உண்மையில் சில இடங்களில் தென்னாபிரிக்காவின் முன்னைய நிலைமையை ஒத்திருந்தாலும் கூட தமிழ் இனவாதிகளின் பிரச்சாரம் போல் எதுவுமே இங்கில்லை. தென்னாபிரிக்காவிலே ஐரோப்பிய வெள்ளையர்கள் (வந்தேறு குடிகள்) ஆக்கிரமிப்பாளர்களாக உட்பிரவேசித்து ஆட்சியைக் கைப்பற்றி, தென்னாபிரிக்க மண்ணின் மைந்தர்களான கறுப்பினத்தவரை இராணுவ பலம்



கொண்டு இன அழிப்பு நடத்தினர் என்பது உண்மையாகும். சில சமயங்களில் இந்த ஆக்கிரமிப்பாளர்கள் இனப்படுகொலைகள் மூலம் "பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு" எத்தனித்தனர். இவ்வாறான சரித்திரத்தை வட அமெரிக்கா, அவுஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்து போன்ற நாடுகளிலும் காண்கிறோம்.

தமிழ் இனவாதிகள் உலகமெங்கும் செய்யும் இனவாதப் பிரச்சாரப்படி இலங்கையின் பூர்வீகக் குடிகள் தமிழரே என்றும், சிங்களவர் பின்னர் இங்கு ஆக்கிரமிப்பின் மூலமே உட்புகுந்தனர் என்றும், மேலும் அவர்கள் தமிழர்களை அடக்கி ஒடுக்கி அவர்களின் மேல் தமது ஆதிக்கத்தை நிறுவினர் என்றும் கூறப்பட்டு வருகிறது. ஆனாலும், கூட இக்கதைக்கு பல்வேறு வடிவங்கள், சோடிப்புகளுக்கிடையே ஒரு ஒற்றுமையைக் கூடக் காண முடியாது. சிலரின் (தமிழ் இனவாதிகளுள்) கருத்துப்படி இங்கு முன்னர் இரு இராச்சியங்கள் இருந்தனவென்றும், அவற்றில் ஒன்று தெற்கில் சிங்கள இராச்சியமும், வடக்கில் தமிழ் இராச்சியமும் ஆகும் என்றும், இவை தொடர்ந்து 2500 வருடங்களாக இருந்து வந்தன என்றும், கருதுகின்றனர். அவர்களின் கருத்தின்படி இறுதியாக வெள்ளைய ரால் ஆளப்பட்ட யாழ். இராச்சியமானது 1948ல் அவர்கள் விலகிச் செல்லும் போது, சிங்கள ஆட்சியாளர்களிடம் கையளிக்கப்பட்டது என்பதாகும்.

"அவர்களது புரட்டுக்கள் எப்படி இருப்பினும் தமிழ் இனவாதிகள் ஒன்றை மட்டும் ஏற்றுக்கொள்கிறார்கள் அதாவது தமிழர்கள் இன்று சிங்கள அரசொன்றினால் ஆளப்படுகின்றனர் என்பதாகும். அதேவேளை இன்னும் சில தமிழர்களின் கருத்துப்படி தமிழர்கள் இன்றைக்கும் கூட அடக்கி ஒடுக்கப்படுகின்றனர் என்றும், அவர்கள் ஒரு தனி நாட்டிற்கான மக்கள் பிரிவினர் என்றும், இந்நாட்டின் வடக்கு கிழக்கு மாகாணங்கள் அவர்களது பாரம்பரிய பிரதேசமென்றும், மேலும் தம்மைத் தாமே ஆள்வதற்கான உரிமையையும், கொண்டவர்களெனவும், நினைக்கின்றனர். ஆக மொத்தத்தில், எல்லாத் தமிழர்களும், பிற்காலத்தில் உட்புகுந்தவர்களான சிங்களவர்களால் அடக்கி ஒடுக்கப்படுகின்றனர் என்பதாகும்.

"அதேவேளை சில மென்போக்கு நடுநிலையாளர்களின் கருத்துப்படி இந்நாட்டின் பூர்வீகக்குடிகள் வேடுவ இனத்தவரேயன்றி சிங்களவரோ, தமிழர்களோ அல்ல என்பதாகும். இது ஒரு அப்பாவித் தனமான முகத்தைக் கொண்ட ஒரு சரித்திரமாகும். அதாவது 2500 ஆண்டுகால வரலாற்றையும், கலாசாரத்தையும் கொண்ட சிங்கள இனத்துக்கு சமமாக மற்றைய இனங்களை நிலை நிறுத்தி, சிங்கள இனத்துடன் தமக்கும் சமமான அந்தஸ்தைப் பெறும் ஒரு சூட்சுமமாகும்"

"முன்னைய, மற்றும் இன்றைய அரசாங்கங்கள் விட்ட தவறு என்னவென்றால், இலங்கை என்பது சிங்கள பௌத்த சரித்திரத்தையும், கலாசாரத்தையும் கொண்ட ஒரு சிங்கள பௌத்த நாடென்றும், இங்கு சிங்கள மக்களுடன் இன்னும் சில இனக்குழுக்கள் சம அந்தஸ்துடனும், இன அடையாளங்களுடன் வாழ்கின்றனர் என்பதை உலகிற்கு தெளிவாக எடுத்துக் கூறத் தவறியமையாகும்" இவர்கள் (அரசாங்கங்கள்) பிரச்சினையின் சரித்திரப் பின்னணியை சரியான முறையில் வெளிப் படுத்தத் தவறியதன் மூலம் தமிழ் இனவாதிகளின் கை ஓங்குவதற்கு வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுத்து விட்டார்கள்.

"அரசாங்கங்கள் நாட்டின் பால் தமது கடமையை செவ்வனே செய்திருந்தால் தமிழ் இனவாதத்தை வளர்க்கும் நாடுகள் தவிர்ந்த ஏனைய நாடுகளுக்கு உண்மை நிலை என்ன என்பதையும், தென்னாபிரிக்க இன ஒதுக்கல் கொள்கையுடன் அது எவ்வாறு வேறுபடுகிறது என்பதையும தமக்கென வரலாற்று ரீதியாக ஒரு தனித்துவமான கலாசாரத்தை வளர்த்துக்கொண்டுள்ள ஒரு இனத்தினை அதிகாரம் பண்ண எடுத்துள்ள முயற்சிகளே என்பதையும் இலகுவாக விளங்கிக் கொள்ள முடிந்திருக்கும்."

"கலாநிதி கார்த்திகேசு இந்திரபாலாவின் கூற்றுப்படி இந்நாட்டின் ஆரம்பகாலச் சரித்திரம் சிங்களம் ஆகும். தமிழ் இனவாதிகள் ஆர்வமுடன் மேற்கோள்காட்டும் பேராசிரியர் றணவீர, ஏ.எல்.எச். குணவர்தன போன்றோர் கூட சிங்கள மக்களின் சரித்திரத்தை மறுக்கவில்லை. பேராசிரியர் கே.என்.ஓ. தர்மதாசவின் கூற்றுப்படி தமிழ் இனவாதிகள் மிகவும் தந்திரமாக தமது வசதிக்கேற்றவாறு சிங்கள தேசக்கோட்பாடுடன் தாம் செய்த உடன்பாட்டை மறந்து விட்டதோடு, சிங்கள சரித்திரத்தில் தம்மையும் பதித்துக் கொள்ள முயன்று வருகின்றனர். இது உண்மையில் தமிழ் இனவாதிகள் சிங்கள மக்களுக்கு அவர்களின் சரித்திரத்தை மறைப்பதற்கு மேற்கொள்ளப்படும் முயற்சியாகும். இதிலிருந்து தமிழ் இனவாதிகளின் சிங்கள மக்களின் மீதான ஆதிக்கத்தையும், செல்வாக்குப் பிரயோகத்தையும் தெளிவாக அறிந்து கொள்ளலாம்.

சந்திரிகா அவர்கள் தென்னாபிரிக்காவில் இருந்த காலப்பகுதியில் புலிகளின் செயற்பாட்டாளர்களையும், அவர்களின் பிரச்சாரத்தையும் பற்றி நன்கு அறிந்திருப்பார். தமிழ் இனவாத பிரச்சாரத்தைத் தோற்கடிப் பதற்கான ஒரே வழி உண்மையை வெளிப்படுத்துவது தான். ஆகவே தான், ஜனாதிபதி தமிழர்கள் இந்நாட்டின் பூர்வீக மக்களல்ல, வந்தேறு குடிகளே என்ற உண்மையை தெரிவிப்பதற்கு தென்னாபிரிக்காவையே சிறந்த இடமாகத் தேர்ந்தெடுத்தார். இதில் துரதிருஷ்டவசமானது என்ன வென் றால், ஜனாதிபதியின் அரசாங்கத் திலுள்ள ஒருசிலராலேயே அவரின் மிகத் தெளிவானதும், தமிழ் இனவாத்திற்கெதிரானதுமான இப் பிரகடனம் மறுக்கப்பட்டதாகும். ஒரு சாராரின் இவ்வாறன போக்கானது மீண்டும் தமிழ் இனவாதம் தனது ஆதிக்கத்தை நிலை நிறுத்துவதற்கு உதவி விடுகிறது. ஏறக்குறைய நாடு இன்று தமிழ் மக்கள் பற்றி பேசமுடியாத அளவுக்கு முற்றுகைக்கு உள்ளா கியுள்ளது.

இவ்விடத்தில் மிகவும் எதிர் மறையான கருத்து என்னவென்றால், ஐ.தே.கவினதும், ரணில் விக்கிரமசிங்கவினதும், இச் சர்ச்சை சம்பந்தமான நிலைப் பாடாகும். மிகவும் சந்தர்ப்ப வாதியாக தொழிற்பட்டுள்ள அவர் எதிர்வரும் தேர்தலில் தமிழ் இனவாதிகளின் வாக்குகளைப் பெறும் நோக்குடன் இவ்வாறான ஒரு உண்மையை கூறியதற்காக அரசை பதவி விலகும்படி கேட்டிருக்கிறார். வேறு விதமாக கூறுவதாயின் ஐ.தே.கவானது தமிழ் இனவாதிகளை திருப்திப் படுத்துவதையே தனது நோக்காகக் கொண்டுள்ளது. இந்நாட்டில் தமிழர் அடக்கி ஒடுக்கப் படுகி றார்கள் என்றும், அவர்களுக்கு அநீதி இழைக்கப்படுகிறதென்றும், கூறுவது யார்?

தமிழ் இனவாதன பொய் பிரச்சாரத்திற்கு எதிராக யுத்தத்தில் இறங்க இன்னும் காலம் கடந்துவிடவில்லை. இந்நடிவடிக்கை துணிச்சலுடன் முன்னெடுக்கப்பட-வேண்டும். இத்திசையில் மிகச் சரியாகவே சந்திரிகா ஒருபடி முன்னே வைத்திருக்கிறார்.

□

நன்றி - நூலகத்திட்டம்



# அரசியல் அமைப்புச்சட்டத்தை மீறுகிறார் ஜனாதிபதி!



"அஹிம்சை முறையிலான போராட்டம், உங்கள் எதிரிகளும் உங்களைப் போன்றே விதிமுறைகளைக் கொண்டவர்களாக இருக்கும் போது மட்டுமே பயன்தரும். அமைதியான ஆர்ப்பாட்டங்கள் பலாத்காரத்தால் எதிர்கொள்ளப்படும் போது அப்போராட்டங்கள் பயனற்றுப் போய்விடுகின்றன. என்னைப் பொறுத்தவரை அஹிம்சை என்பது ஒரு ஒழுக்கநெறி சம்பந்தப்பட்ட கோட்பாடு அல்ல. அது ஒரு யுத்ததந்திரமே. பயனற்ற ஒரு யுத்த தந்திரத்தை வைத்திருப்பதில் எந்தச் சிறப்பும் இல்லை... நான் கட்சியின் கட்டுப்பாட்டை ஏற்றுக்கொண்டு அஹிம்சைக் கோட்பாடுகளை பகிரங்கமாக ஆதரித்துப் பேசியபோதும், எனது இதயத்தில் அஹிம்சை ஒரு தீர்வல்ல என்று தெரிந்தே இருந்தது."

- 1953ல் இளம் வழக்கறிஞராக தொழில் பார்த்தபடி கட்சிப் பணியில் ஈடுபட்டிருந்த நெல்சன் மண்டேலா. அப்போது இப்படித் தான் கருதினேன் என்று சுயசரிதையில் எழுதுகிறார்

இந்தக் கருத்தை அவர் மாற்றிக் கொண்டதற்கான ஆதாரங்கள் எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை.

ஆயுதம் ஏந்திய யுத்தத்தில் ஈடுபடும் ஒரு காரணமே ஒரு அரசியல் குழுவை பயங்கரவாதக் குழுவாகக் குறிப்பிடப் போதுமான காரணம் என்று சொல்ல முடியாது என்பது ஆரம்பத்திலிருந்து இன்று வரை அவரது கருத்தாக இருந்து வருகிறது.

ஆயினும், விடுதலைப் புலிகள் பயங்கரவாதிகள் என்றும், அவர்கள் அங்கு தமது அலுவலகத்தை வைத்து இயங்க விடக்கூடாது என்றும், தென்னாபிரிக்கா அரசாங்கம் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்ற அவதி நமது தலைவிக்கும், அவரது 'விசுவாசமிக்க' வெளிநாட்டமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமருக்கும்.

ஆத்துப்பதைத்து தென்னாபிரிக்காவுக்கு ஓடி புலிகளின் அலுவலகம் திறப்பது பற்றி யார் யாருடன் எல்லாம் பேசமுடியுமோ அவர்களிடம் எல்லாம் பேசிவிட்டு திரும்பியிருக்கிறார் கதிர்காமர்.

தாங்கள் வெளியிட்ட பத்திரிகை அறிக்கையில், தமது கோரிக்கைக்கு தென்னாபிரிக்க அரசாங்கம் செவிசாய்த்து, உடன் நடவடிக்கை எடுப்பதாக உறுதி அளித்து விட்டதாகவும் அவர் தெரிவித்திருந்தார்.

ஆனால், தென்னாபிரிக்காவில் அப்படி எந்த முக்கிய மாற்றங்களோ, முடிவுகளோ நடந்ததாகத் தெரியவில்லை. இலங்கையின் (ஆங்கிலப்) பத்திரிகைகள் மட்டும் அங்கே புலிகளைத் தடை செய்யும் சட்டம் உருவாக்கப்பட்டு வருவதாக கூறிவருகின்றன. புலிகளை சர்வதேச ரீதியாக இயங்க முடியாமல் செய்வதை தமது இலட்சியமாகக் கொண்டு செயற்பட்டு வரும் இலங்கை வெளிநாட்டமைச்சின் அறிக்கைகளையும், அவர்களை உச்சிகுளிர வைக்கும் செய்திகளையும் வெளியிடுவதில் இந்தப் பத்திரிகைகள் ஆர்வம் காட்டுகின்றன என்பது வெளிப்படை. உண்மைத் தகவல்களை வெளியிடுவதை விட தமக்கு விருப்பமான விதத்தில் கையும் காலும் வைத்து செய்திகளை வெளியிடும் ஆர்வம் அவர்களுக்கு.

ஒரு வேளை தென்னாபிரிக்கா புலிகள் அங்கு அலுவலகம் திறக்க அனுமதிக்க மறுத்தாலும் கூட, அது நிச்சயமாக இலங்கை அரசாங்கத்தின் வேண்டுகோளுக்காகவோ, அல்லது அது புலிகளை பயங்கரவாத இயக்கம் என்று இலங்கை அரசாங்கம கூறுவதற்காகவோ இருக்க முடியாது என்றே அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. ஆபிரிக்க தேசிய காங்கிரசுக்கோ அதன் தலைவர்களுக்கோ பயங்கரவாதம் பற்றிப் பள்ளிப்பாடம் நடாத்த யாரும் தேவையில்லை. அவர்களுக்கு அவர்களது சொந்த நாட்டு அனுபவங்களே போதும் அது என்ன என்று புரிந்துகொள்ள.

தென்னாபிரிக்க புலி அலுவலகம் தொடர்பாக எழுதும் போது, நமது ஜனாதிபதி அவர்களால் டேர்பன் நகரில் வைத்து தெரிவிக்கப்பட்ட புகழ்பெற்ற 'வந்தேறு குடிகள்' கருத்து ஞாபகத்துக்கு வராமல் இருக்க முடியாது. இந்த நாட்டின் சிறுபான்மையினரான, வந்தேறுகுடிகளான ஒரு பகுதியினர் தமக்கு தனிநாடு கேட்கிறார்கள் என்று அவர் அங்கு தெரிவித்திருந்தார். தென்னாபிரிக்காவை சிறுபான்மையினரான வெள்ளை இன வெறியர்கள் - அவர்கள் தென்னாபிரிக்காவின் வந்தேறு குடிகளே - ஆண்டு வந்தது பற்றிய அரசியல் பின்னணியில் உள்ள மக்களுக்கு இலங்கையின் இனப்பிரச்சினையை தெளிவாக விளங்கிக் கொள்ள வசதியாகவே அவர் அப்படிக் கூறினார் என்று வாதிடுகின்றனர் சிலர். இன்னும் சிலரோ அவர் இப்படிக் கூறியே இருக்கமாட்டார் என்று கூறுகின்றனர். ஆனால், இப்படிக் கூறுபவர்கள் அனைவரதும் முகத்தில் அடித்தாற் போல், தான் அங்கு கூறியது முற்றிலும் சரியானதே, ஆனால், அதை இன்னும் விளக்கமாகக் கூற முடியாமல் அந்தப் பேட்டியை எடுத்தவரால் நான் அவசரப்படுத்தப்பட்டு விட்டேன்" என்று தெரிவித்திருக்கிறார் ஜனாதிபதி.

என்ன இருந்தாலும் ஜனாதிபதி தென்னாபிரிக்காவில் உள்ள மக்களுக்கு விளங்கப்படுத்துவதற்காக. தமிழர்கள் இலங்கையை ஆள நினைக்கிறார்கள் என்று சொல்லவில்லை. தமிழர்களை இனவாதிகளாகவும், புலிகளை பயங்கரவாதிகளாகவும் தெளிவாக தென்னாபிரிக்க மக்களுக்கு விளக்க இது மிகவும் சிறந்த ஒரு ஒப்பீடாக இருந்திருக்கும். ஆனால், அவர் அப்படிச் சொல்லவில்லை. அவர்கள் தனிநாடு கேட்கிறார்கள் என்று மட்டும் தான் சொல்லியிருக்கிறார். அதற்காக அவரைப் பாராட்டலாம்.

ஜனாதிபதி அவர்களின் இந்தப்பேட்டி தொடர்பாக இங்கு பலத்த சர்ச்சை நடைபெற்றது. நளின் டி சில்வா போன்ற இனவாத சிந்தனையாளர்கள், ஜனாதிபதி பேசிய ஒரேயொரு உருப்படியான பேச்சு இது என்று கூறியதுடன் தமிழர்கள் வந்தேறுகுடிகள் தான் என்று வலியுறுத்தி தெரிவித்துமிருக்கிறார். சில தமிழ்க் கட்சிகள் மட்டும் இந்தப் பேச்சை வன்மையாகக் கண்டிப்பதாகத் தெரிவித்திருக்கின்றன.

இவர்கள் எல்லோருமே, வரலாற்றில் உள்ள ஆதாரம் பற்றிப் பேசினார்களே ஒழிய, இப்பேச்சின் நடைமுறை அரசியல் விளைவுகள் பற்றிப் பேசவில்லை.

ஆனால், அதைப் புரிந்து கொண்டது அமைச்சர் தொண்டமான் அவர்கள் மட்டுமே.

அவர் மட்டும்தான் முந்தி வந்தவர், பிந்தி வந்தவர் என்ற பிரச்சினை இனப்பிரச்சினைத் தீர்வுக்கு முக்கியமானதா என்று கேட்டிருந்தார்.

இன்று நடைமுறையில் இருக்கும் அரசியலைமைப்புச் சட்டம் இலங்கையின் பிரஜைகள், அவர்கள் பாரம்பரிய பிரஜைகளா அல்லது பதிவு செய்யப்பட்ட பிரஜைகளா என்ற அடிப்படையில் பாரபட்சம் காட்டப்படக்கூடாது என்று வலியுறுத்துகிறது. (அத்தியாயம் 5- சரத்து 26- பிரிவு3 ) ஆனால், நமது ஜனாதிபதி இந்த நாட்டிற்குப் பிந்தி வந்தவர்கள் என்ற காரணத்திற்காக (அது சரியோ, பிழையோ என்பதை வரலாற்றாளர்களை விவாதிக்க விட்டு விடுவோம்) அவர்களுக்கு நமது அரசியல் பிரச்சினைக்குத் தீர்வாக தனிநாடு கோரமுடியாது என்று கருதுகிறார். அரசியல் பிரச்சினைகட்கான தீர்வு ஒன்றிற்காக அஹிம்சை முறையிலான அனைத்துப் போராட்டங்களும் பயனற்றுப்போன ஒரு நிலையிலேயே, ஆயுதம் ஏந்திய போராட்டம் இங்கு பிறந்தது என்று ஆட்சிபீடத்தில் ஏறிய ஆரம்ப நாட்களில் அவரே குறிப்பிட்டதனை அவர் மறந்து விட்டார் போலும்.

ஜனாதிபதி அவர்களின் பேச்சில் உள்ளடங்கலாக இருக்கும் விடயங்கள் இரண்டு. ஒன்று வரலாற்றுத் திரிபு. வரலாற்றுத் திரிபு சிங்கள பேரினவாதிகள் கூறிவரும் வரலாற்றை அடிப்படையாகக் கொண்டது. மற்றையது பிந்தி வந்தவர்களது அரசியல் உரிமை தொடர்பானது.

பெருந்தோட்டங்களில் வேலைசெய்வதற்காகவென இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்டு நான்கு தலைமுறைக்கும் மேலாக வாழ்ந்து வரும் மலையக மக்களை நாடற்றவர்களாக்கியது இந்தச் சிந்தனைமுறை தான். அதன்படி தமிழ் மக்கள் இந்த நாட்டின் சிறுபான்மையினர், ஆகவே அவர்களுக்கு அரசியல் அதிகாரம் பற்றிப்பேச உரிமையில்லை. இரண்டாவதாக அவர்கள் வந்தேறு குடிகள். ஆகவே அவர்களுக்கு சிங்கள மக்களுக்குள்ள உரிமைகள் கிடையாது என்று அர்த்தம்.

> **இது தான் இன்றைய ஜனாதிபதியின் நிலைப்பாடு என்றால்,**
> **இந்த நிலைப்பாட்டில் நின்றபடி தான் தமிழ்மக்களின் பிரச்சினைக்குத் தீர்வுகாண்பது பற்றி அவர் கூறுகிறார் என்றால், பயங்கரவாதம் பற்றிய கோட்பாட்டை தென்னாபிரிக்கா மட்டுமல்ல, எந்த நாட்டு மக்களும் ஏற்றுக்கொள்ளப் போவதில்லை.**

இது தான் இன்றைய ஜனாதிபதியின் நிலைப்பாடு என்றால், இந்த நிலைப்பாட்டில் நின்றபடி தான் தமிழ்மக்களின் பிரச்சினைக்குத் தீர்வுகாண்பது பற்றி அவர் கூறுகிறார் என்றால், பயங்கரவாதம் பற்றிய கோட்பாட்டை தென்னாபிரிக்கா மட்டுமல்ல, எந்த நாட்டு மக்களும் ஏற்றுக்கொள்ளப் போவதில்லை.

ஆனாலும், அதை ஏற்றுக்கொள்ளவும் சிலர் இங்கு இருக்கிறார்கள்.

அமைச்சர் கதிர்காமர், த.வி.கூ. உபதலைவர் ஆனந்தசங்கரி மற்றும் சில தமிழ்க் கட்சிகள் மனித உரிமை பேசும் ஒரு சில ஜனநாயக வாதிகள் ஆகியோர்.

இவர்களுக்கு உண்மை முக்கியமல்ல. யாரோ ஒரு தமிழ் எழுத்தாளர் எழுதிய ஒரு வரி ஞாபகத்திற்கு வருகிறது.

"ஒரு உண்மை முக்கியமல்ல, நல்ல நம்பிக்கையைத் தகர்ப்பதைவிட."

ஆம், அவர்களது 'அம்மா' மீதான நம்பிக்கை முக்கியமானது. அவர்களின் ஆதார சுருதி அல்லவா அது!

அந்த நம்பிக்கை வாழ்க!

ரோசமழுப்பான்

## பெண்களின் அரசியற் பிரதிநிதித்துவம்:

# "கொள்கையளவில் ஏற்கும் கட்சிகள் நடைமுறையில்....?"



நேர்காணல் — என்.சரவணன்

அண்மையில் மும்பாய் பெண்ணான ரீட்டா முகத்துவாரம் காக்கைதீவில் பாலியல் வல்லுறவுக்குள்ளாக்கப்பட்டு பின்னர் கொலை செய்யப்பட்டமை நாடெங்கிலும் அதிர்ச்சியூட்டிய செய்தியாகப் பரவியதைத் தொடர்ந்து அது குறித்து தொடர்பூடகங்களில் முக்கியத்துவமளிக்கப்பட்ட செய்தியாக ஆனது அது. கடந்த 21ஆம் திகதியன்று கொழும்பு லிப்டன் வளைவில் வைத்து பெண்கள் அமைப்புகள் பல ஒன்று சேர்ந்து ஒரு ஆர்ப்பாட்டத்தை நடத்தியிருந்தது. இந்த ஆர்ப்பாட்டத்தை ஒழுங்கு செய்தது பெண்கள் தொடர்பூடகக் கூட்டமைப்பு(இவ்வமைப்பு பெண்ணுரிமைகளின் கண்காணிப்பு எனும் காலாண்டு கண்காணிப்பு அறிக்கையொன்றையும் கடந்த இரண்டு வருடங்களாக வெளியிட்டு வருகிறது.) எனும் நிறுவனமும் அரசு சார்பற்ற பெண்கள் அமைப்புகளின் கூட்டமைப்பு எனும் நிறுவனமும ஆகும்.

பெண்கள் தொடர்பூடகக் கூட்டமைப்பின் இயக்குனர்களில் ஒருவவரும், அரசு சார்பற்ற பெண்கள் அமைப்புகளின் கூட்டமைப்பின் முக்கியஸ்தருமான கலாநிதி சேப்பாலி கொட்டேகொட கொழும்பு பல்கலைக்கழகத்தில் பெண்ணியத்துறையின் விரிவுரையாளராக இருந்து வருபவர்.

1995இல் பீஜிங்கில் நடந்த நான்காவது உலகப் பெண்கள் மாநாட்டில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் செயற்திட்டங்கள் என்பவற்றை கண்காணிப்பதற்கான பணியையும் இவ்வமைப்பு மேற்கொண்டு வருகிறது. அதேவேளை அம் மாநாட்டில் எடுக்கப்பட்ட தீர்மானங்களில் இலங்கையில் உடனடியாக செயற்படுத்த வேண்டிய சிலவற்றைத் தெரிவு செய்து அவை தொடர்பான விழிப்பூட்டல் நடவடிக்கைகளில் ஈடுபட்டுவரும் இவ்வமைப்பை, தலைமையேற்று நடத்தும் சேப்பாலி கொட்டேகொடவுடன் அச்செயற்பாடுகள் குறித்து சரிநிகர் உரையாடியது.

**இலங்கைப் பெண்களின் அரச சார்பற்ற கூட்டமைப்பினால் தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் நிகழ்ச்சிகள் குறித்து கூறுங்களேன்.**

பீஜிங்கில் நான்காவது உலகப் பெண்கள் மாநாட்டில் தீர்மானிக்கப்பட்ட பீஜிங் செயற்திட்டத்தை நிறைவேற்றுவதாக பல நாடுகள் கையெழுத்திட்டன. அதில் இலங்கை அரசும் ஒன்று. அந்த வகையில் இலங்கையில் சமகால சூழலில் பெண்கள் முகம் கொடுத்து வருகின்ற பிரதான ஐந்து பிரச்சினைகளை மையப்படுத்தி அரசை நிர்ப்பந்திக்கின்ற அதேவேளை அவை குறித்து சமூகத்தில் விழிப்பூட்டுவதற்காக பிரச்சார நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகிறோம்.

இத்தலைப்புகளை தீர்மானிக்கின்ற போது எமது கூட்டமைப்பிலுள்ள பல்வேறு பிரதேசங்களையும், சமூகங்களையும் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற 35 அமைப்புகளினால் தேர்ந்தெடுக்கப்பட்ட விடயங்கள் குறித்தே நாங்கள் இந்த நடவடிக்கைகளை எடுத்து வருகிறோம்.

**இந்த வேலைத்திட்டத்தை எப்போது ஆரம்பித்தீர்கள்?**

இவ்வருடம் ஜனவரியிலிருந்து இதனைச் செய்து வருகிறோம். முதலாவது விடயமாக நாங்கள் தீர்மானமெடுப்பதிலும், அரசியலிலும் பெண்களின் பங்களிப்பு என்பதை தெரிவு செய்தோம். ஜனவரியில் மாகாண சபைத்தேர்தலுக்கான முயற்சிகள் செய்யப்பட்டு வந்த வேளை தான் நாங்கள் அதனைச் சரியான தருணமாக எண்ணி அதற்கான வேலைகளில் ஈடுபட்டோம். பொதுவாகவே அரசியற் கட்சிகளை நோக்கி நாங்கள் "எங்கே உங்கள் கட்சிகளில் பெண்களின் பங்களிப்பு, பிரதிநிதித்துவம்?" என்கின்ற கேள்விகளை எழுப்பி சவாலிட்டோம். பின்னர் அதனையும் தாண்டி உத்தியோகபூர்வமாக கட்சித் தலைமைகளைச் சந்தித்து இவை குறித்து உரையாட முடிவு செய்தோம். பிரதான கட்சிகளிலிருந்து இந்த பேச்சுவார்த்தையைத் தொடக்கினோம்.

**எந்தெந்தக் கட்சிகள்?**

ஐ.தே.க, ஸ்ரீ.ல.சு.க, மக்கள் ஐக்கிய முன்னணி, ஸ்ரீ லங்கா மக்கள் கட்சி என நாங்கள் தொடாந்து சந்தித்து வந்தோம். தமிழர் விடுதலைக் கூட்டணியோடு தொடர்பு கொண்ட போது, அவர்கள் இவ்விடயத்தில் தங்களுக்கு எந்த முரண்பாடுமில்லாமையால் இது குறித்த பேச்சுவார்த்தை அவசியமில்லையென்றும் அவை குறித்த கடிதங்களை அனுப்பி வைக்கும்படியும் கூறினர்.

இ.தொ.கா.வுடன் தொடர்பு கொண்ட போது அவர்கள் எமக்கு நேரம் ஒதுக்கித் தருவதில் பல மாதங்களாக பின்வாங்கிக் கொண்டே உள்ளனர். அவர்கள் எப்போதுமே பெண்களை தமது தேர்தல் வேட்பு மனுக்களில் போட்டு வந்திருப்பதாகவும், கட்சியிலும் பெண்கள் பலர் செயற்படுவதாகவும் தமக்கு இதில் எந்தவித பிரச்சினையும் இல்லையென்றும் கூறிக் கொண்டிருந்தனர். பல கட்சிகளுக்கு எங்கள் மீது சந்தேகங்களும் இருந்தன. இவர்களின் பின்னால் எந்தக் கட்சி இருக்கின்றது என்கின்ற தேடலும், கட்சிச் சாயம் பூசித் தட்டிக் கழிக்கவும் முயன்றனர். எனவே தான் நாங்கள் முதலில் தொடர்பு சாதனங்களுடன் இவை குறித்து விரிவாகப் பேசவென தொடர்பு-சாதனவியலாளர்களோடு கலந்துரையாடலொன்றைச் செய்தோம். அவர்களுக்கூடாக தொடர்ந்தும் பிரச்சாரங்களை மேற்கொண்டோம்.

இதன் போது தான், எமது கூட்டமைப்பில் அங்கம் வகிக்கின்ற நுவரெலியாவைச் சேர்ந்த "சிங்கள-தமிழ் கிராமிய பெண்கள் அமைப்பு" மாகாண சபைத் தேர்தலில் சுயாதீனமான "பெண்கள் குழு"வொன்றை களத்தில் இறக்கவிருப்பதாகவும் அதற்கு துணை புரியுமாறும் கோரினர். இதனைச் சாதகமாக ஆக்கிக் கொண்டு நாங்கள் அவர்களுக்கான பிரச்சாரத்தை நாடளாவிய ரீதியில் செய்து கொடுத்தோம். அவர்களின் தேர்தற் கொள்கைகளும் மிகவும் முன்னேற்றகரமானதாக இருந்தது.

இதன் போது திடீரென அரசு தேர்தலைப் பின்போட்டது. ஆரம்பத்தில் நாங்கள் எங்களின் நடவடிக்கைகளை, அரசியற் கட்சிகளை நோக்கியும் இரண்டாவதாக வேட்பாளர்கள், வாக்காளர்களை இலக்காகக் கொண்டும் செயற்படவிருந்தோம். வேட்பாளர்களை நோக்கி முதலில் பெண்களுக்கு மட்டும் வாக்கிடுங்கள் என்று கூறாமல் 'பெண்கள் பிரச்சினைகள் குறித்து அக்கறை காட்டிய, காட்டி வருகின்ற, வேட்பாளர்களுக்கு, கட்சிகளுக்கு மாத்திரம், வாக்கிடுங்கள் என்று கேட்டிருந்தோம்.

**நீங்கள் உரையாடிய கட்சிகள் எவ்வாறான பிரதிபலிப்புகளைச் செய்தன?**

அக்கட்சிகளில் பெரும்பாலானவை தங்களுக்கு பெண்களை அரசியலில் ஈடுபடுத்துவது குறித்த விடயத்தில் கொள்கையளவில் எந்த முரண்பாடுகளும் கிடையாதெனவும், பெண்கள் தான் முன்வருவதில்லையென்றும் கூறினர். அக்கட்சிகள் தங்கள் கட்சிகளில் பெண்கள் குறித்த அக்கறையின்மையே பெண்களின் முன்வராமைக்கான காரணம் என்பதை ஏற்றுக்கொள்ளவில்லை. வாய்ப்புகளை வழங்கக் கூடிய இடங்களில் கூட வழங்கப்படாமை குறித்து பல ஆதாரங்களுடன் நாங்கள் விளக்கினோம். அவர்களின் பொறுப்பின்மையை சுட்டிக் காட்டினோம். இன்று சகல துறைகளிலும் பெண்களின் ஈடுபாடு, பங்களிப்பு பெருகி வருகிறது என்பது உண்மை தான், ஆனால் அங்கெல்லாம் அவர்கள் தலைமை நிலைகளிலோ, அல்லது தீர்மானமெடுக்கின்ற அதிகாரம் வாய்ந்தவர்களாகவோ, இல்லை மாறாக வெறும் சுரண்டலுக்குள்ளாபவர்களாக மட்டுமே உள்ளனர்.

**ஏறத்தாழ ஒரு வருடகாலமாக மேற்கொள்ளப்பட்ட இச்செயற்திட்டத்தின் மூலம் என்ன விளைவுகளைப் பெற முடிந்தது?**

இவ்விடயங்கள் குறித்து தொடர்புசாதனங்கள், கட்சிகள், வெகுஜன அமைப்புகள், மற்றும் வெகுஜன மட்டத்தில் பேசுபொருளாக ஆக்க முடிந்திருக்கிறது. ஏற்கெனவே அவை பேசப்படவில்லை என்று கூறவரவில்லை. எமது செயற்பாடுகளின் வாயிலாக இவ்விடயங்களைத் துரிதப்படுத்தியும், பலப்படுத்தியும், உறுதிப்படுத்தியும் உள்ளன. இனி இவை குறித்து பூஜ்ஜியத்திலிருந்து தொடக்க வேண்டியதில்லை.

**இவற்றுக்கு காலவரையறை வைக்கவில்லையா?**

பெண்கள் பிரச்சினை குறித்த விடயங்கள் அனைத்திலும் தொடர்ந்து அக்கறை காட்டி வருகின்ற அதே நேரம் ஒவ்வொன்றுக்குமான முக்கியத்துவத்தை காலவ்ரையறைக்குட்படுத்தியே ஆக வேண்டியுள்ளது. அதன்படி இரண்டாவது நடவடிக்கையாக பெண்களுக்கெதிரான வன்முறைகளை எடுக்கவிருக்கின்றோம்.

**இவை குறித்த உங்களது முயற்சிகள் வெறும் பிரச்சாரங்களுடன் மட்டுப்பட்டுவிடுகின்றனவா?**

இல்லை, ஆனால் பிரச்சாரத்துக்கு முக்கியத்துவம் கொடுக்கின்றோம். ஏனெனில் விழிப்பூட்டல் செயற்பாட்டில் தொடர்பு சாதனங்களின் ஒத்துழைப்பு இன்றி எதனையும் செய்ய முடியாதவர்களாயுள்ளோம். மேலும் எங்களின் வலைப்பின்னலில் சம்பந்தப்பட்டுள்ள அமைப்புகள் அனைத்தும் அவ்வப் பிரதேங்களில், அந்தந்த சமூகங்களில் இவை குறித்த செயற்பாடுகளை வீச்சுடன் மேற்கொள்ள எமது இந்த வேலைத்திட்டங்கள் கைகொடுக்கின்றன.

**பீஜிங் செயற்திட்டத்திலிருந்த தேர்ந்தெடுக்கப்பட்ட அடுத்தடுத்த விடயங்கள் எவை?**

நவம்பர் 25ஆம் திகதி பெண்கள் மீதான வன்முறைகளுக்கு எதிரான சர்வதேச தினம். அது போல டிசம்பர் 10ஆம் திகதி சர்வதேச மனித உரிமைகள் தினம். தற்போது நாங்கள் கரிசனைக்கு எடுத்துக் கொண்டுள்ள விடயம் "பெண்களுக்கு எதிரான வன்முறைகள்" அடுத்தது "பெண்களின் உரிமைகளும் மனித உரிமைகளே!" என்பவை. எனவே தான் நவம்பர் 25 தொடக்கம் டிசம்பர் 10ஆம் திகதி வரையான காலப்பகுதியில் தொடர்ச்சியாக பெண்கள் மீதான வன்முறைகளை எதிர்த்து பல நிகழ்ச்சிகளை ஒழுங்கு செய்திருக்கிறோம். அதற்கு பத்திரிகைகள், தொலைக்காட்சி, வானொலி போன்ற அனைத்து ஊடகங்களையும் உயர்ந்த பட்சம் பயன்படுத்தி பெண்கள் மீதான வன்முறைகளை எதிர்த்தும், விழிப்பூட்டல் செயற்பாடுகளையும் செய்யவுள்ளோம். அவற்றைத் தவிர சுவரொட்டிகள், துண்டுப் பிரசுரங்கள், வீதிநாடகங்கள், மற்றும் இன்னும் பல கலை நிகழ்ச்சிகள், பொதுக் கூட்டம் என தொடர்ந்து இந்த நாட்களில் நடத்தவிருக்கிறோம்.

**இதற்கு அடுத்த தலைப்பாக எதனைத் தெரிவு செய்திருக்கிறீர்கள்?**

மார்ச் மாதத்திலிருந்து "பெண்களும் வேலையும்" என்கின்ற விடயத்தை முக்கிய கருப்பொருளாக எடுக்கவிருக்கின்றோம். இதன் போது ஊதியம் பெறுகின்ற வேலைக்கும், ஊதியம் பெறாமல் வீட்டு வேலைக்குள்ளாகும் பெண்களின் வேலைகளின் பெறுமதி குறித்து அக்கறை செலுத்தவிருக்கின்றோம். சமூகத்திலும், தீர்மானமெடுக்கின்ற அதிகாரமுள்ளவர்கள் மத்தியிலும், கொள்கைகளை நிர்ணயிப்பவர்கள் மத்தியிலும் வீட்டு வேலைகளும் "பெறுமதிக்குரிய வேலை"கள் தான் என்பது குறித்த கருத்தை உறுதி செய்யுமுகமாக பிரச்சாரங்களை செய்யவிருக்கின்றோம். இன்று எந்தப் புள்ளி விபரங்களிலும் பெண்களின் வீட்டு வேலைகள் கணிப்புக்குரிய ஒன்றாக இல்லை. சிங்கள-தமிழ் புதுவருட காலத்திலேயே இதனை மேற்கொள்ளவிருக்கின்றோம் ஏனெனில் அந்தக் காலத்தில் பெண்களின் வேலைகள் முக்கியத்துவமிக்கதாக அமைவதுண்டு. மேலும் அவற்றுக்கு பண்பாட்டு ரீதியான காரணிகளும் இதனுடன் இணைந்திருப்பதால் இவை குறித்து உரையாட இதுவே பொருத்தமான காலமாக அமையும்.

— 20



நன்றி - நூலகத்திட்டம்



# பசறை தொழிலாளர் போராட்டம்:

# ஓயாத அவலம்!

ஊவா மாகாண பதுளை மாவட்ட பசறை குரூப் வேலை நிறுத்தம் முடிவடைந்து நவம்பர் 4ம் திகதி 1998 முதல் தொழிலாளர்கள் மீண்டும் வேலைக்குத் திரும்பிவிட்டனர். இன்று சுமூகநிலை நிலவுவதாக ஒரு தோற்றம் தென்படுகிறது. ஆனால், யதார்த்தம் அத்தகையதாக இல்லை.

கிட்டத்தட்ட இரண்டு மாதங்களை எட்டிய வேலை நிறுத்தத்தினால், தொழிலாளர்கள் உண்மையில் கண்ட வெற்றி என்னவென்பது கேள்விக்குரியே! நிகழ்வுகளைச் சற்று மீட்டுப்பார்ப்போம். உண்மைகள் ஓரளவுக்கேனும் புலப்படுகிறதா எனப் பார்க்க.

பசறை குரூப் - எல்ல,கலபட, 98 ஏக்கர், 77 ஏக்கர், மீதும்பிட்டிய, தன்னக, கமேவல, பங்குத்தோட்டம், போல்கந்த, அமுனிவத்த ஆகிய பிரிவுகளை உள்ளடக்கியது. இத்தோட்டம் அப்புகஸ்தன்ன பெருந்தோட்ட நிறுவனத்தினால் நிர்வகிக்கப்படுகிறது.


இத்தோட்ட நிர்வாகி ரஞ்சித குணதிலக்க இனவாத போக்குடையவர் என்றே பொதுவாக சகல தரப்பு மக்களும் கருதுகிறார்கள். இவர் பல முன்னணி அரசியல்வாதிகளுக்கு நெருக்கமானவர் என்றே கருதப்படுகிறது. அதேபோன்று இவர் அப்புகஸ்தன்ன பெருந்தோட்ட நிறுவனத்தின் ஒரு முக்கிய புள்ளியாம். இவரது மனைவி ஒரு நீதிபதி.

குறிப்பிட்டவேலை நிறுத்த சம்பவம் நடைபெறுவதற்கு முன்னர் இடம்பெற்ற பல சம்பவங்களையும் இதனோடு மீட்டுப் பார்த்தால் இங்கு பொருத்தமுடையதாகும். குறிப்பிட்ட தோட்ட நிர்வாகி பசறை குரூப்பிற்கு வருவதற்கு முன்னர் ரொக்கத்தன்னைத் தோட்ட நிர்வாகியாக இருந்த வேளையிலும் இவரது அடாவடித்தனங்கள் காரணமாக தொழிலாளர்களுடன் மனஸ்தாபம் ஏற்பட்டது மட்டுமின்றி வேலை நிறுத்தத்திற்கும் முகங்கொடுக்க நேரிட்டதாம்.

இதே நிர்வாகி பசறை குரூப் தோட்டத்திற்கு வந்த பிறகு பௌத்த மத ஆலயம் அமைக்க செழிப்பான தேயிலைச் செடிகளைப் பிடுங்க இடம் கொடுத்துள்ளார். அதேபோன்று தோட்டத்தோடு எவ்வித தொடர்புமற்ற ஒருவருக்கு அரை ஏக்கர் நிலம் கொடுத்துள்ளார். ஆனால், பசறை தமிழ் மகா வித்தியாலயத்திற்கு விளையாட்டு மைதானம் அமைக்க ஒதுக்கப்பட்ட காணியை மட்டும், பல போராட்டங்கள் நடத்தியும் இன்னும் கொடுக்க மறுத்து வருகிறார். குறிப்பிட்ட வேலை நிறுத்தம் நடைபெறுவதற்கு முன்னர், குறிப்பிட்ட நிர்வாகி தோட்ட அதிகாரியாகப் பொறுப் பேற்ற பின்னர் அவரது கெடுபிடிகளுக்கும், இனவாதத்திற்கும் எதிராக 1-6 நாள் வரையான ஆறு வேலை நிறுத்தங்கள் இடம்பெற்றுள்ளன.

இத்தோட்டத்தின் 85வீதத்திற்கு மேலான தொழிலாளர்கள் தமிழர்கள். இவர்களுக்கு எதிராக ரஞ்சித் குணதிலக தொடர்ந்து பல இடையூறுகளை ஏற்படுத்திக் கொண்டே வந்தார். இனவாதப் போக்கு தொழிலாளர்களைப் படு மோசமாக நடத்த முயற்சித்தல், மொழி ரீதியான பல கெடுபிடிகள், என்று இவரது நடவடிக்கைகள் தொடர்ந்த வண்ணம் இருந்தன. ஆனால், தொழிலாளர்கள் சார்ந்த தொழிற் சங்கங்கள் திருப்திகரமான நடவடிக்கைகளை எடுத்ததில்லை. இந்நிலையிலேயே குறிப்பிட்ட சம்பவமும் நிகழ்ந்துள்ளது.

செப்டம்பர் 9 ஆம் திகதி சம்பள தினம். கலபட பிரிவில் தொழிலாளர்கள் சம்பளப் பணத்தைப் பெற்றுக் கொண்டிருந்த வேளையில், பிரிவு தொழிற்சங்க தலைவர் அந்தோனிசாமிக்கும், வெளிக்கள உத்தியோகஸ்தர்க்குமிடையே வாக்குவாதம் ஏற்பட்டு, பிறகு நிர்வாகியுடனும் ஏற்பட்டு வார்த்தைகள் பரிமாறப்பட்டன. இவ்வேளை நிர்வாகி குறிப்பிட்ட தலைவர், குழப்பம் விளைவிப்பதாகக் கூறி சம்பள தின பாதுகாப்புக்கு வந்திருந்த பொலிசாரிடம் ஒப்படைக்கவே, அவர் பசறை பொலிஸ் நிலையத்திற்கு கொண்டு செல்லப்பட்டுள்ளார். பிறகு நீதிமன்றத்திடம் தண்டம் விதிக்கப்பட்டு விடுதலையானார். தொழிலாளிக்கும், நிர்வாகிக்கும் வாக்குவாதம் ஏற்பட முக்கிய காரணமாக அமைந்த விடயம் என்னவெனில், தொழிலாளர்கள் பலருக்கு தாங்கள் வேலை செய்த நாட்களுடன் ஒப்பிடும்போது குறைவான நாட்களுக்கே சம்பளம் வழங்கப்பட்டிருந்தது. இதைக்கேட்கச் சென்ற வேளை நிர்வாகிக்கும் தொழிலாளிக்குமிடையில் தர்க்கம் ஏற்பட்டுள்ளது. இவ்விடயத்தில் பிரிவு வெளிக்கள உத்தியோகஸ்தர் (கணக்குப் பிள்ளை) நிர்வாகிக்கு சார்பாகவே நடந்துள்ளார்.



இதற்கிடையில் தொழிலாளர்கள் நீண்ட கால ஒடுக்குமுறைக்கு முடிவு கட்ட எண்ணினார்கள். அவர்களின் மீதான நீண்ட கால கெடுபிடிகளுக்கு எதிராக 18 அம்சக் கோரிக்கையை வலியுறுத்தி செப். 10ம் திகதி வேலை நிறுத்தப் போராட்டத்தில் குதித்தனர். இதில் முக்கியமானதொன்றாக பிரதான நிர்வாகி ரஞ்சித் குணதிலக்க மாற்றப்பட வேண்டும் என்பதும் ஒன்றாகும். செப். 11 ம்திகதி முதல் பசறை குரூப்பின் சகல பிரிவுகளுக்கும் வேலை நிறுத்தம் பரவியது.

வேலை நிறுத்தத்தின்போது பலமுறை பல வழிகளிலும் தொழிலாளர்கள் தொழிற் சங்கங்களின் துணையோடு தொழிலாளர் போராட்டத்தை முன்னெடுத்த போது சுற்று வட்டார கிராமவாசிகளும், (இவர்கள் சிங்களவர்கள்) பொலிசாரும், அரச யந்திரமும் நிர்வாகத்தின் பக்கம் சார்ந்து நின்றனர். ஒரு சில பச்சோந்தித் தொழிலாளர்கள் தோட்ட நிர்வாகிக்கு ஆலவட்டம் பிடித்தனர். கலபட பிரிவில் இரவு நேரங்களில் பல முறை லயன் வீடுகளுக்கு கல்லெறியப்பட்டன. தோட்டத்திற்கு வெளியில் சென்ற தொழிலாளர்கள் தாக்கப்பட்டனர். அல்லது பயமுறுத்தப்பட்டனர். வேலை நிறுத்த காலத்தில் தோட்ட நிர்வாகியின் இல்லத்திற்கும் கடை வீதிக்கும் தினமும் இரவு வேளைகளில் பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டது. ஆனால், தொழிலாளருக்கு எவ்வித பாதுகாப்பும் வழங்கப்படவில்லை.

பசறை குரூப் தொழிலாளர்கள் பெரிய, சிறிய என 16 தொழிற் சங்கங்களில் அங்கம் வகிக்கின்றனர். இதனிடையே போராட்ட களத்திலும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரசிற்கும், இலங்கைத் தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்திற்கும் (ஐக்கிய தேசியக் கட்சியின் தொழிற் சங்கம்) தமது பலத்தை நிரூபிப்பதில் பனிப்போர் நடந்துகொண்டிருந்தது. தொழிற்சங்கங்கள் ஒன்றிணைந்து போராட்டத்தை முன்னெடுப்பதாகக் கூறப்பட்ட போதிலும், சில நடவடிக்கைகள் ஏமாற்றம் தருவதாகவும் அமைந்திருந்தன. சில தொழிற்சங்கப் பிரமுகர்கள் இப்போராட்டத்தின் மூலம் தங்கள் சுய பிரபல்யம் தேட தீவிர முயற்சியில் இறங்கினர். அவ் வேளையில் தான் பதுளை பிரதேச தொழிலாளர்கள், ஒரு நாள் அடையாள வேலை நிறுத்தம் செய்தனர். இவ் அடையாள வேலை நிறுத்தத்தில் பங்கு கொள்ள வேண்டாமென இ.தொ.கா. தீவிர முயற்சிகள் மேற்கொண்டும் தொழிலாளர்கள் தொழிற்சங்க பேதங்களை மறந்து தொழிலாளர் வர்க்க ஒற்றுமையை முன் நிறுத்தி 59 ஆயிரம் தொழிலாளர்களில் 56 ஆயிரம் பேர் அடையாள வேலை நிறுத்தத்தில் பங்கு கொண்டு சந்தர்ப்பவாத தொழிற்சங்க போக்கிற்கு பலத்த பதிலடி கொடுத்தனர்.

இந்நிலையில் தான் 25 ஒக்டோபர் 1998 இரவு 9 மணிக்கும், 10 மணிக்கும் இடையில் மற்றுமோர் சம்பவம் இடம் பெற்றது. தோட்டத்தில் கலபட பிரிவுத் தொழிற்சங்க தலைவர் அந்தோனிசாமி கடைவீதிக்கு செல்லும் வேளையில் இனந்தெரியாதோரால் சுடப்பட்டுள்ளார். அதேவேளை ஒரு கும்பல் தொழிலாளர்களின் லயன் அறைகளை நோக்கி தொடர்ந்து கல்லெறிந்துள்ளது. தொழிலாளர்கள் கல்லெறிந்த கும்பலில் இருவரை மடக்கிப்பிடிக்க ஏனையோர் தப்பியோடியுள்ளனர். அவ்வேளையில் இரவு நேர துரை பங்களாவுக்கு பாதுகாப்பு அளிக்க பொலிசார் அவ்வழியே செல்ல அவர்களிடம் பிடிக்கப்பட்ட இருவரும் (பெரும்பான்மை இனத்தவர்) தொழிலாளர்களால் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். பொலிசார் அவ்விருவரையும் உடனடியாக அவ்விடத்திலேயே விடுதலை செய்துள்ளனர். (இவ்விருவரும் இன்றும் சுதந்திரமாக நடமாடிக்கொண்டு மறைமுகமாக பயமுறுத்தல்களில் ஈடுபட்டுள்ளதாக தொழிலாளர்கள் தெரிவிக்கின்றனர்.) சற்று நேரத்தில் அதிகாரியின் வீடு, அவரது வாகனம், பொலிஸ் ஜீப் என்பன தீ பற்றி எரிந்து முழுமையாக பாதிக்கப்பட்டுள்ளன. பொலிசார் ஜீப்பிலிருந்து இறங்கிய பின்னரே அது தீ பிடித்ததாகவும் கூறப்படுகின்றது. இவற்றைக் கண்ட/ கேட்ட தொழிலாளர்களில் ஒரு பிரிவினர் தொழிற்சாலை அருகே சென்று அதற்கு பாதுகாப்பு அளித்துள்ளனர்.

சம்பவ தினத்திற்கு மறுதினமான 26.10.98 அன்று மாலை 4 மணியளவில் 10 தொழிலாளர்களும், 27.10.98 மாலை 16 தொழிலாளர்களும் பதுளை பொலிசாரால் குறித்த தீ வைப்பு சம்பவத்துடன் தொடர்பு படுத்தி சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு பதுளை சிறையில் தொடர்ந்து தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

தடுத்து வைக்கப்பட்டுள்ள 26 பேரில் இனந்தெரியாதோரால் சுடப்பட்ட அந்தோனிசாமி மற்றும் நான்கு பெண்களும் அடங்குவர். மேலும் பொலிஸ் ஜீப்பும் சம்பவத்தில் எரிந்துள்ளதால் தொழிலார்களுக்கும் விடுதலை புலிகளுக்கும் தொடர்புண்டு என்று கூட ஒரு கதை சோடிக்கப்படுகிறது. இதேபோன்று மேலும் பலர் விசாரிக்கப்படவேண்டுமென்று பொலிசார் கூறுகிறார்கள். இதேவேளை தொழிலாளர்கள் வேறு விதமாக கருதுகிறார்கள். அதாவது போராட்டத்தை முறியடிக்க தோட்ட நிர்வாகியும், அயல் பெரும்பான்மை இனத்தவர்களும் நிர்வாக சார்பு தொழிலாளர்கள் பொலிசாரும் இணைந்து தீட்டிய திட்டத்தில் இந்த 26 தொழிலாளர்களும் பலிக்கடாக்களாக்கப்பட்டதாக துரையின் வீட்டு சாமான்கள் ஏலவே அப்புறப்படுத்தப்பட்டதாகவும், ஒரு தகவல் கூறுகிறது. ஆனால், இதிலும் கூட சில தொழிற்சங்கங்கள் பிழைப்பு நடத்த முனைகின்றன. ஒரு பிரதான தொழிற்சங்கத்தின் செயலாளர் அண்மையில் பசறையில் கூறினாராம். "தொழிலாளர்கள் அனைவரும் அவர்களுடன் இணைந்தால் 26 பேரின் விடுதலைக்கு உடன் நடவடிக்கை எடுப்பதாக."

எல்லாவற்றிற்கும் பின் (பதுளையில் 4 முறையும் கொழும்பில் 3 முறையும் பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றன. இவற்றில் பலவற்றில் தோட்ட நிர்வாகி பங்கு கொள்ளவில்லை.) தொழிற்சங்கங்களுக்கும், அப்புகஸ்தென்ன பெருந்தோட்ட நிறுவனத்திற்குமிடையில் ஏற்பட்ட ஒப்பந்தத்தை அடுத்து நவம்பர் 4ம்திகதி முதல் தொழிலாளர்கள் மீண்டும் வேலைக்குத் திரும்பினர். ஆனால், தொழிலாளர்களின் கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்டுள்ளதா என்பது கேள்விக்குரியதே! சகல கோரிக்கைகளும் நிறைவேற்றப்படும் என உறுதி கூறப்பட்டுள்ளது. பிரதான கோரிக்கையான தோட்ட அதிகாரி ரஞ்சித் குணதிலக மாற்றப்பட வேண்டும் என்ற கோரிக்கை எந்தளவில் நிறைவேற்றப்பட்டுள்ளதென்றால், நவம். 4 ம்திகதி முதல் பசறை குரூப் என்ற தோட்டம், இல்லாமல் ஆக்கப்பட்டுள்ளது. அதன் பிரிவுகளான எல்ல கலபட 96 ஏக்கர், 77 ஏக்கர், மீதும்பிட்டிய என்பன ஒப்டன் குரூப்புடன் இணைக்கப்பட்டுள்ளது. அதேபோன்று ஒப்டன். டெமேரியா, சோலன்ஸ், அடாவத்தை ஆகிய நான்கு பெருந்தோட்டங்கள் அடங்கிய பிராந்திய பிரிவிற்கு ரஞ்சித் குணதிலக்க நிறைவேற்று அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார். முன்னரிலும் பார்க்க பலத்த அதிகாரங்கள் தற்போது அவர் கைகளில். இவற்றிற்கு தொழிற்சங்கங்களும் துணை சென்று ஒப்பமிட்டிருப்பது தான் வேதனைக்குரியது.

தொழிலாளர்கள் அன்றாடம் பிரச்சினைகளுடன், பிழைப்பதற்காக தொழிலுக்கு செல்கின்றனர். அடக்குபவர்களின் கைகளில் மேலும், அதிகாரங்களும், வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டுள்ளன. முன்னாள் பசறை குரூப், தொழிற்சாலை தற்பொழுது மூடப்பட்டுள்ளது. அதிலுள்ள இயந்திர உபகரணங்கள் பல, நிர்வாகத்தினால் கழற்றப்பட்டுள்ளது. தொழில் அமைச்சின் வேண்டுகோளை அடுத்து மேலும் இயந்திர சாதனங்கள் கழற்றப்படுவது தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது. தொழிலாளர் போராட்டங்களின்போது முன்னணியில் நின்ற தொழிற்சங்க பிரமுகர்களால் ஒருவரான வேலாயுதம் (ஐக்கிய தேசியக் கட்சி, இ.தே.தோ.தொ.ச - உப செயலாளர்) வெளிநாடு செல்வது தடைசெய்யப்பட்டுள்ளது. சிறை சென்ற தொழிலாளர்கள் விடுதலைக்காகவும், நியாயத்திற்காகவும் தொடர்ந்து போராட வேண்டிய நிலை.

அதிகாரத்தரப்பு வெற்றி பெற்றுவிட்டதாக கருதுகிறது. ஆனால், தொழிலாளர்களோ தாங்கள், தொழிற்சங்கங்கள், நிர்வாகம், அரசியல்வாதிகள், அரசாங்கம் ஆகியோரால் சுய நலத்திற்காக ஏமாற்றப்பட்டு விட்டதாகக் கருதுகிறார்கள். இனவாத அரசாங்கங்களும், சுய நல தொழிற்சங்கவாதிகளும், மனித நேயமற்ற நிர்வாகங்களும், எல்லாவற்றிற்கும் மேலாக அரசியல்வாதிகளால் வழிநடத்தப்படுகின்ற தொழிற்சங்கங்களும் இருக்கும் வரையில் மலையகத்தில் மேலும் இவ்வாறான சம்பவங்கள் நிகழாது என யாராலும் உறுதி கூற முடியாது.

இடையன்

நன்றி - நூலகத்திட்டம்



# மணிரத்தினத்தின் சினிமாவும், அதன் அரசியலும்!

அ. இரவி

மணிரத்னத்தின் சினிமா தொடர்பாக எழுதுவதற்கு நான் 'ரோஜா' திரைப்படம் பார்த்த காலத்திலிருந்தே யோசித்து வந்தேன். பிறகு பம்பாய், இருவர் முதலான திரைப்படங்கள் பார்த்த போது, ஆழமாக எழுத தேவை இருப்பதாகவே உணர்ந்தேன். ஆனால், உயிரே திரைப்படம் பார்த்த போதும், யமுனா ராஜேந்திரன் எழுதிய மணிரத்தினத்தின் சினிமா எனும் புத்தகத்தை வாசித்த போதும், அவசரமாக மணிரத்தினத்தின் சினிமா பற்றி எழுத வேண்டும் என்று யோசித்தேன்.

உண்மையில் இவை பற்றி விரிவாக எழுத நிறைய உண்டு. எனினும், அதனை நிறுத்திக் கொண்டு, மணிரத்தினத்தின் சினிமாவிற்குள் நாம் புக வேண்டும்.

தமிழ்ச் சினிமாக்களில் குறிப்பிடக் கூடியவர்களா-கவும், அதேசமயம் அதிக மக்களைச் சென்ற-டைந்தவர்களாகவும், நாம் சிலரைக் குறிப்பிடலாம். பீம்சிங், எஸ். பாலச்சந்தர், ஸ்ரீதர், கோபாலச்சந்தர், பாரதிராஜா, மகேந்திரன், பாலுமகேந்திரா, பிறகு மணிரத்தினம். நெறியாளர்களை மாத்திரமே இங்கு குறிப்பிடுகின்றேன். இவர்களுள் மகேந்திரன், மணிரத்தினம் இருவரும் பல்வேறு விதத்திலும் தங்கள் தளங்களை விரிவு படுத்தியவர்கள்.

பொருள் மாத்திரமல்ல மணிரத்தினத்தின் சினிமாக்கள்! உள்ளொளிந்து சிறப்பான அர்த்தங்களை அவரது சினிமாக்கள் கொண்டுள்ளன. சங்ககால தமிழ் இலக்கியங்களில் உள்ளுறை உவமம், இறைச்சிப் பொருள் என்பன இருப்பன போல் மணிரத்தினத்தின் சினிமாக்களிலும் அவற்றைக் காணலாம். கமல்ஹாசனின் 'குணா'(நெறியாள் சந்தனபாரதி என்றாலும், கமல்ஹாசன் அத்திரைப்படத்தின் நெறியாளர் போல் தோன்றுகின்றார். இன்னுமொன்று கமல்ஹாசனின் சமீபகாலத் திரைப்படங்கள் அனைத்தும் கமல்ஹாசனின் நெறியாள்கையில் உருவாகின்றது என்பது என் அபிப்பிராயம். உதாரணம் தேவர் மகன்.

தோன்றுகின்றது. தமிழ் சினிமாக்களில் எவ்வளவோ அண்ணன் தங்கைப் பாசக் கதைகள் வந்து விட்டன. எனினும், பீம்சிங்கின் 'பாசமலர்' அண்ணன் தங்கைப் பாத்திர வார்ப்பை ஒன்றுமே மிஞ்சவில்லை. மகேந்திரனின் 'முள்ளும் மலரும்' ஓரளவுக்குத் தொட்டது. இதில் பீம்சிங்கிற்கு நிறைய உதாரணங்களைச் சொல்லலாம். பாரதிராஜாவும் ஓரளவுக்கு இதில் கவனம் செலுத்தினார். அதனை விரித்துக் கொண்டு போனால் மிக நீண்டு வீடம் கட்டுரை.





ஆழமாக எழுதுவதற்கான அவகாசம் கிடைக்குமோவும் தெரியவில்லை.

யமுனா ராஜேந்திரன் எழுதிய மணிரத்தினத்தின் சினிமா புத்தகத்தைத் தொட்டே இதனை எழுதுகிறேன். ஆனால், இந்தப் புத்தகம் தொடாதவேறு சில விசயங்களையும் குறிப்பிட வேண்டும். வசதிகருதி விரிவாக எழுதப்பட-வேண்டிய பல விசயங்களை மிகச் சுருக்கமாக-வேனும் தர முயல்கிறேன்.

1.

சினிமாவைச் சரியாகப் புரிந்து கொண்ட பலரைத் தமிழ் சினிமாக்களில் நாம் காணலாம். தமிழ்க் கலாசாரச் சூழலையும், அவர்கள் சரியாகப் புரிந்து கொண்டமையினால் அவர்களால் சமரசப் போக்கிலான சினிமாக்களையே எடுக்க, கொடுக்க முடிந்தது. நாம் எடுத்த எடுப்பிலேயே தமிழ்ச் சினிமாக்களை ஒரேயடியாகத் தூக்கி எறிந்துவிட முடியாது. அதேசமயம் மலையாள, சிங்களச் சினிமாக்களுடன் தமிழ்ச் சினிமாவை ஒப்பிடுவதும், ஓர் அபத்தமான கருத்து. ஒவ்வொரு சமூகச் சூழலையும், கலாசாரச் சூழலையும் நாம் புரிந்து கொள்ள வேண்டும். ஒரு கலாசாரச் சூழலிலிருந்தே எந்தக் கலைப் படைப்பும் வெளிவர வேண்டும்.

கலாசாரச் சூழலை ஏற்படுத்துவதில் நிறுவனங்கள் பெரும் ஆதிக்கம் செலுத்துகின்றன. அந்நிறுவனங்கள் மக்கள் மயப்பட்டவையாக இருந்தால், பாதிப்பு இல்லை. வியாபார நோக்கம் கொண்டவையா இருந்தால், அதன் பாதிப்பு சொல்லி முடியாது. உதாரணத்தைச் சொல்வோம். தமிழ்ச் சினிமாவின் இதுவரையான வரலாற்றில் 70களின் பிற்பகுதி, 80களின் முற்பகுதி, மிக முற்போக்கான பாய்ச்சலைக் கொண்டிருந்தது. குறிப்பிடும்படியான கலைஞர்களாக பாரதிராஜா, மகேந்திரன், பாலு மகேந்திரா தமிழ்ச் சினிமாக்களினால் வெளிப்பட்டனர். கலைத் தாகத்தில் தவித்துக் கொண்டிருந்த தமிழ்ச் சினிமா இரசிகர்களுக்கு இவர்கள் வரவு பெருவிருந்தாக அமைந்தது. அசாத்தியமான கலைஞர்களாக விளங்கிய இளையராஜா, (இசை) அசோக்குமார், நிவாஸ் (ஒளிப்பதிவு) முதலானோர் சூழ இவர்கள் பெரும் படையெடுப்பை நிகழ்த்தினர். இது ஏ.வி.எம்., பாலாஜி, முக்தா வியாபார நிறுவனங்களுக்கு பெரும் சவாலாக விளங்கியது. இந்த நிறுவனங்கள் இவர்களைத் தம்முள் விழுங்க முயற்சித்தது. அல்லது மிகப் பிரமாண்டமான தயாரிப்புக்களைக் கொடுத்து இவர்களை இல்லாமற் போகச் செய்தது. ஏ.வி.எம் நிறுவனம் அடுத்தடுத்து பிரமாண்டமான திரைப்படங்களை வெளியிட்டது. 'முரட்டுக்காளை'யில் தொடங்கி, 'சகலகலா வல்லவன்' என்று தொடர்ந்தது. ஒன்றைக் கவனியுங்கள். பாரதிராஜாவின் 'புதுமைப் பெண்' திரைப்படம் ஏ.வி.எம்மின் 'புதுமைப்பெண்' என்றே பெயர் சூட்டப்பட்டது. முதலாளித்துவ நிறுவனமான ஏ.வி.எம். கொம்யுனிச சார்புத் திரைப்படமான 'சிவப்பு மல்லி'யைத் தயாரித்தது. இப்படி நிகழ்ந்த அனர்த்தங்கள் அதிகம்.

2.

மணிரத்தினத்தின் கலை ஆளுமைபற்றிக் குறைத்து மதிப்பிட முடியவில்லை. தமிழ்ச் சினிமா வரலாற்றில் தவிர்க்க முடியாத சில திரைப்படங்கள் அவரிடம் இருக்கின்றன. மௌனராகம், நாயகன், ரோஜா, பம்பாய், இருவர். இவற்றைக் கட்டாயம் குறிப்பிட்டேயாக வேண்டும். சகல கலை ஆளுமைகளும் பயன்பட்ட ஒரு முழுமை இவரது சினிமாக்களில் தெரிகின்றன. நடிப்பு, இசை, ஒளிப்பதிவு, தொகுப்பு, இவை யாவும் இவரது சினிமாக்களில் முழுமை பெறுகின்றது. ஒளிச்சேர்க்கை (Lighting) கூட இவரது சினிமாக்களில் அற்புதமாக ஆக்கப்படுகின்றது. சினிமாவின் மனோ நிலை (Mood) ஒலிச்சேர்க்கையினூடாக வெளிப்-பட்டவிதத்தை இவரது சினிமாக்களிலிலேயே நாம் காண்கின்றோம். 'தளபதி' திரைப்படத்தில் மறைகின்ற சூரியனின் மஞ்சள் ஒளி வெள்ளம், திரை முழுவதையும் ஆக்கிரமித்திருக்கின்றதைக் காண்கின்றோம். சூரியனின் புதல்வனான கர்ணன் பற்றிய இதிகாசக் கதையை சமகாலப் படுத்தி, பாடற் தலைவனுக்கு சூர்யா என்ற பெயரையும் சூட்டியிருந்தார். அதனால் தான சூரியனின் மஞ்சள் ஒளி திரையில் தென்பட்டது. அவ்வாறே 'அஞ்சலி' திரைப்படம் மனநிலை குன்றிய சிறு பிள்ளையின் கதை. திரை பெரும்பாலும் இருள் மயமாக இருந்தது. இவ்வாறு 'உயிரே' திரைப்படம் வரைக்கும் ஒளிச்சேர்க்கையின் அற்புதத்தை நாம் காணலாம்.

வசனத்தை அதினமாக நம்பாது காட்சிகளையும், சட்டகங்களையும் (Frame) மாத்திரம் நம்புகின்ற தன்மை பாலுமகேந்திராவின் சினிமாக்களுப்பிறகு, மணிரத்தினத்தின் சினிமாக்களிலேயே காணமுடியும். இன்னும் சொல்லப்போனால் காட்சி அழுத்தமாகவும், ஆழமாகவும் மணிரத்தினத்தின் சினிமாக்களில் தோன்றும். சட்டகத்திற்குள் பாத்திரம் வருகின்ற முறைமையும் அர்த்தம் செறிந்த ஒன்றாக அமைந்திருக்கும். உதாரணம் இருவர் திரைப்படத்தில் பிரகாஷ்ராஜ் ( தமிழ்ச் செல்வன்) தண்டவாளத்தில் தலை வைத்துப் படுத்திருக்கிறார். அவரது இரண்டாவது மனைவியாக வர இருக்கின்ற தபு அந்தச் சட்டகத்திருள் வந்து விட்டு சிறிது நேரம் நின்று விட்டுப் போகின்றார். ஆழமான அர்த்தம் செறிந்த காட்சி அது. அதே திரைப்படத்தில், பாதிப்படைந்த இடமொன்றில் நிவாரணவேலைகள் நடைபெறுகின்றன. முதல்வர் (மோகன்லால்) அங்கு சென்று பார்வையிடுகின்றார். அந்த இடத்தில் ஒரு சட்டகத்திற்குள் ஐஸ்வர்ய ராய் (கல்பனா) வந்து செல்கின்றார். பின்னால் வரக்கூடிய பல விஷயங்களை அந்தக் காட்சி சொல்லிச் செல்கின்றது. தமிழ்ச் சினிமாக்களில் இப்படியான பல்வேறு அம்சங்களை மணிரத்தினத்தின் சினிமாக்களில் மாத்திரமே பார்க்கக் கூடியதாக உள்ளது.

மணிரத்தினத்தின் சினிமாக்களில் அனேகமானவை நேரான பார்வைக்கு உட்படுத்தக் கூடியவை அல்ல. மகேந்திரனின் திரைப்படங்களும் அப்பயானவை தான். அதனால் தான் இருவரினது திரைப்படங்களும் காலத்தை மீறியும் நின்று பிடிக்கின்றன. நேராக எமக்குக் கிடைக்கக் கூடிய

நெறியாளர் என்று சொல்லப்பட்ட பரதனுக்கும், கமல்ஹாசனுக்கும் இது தொடர்பாக பெரிதும் மனக்கசப்பு வந்தது.) திரைப்படம், திரைப்படப்பிரதி பலவீனப் பட்டிருந்ததால் பெரிதும் தோல்வியுற்றாலும், அத்திரைப்படம் தமிழ்ச் சினிமா வரலாற்றில் பல்வேறு அம்சங்களில் குறிப்பிடப்பட வேண்டியது அத்திரைப்படத்தில் கூற முற்பட்ட நேரான பார்வைக்கு உட்படுத்தமுடியாத அதன் மறைபொருள்கள் தந்த செழிப்பினால் என்பதாகும். மணிரத்தினத்தின் சினிமாக்கள் அத்தகையன.

மணிரத்தினத்தின் பாத்திரங்களுடைய பரிணாம வளர்ச்சி, மிகக் குறிப்பிடத்தக்க ஒன்று. பாத்திரங்களை விபரிப்பதிலும், வியாக்-கியானிப்பதிலும், மணிரத்தினம் ஒரு போதும் பின்நிற்கவில்லை. ஆரம்ப காலத்தில் பீம்சிங்கின் திரைப்படங்களிலும் அத்தகைய செறிவை நாம் பார்த்தோம். பீம்சிங்கின் திரைப்படங்கள் தந்த பாத்திரச் செறிவு, பின்னர் மகேந்திரனிடமிருந்தது. அதன் பின்னர் மணிரத்தினத்திடம் தான் இருக்கின்றது; ஜெயகாந்தனின் சினிமாக்களிலும் அதனை நாம் அவதானிக்கலாம். ஆயினும் ஜெயகாந்தனின் சினிமாக்கள் குறைவாக இருந்தமை ஒரு காரணம், இரண்டாவது ஜெயக்காந்தனின் நாவல்களே சினிமாவானமையினால், நாவலில் வரும் பாத்திரம் சினிமாவில் வருதல் சாத்தியம். மூன்றாவது ஜெயகாந்தனின் குறிப்பிடும்படியான சினிமாக்களான 'சில நேரங்களில் சில மனிதர்கள்', 'ஒரு நடிகை நாடகம் பார்க்கிறாள்' ஆகிய சினிமாக்களை பீம்சிங் அவர்களே இயக்கியிருக்கிறார்.

இப்போது யோசித்துப் பார்க்கிற போது பீம்சிங்கிடம் இருந்த பாத்திரவார்ப்பு, பின்னர் மகேந்திரனிடமிருந்தது தான். அதன் பிறகு மணிரத்தினத்திடமிருக்கிறது தான் என்றாலும் பீம்சிங் பாத்திர வார்ப்பில் பெற்ற வெற்றியினை மற்றவர்கள் தக்க வைத்துக்கொள்ளவில்லை என்றே

மணிரத்தினத்தின் இத்தகைய சிறப்பம்சங்களுக்கு அப்பால் எமக்குள் எழுகிறது பிறிதொரு விசயம். மணிரத்தினத்தின் அரசியல் சம்பந்தமானது அது. தமிழ்ச் சினிமாக்களில் முக்கியமான அரசியற் சம்பவங்களை (பம்பாய், உயிரே), அரசியற் பிரச்சினைகளை (ரோஜா), அரசியற் வரலாற்றை (இருவர்) தொட்ட திரைப்படங்கள் மணி-ரத்தினத்தினுடையவை. மணிரத்தினத்தின் சினிமா அரசியல் பற்றிச் சொல்லாமல் முழுமை பெற்று-விடமுடியாது. ஆனால், யமுனா ராஜேந்திரனின் புத்தகத்தில், 'மணிரத்தினத்தின் அரசியல்' பற்றி எந்த அதிகாரமும் எழுதப்படவில்லை. அதுதான் இங்கு உசத்தமாக உள்ளது. இந்தப் புத்தகத்தில் இடையிடை அரசியல் பேசப்பட்டுள்ளது. ஆனால், அது மணிரத்தினம் சார்பான அரசியல் தொடர்பான விமர்சனம் அல்ல. இதுவே இங்கு கேள்விக்குள்ளாகின்றது. எந்த ஒரு கருத்துக்கும் பின்னாலும் அரசியல் இருக்கிறது. அதனை ஏன் யமுனா ராஜேந்திரன் விளங்கிக் கொள்ளாமல் போனார்? அல்லது விளங்கிக் கொள்ளாமல் போனார்? அல்லது விளங்கிக் கொண்டு வேண்டுமென்று விட்டுவிட்டுப் போனாரா? இதுவே இந்தப் புத்தகத்தை வாசித்த முடித்த பின் எழுகிற கேள்வி.

(அடுத்த இதழில் முடியும்)



## எழுத்தாளர்களுக்கு ஒரு அறிவித்தல்:

இனி ,புத்தகம் வெளியிடும் எழுத்தாளர்கள் தமது வருமானம், செலவீனம், வங்கி நிலுவை, கடன் விபரங்கள், வட்டி விகிதம், வயது, குழந்தை குட்டிகள், மருந்துச் செலவு போன்ற உபயோககரமான விபரங்களை புத்தகத்தின் முதல் பக்கத்திலேயே கொட்டை எழுத்தில் கட்டாயமாக அச்சிட்டு விடுங்கள்! நடுவர்களுக்கு பரிசுக்குத் தேர்ந்தெடுக்க வசதியாக இருக்கும்!!




சுதந்திர இலக்கிய விழா (1995-1996)வை இழுத்தடித்து இழுத்தடித்து கடைசியில் ஒருவாறாக தமிழ்ச் சங்கத்தில் 'விபவி' தமிழ்ப்பிரிவு அதிகாரிகள் கீழ் பணிவன்புடன் நடுவர்கள் கூடி மேற்படி விழாவுக்குரிய பரிசு பெற்ற நூல்களை, கவிதைகளை, கதைகளை இன்னும் சரியாகச் சொல்வதானால் எழுத்தாளர்களை அறிவித்தார்கள். நடுவர்களையும், அதிகாரிகளையும் தவிர ஏனைய இலக்கிய அபிமானிகள் (அல்லது அனுதாபிகள்) ஒரு சிலரே கலந்து கொண்ட கூட்டம் அது!

மூதறிஞர் ராஜாஜி அவர்களுக்கு ஒரு காது மந்தமாம், கூட்டங்களின் போது பேச்சாளரின் பேச்சு அவருக்கு ருசிக்காவிடின், தனது மந்தமான காதை பேச்சாளரின் பக்கம் திருப்பி விட்டு நல்ல காதின் மீது உள்ளங்கையை அழுத்திச் சாய்ந்தவாறு வேறு சிந்தனைகளில் மூழ்கி விடுவாராம் அவர். ஆனால், பேச்சாளருக்கோ அல்லது பார்வையாளர்களுக்கோ ராஜாஜி பேச்சைக் காது கொடுத்து உன்னிப்பாகக் கேட்டுக் கொண்டிருப்பதாகத் தோன்றுமாம்.

அடியேனும் மேற்கூறிய உத்தியைக் கடைப்பிடிக்க வெகுவாக முயன்று தோற்றுப் போனேன். கூட்டம் மிகச் சிறிதாக இருந்தது ஒரு காரணம். 'வாய்விட்டுச் சிரித்தால் நோய் விட்டுப் போகும்' என்கிற பழமொழி மீதான நம்பிக்கை மற்றொரு காரணம்.

1996ம் ஆண்டில் வெளியான கவிதைத் தொகுப்புகளில் பரிசு பெற்ற கவிதைத் தொகுப்பு பற்றிய அறிவிப்பு முதலில் அரங்கேறியது. கவுண்டமணி - செந்தில் நகைச்சுவைக் காட்சி கெட்டது போங்கள். "அந்த மற்ற ஒண்ணு எங்கேடா?" என்று கவுண்டர் கதற, "அது தாண்ணே இது!" என்று செந்தில் விடாப்பிடியாகச் சாதிக்கும் காட்சி மீண்டும் மீண்டும் ஞாபகத்துக்கு வந்தது. கவுண்டரை விட குழம்பிப் போனேன் நான். அழாக்குறை!

என். ஆத்மாவின் 'மிக அதிகாலை நீல இருள்' என்னும் தொகுப்பிலுள்ள மூன்று கவிதைகள் மற்றைய கவிதைகளை விடச் சிறந்தவையாம். ஆனால், அப்புத்தகம் பரிசுக்குரியது அல்லவாம். அம்மூன்று கவிதைகளை மட்டும் பரிசுக்குரியவையாக அறிவிக்க வேண்டுமாம்! இது கவிதைத் தொகுப்புக்களைப் பரிசீலித்த நடுவர் ஒருவரின் தீர்ப்பு.

'ஒரு புத்தகத்திலுள்ள எல்லாப் படைப்புகளும் சிறந்தவையாக இருப்பதில்லை. எனவே 'மிக அதிகாலை நீல இருள்' முதலாவதாகத் தேர்ந்தெடுக்கப்படுகிறது என எல்லோருக்கும் விளங்கக் கூடியவாறு அறிவிக்கலாம் தானே' என மற்றையோர் கேட்டபோது, "அதெல்லாம் உங்களது முடிவு' எனது முடிவு அல்ல' என்று பிணங்கினார் நடுவர். எல்லோருக்கும் விளங்கி விட்டால் பிறகு நடுவரின் தனித்துவம் என்னாவது?

மற்றைய நடுவர் சிவசேகரத்தின் "போரின் முகங்கள்" பரிசுக்குரியதாக தன்னால் கருதப்படுகிறது என அதற்கான காரணங்கள் சிலவற்றுடன் அறிவித்தார்.

அதிகாரிகள் ஜனநாயக முறைப்படி, சமாதானமான சுலபமான வழியொன்றைக் கண்டுபிடித்தனர். ஆத்மாவின் மூன்று கவிதைகளையும், சிவசேகரத்தின் கவிதைத் தொகுப்பையும், பரிசுக்குரியவையாக அறிவித்தனர். நடுவர்கள் நான்கைந்து பேராக இருக்கவில்லையோ! தப்பித்தோமோ!! என அமைதி கண்டேன் நான்.

1996இன் புதிய கவிஞர்களுக்கான போட்டியின் முடிவுகள் அறிவிக்கப்பட்டபோது ஒரு விடயம் இப்போட்டியின் நடுவர்களுள் ஒருவரால் சுட்டிக்காட்டப்பட்டது. இறுதிப் பரிசீலனைக்காக வடித்தெடுக்கப்பட்ட பத்துக் கவிதைகளுள் ஒன்பதை எழுதியவர்கள் முஸ்லிம் கவிஞர்களே என்பது அது. இது மிக முக்கியமான அம்சம். நமது சமூகத்தில் ஓரிடத்தில் ஏற்பட்டுவரும் படைப்பு ஒன்றுக்கான அறிகுறி இது. முஸ்லிம்கள் அதிலும் இளைஞர்கள் ஏன் அதிகமாகக் கவிதை எழுத விரும்புகிறார்கள்?

1996இன் புதிய சிறுகதை எழுத்தாளர்களுக்கான போட்டியில் முடிவு விசித்திரமானது. ஒரு நடுவர் ஐந்து கதைகளை வரிசைப்படுத்திக் கொடுத்தார். மற்றையவர் இன்னுமொரு ஐந்தை வரிசைப்படுத்திக் கொடுத்தார். இரண்டு நிரல்களுக்குமிடையில் ஒருவிதமான தொடர்புகளும் இல்லை. ஒரு நடுவர் மூத்த எழுத்தாளர். மற்றையவர் நவீன எழுத்தாளராக அந்த மூத்த எழுத்தாளரால் கருதப்படுபவர். எழுத்தாளரான நடுவர் தன்னைப் புல்லரிக்க வைத்த கதையை சுருக்கமாகக் கூறி எம்மையெல்லாம் வெகுவாகச் சோதித்து விட்டார். அவ்வாறான கதைகளைத் தமிழ்த்திரைப்படத் தயாரிப்பாளர்கள் கூட இப்பொழுது ஏறெடுத்தும் பார்ப்பதில்லை. சிலவேளை மூத்த எழுத்தாளர் என்பதால் அந்தக் காலத் தமிழ்ப் படங்களையே இன்னமும் ரசிக்கிறாரோ என்னவோ?

விபவி நிதி நெருக்கடியில் உள்ளதாகக் கேள்விப்படுகிறேன். நிதி, திட்டமிடல், அமுலாக்கல் அதிகாரிகளுக்கு ஒரு ஆலோசனையை "ஓசி"யாக வழங்கலாம். மேற்கூறிய கதையைப் போல பல கதைகள் கடந்த சில ஆண்டுகளாக போட்டிக்கென அனுப்பப்பட்ட கதைகளுள் கட்டாயம் இருக்கும். அவற்றை இந்த நடுவரின் துணையுடன் தெரிந்தெடுத்து ஒரு தமிழ்ப்படக் கம்பனிக்கு விற்றுவிடுங்கள். அவர்களும் வாங்காவிட்டால் அதைரியப்படாதீர்கள். இருக்கவே இருக்கிறது தெலுங்குப் படவுலகு. முயற்சி செய்யுங்கள். வெற்றி நிச்சயம். இதே போல் பல விழாக்களை நடாத்திக் காட்டி ஜமாய்க்கலாம்!!

இந்தப் பிரச்சினையை அதிகாரிகள் சமாளித்த விதம் தான் விதந்து பாராட்டத்தக்கது. மூத்த எழுத்தாளர் தெரிந்தெடுத்த 'வசந்தி யூ ஆர் ரியலி கிரேட்" என்ற கதையையும், நவீன எழுத்தாளராக கருதப்படுபவர் தெரிந்தெடுத்த 'சீனட்டி நெல்' என்ற கதையையும் முதலாம் பரிசுக்குரியவையாக அறிவித்து. ஏனைய எட்டுக் கதைகளையும் ஆறுதல் பரிசுக்குரியவையாக அறிவித்தனர். அமரர் நெல்லை. க. பேரன் இன்றிருந்தால் அதைக்கேள்விப்பட்டு "பரிசுகள் பரவலாக்கப்படுகின்றன" என்று ஒரு கதை எழுதியிருப்பார்.

1996 இல் வெளியான சிறுகதைத் தொகுப்புக்கள் பற்றிப் பரிசீலித்த நடுவர்களுள் ஒருவர் தனது முடிவை அறிவிக்கும் போது 'இன்னார் ஏற்கெனவே பரிசு பெற்றுவிட்டார்... இன்னாருக்கு பரிசு பெற இன்னமும் வயது பற்றாது... இன்னார் பரிசு பெறாத காரணத்தினால் சோர்ந்து போய்விட்டார்" என்ற ரீதியில் தாங்கள் எழுத்தாளர்களை (நூல்களை அல்ல) அணுகிய விதம் பற்றி எங்களைப் போன்ற மரமண்டைகளுக்கு விளங்கப்படுத்தினார். இனி புத்தகம் வெளியிடும் எழுத்தாளர்கள் தமது வருமானம், செலவீனம், வங்கி நிலுவை, கடன் விபரங்கள், வட்டி விகிதம், வயது, குழந்தை குட்டிகள், மருந்துச் செலவு போன்ற உபயோககரமான விபரங்களை புத்தகத்தின் முதல் பக்கத்திலேயே கொட்டை எழுத்தில் கட்டாயமாக அச்சிட்டு விடுங்கள்! நடுவர்களுக்கு வசதியாக இருக்கும்!!

இதன்படி இம்முறை பரிசு பெற்றவர் மு. பொன்னம்பலம் என்ற எழுத்தாளர்.

போன வருடம் இவ்வாறான கூட்டத்தில் 1995 இல் வெளியான சிறுகதைத் தொகுப்புக்கள் பற்றிய விடயத்தில் பெரும் குழப்பம் ஏற்பட்டு விட்டதாம். 'அரச சாகித்திய விழாவில் முதலாம் பரிசுக்குரியதாக அறிவிக்கப்பட்ட எனது புத்தகத்தை இவர்கள் எப்படி ஏழாம் இடத்துக்குத் தள்ளலாம்' என ஒரு எழுத்தாளர் வந்து கூட்டத்தில் குழப்படி பண்ணினாராம். அதிகாரிகள் உடனே தமது வீட்டோ அதிகாரத்தைப் பயன் படுத்தி நடுவர்களின் அறிக்கையை வாசிக்க விடாது தடுத்து விட்டார்களாம். பிறகு வேறு நடுவர்களை நியமித்து அதே புத்தகங்களை பரிசீலித்து இம்முறை முடிவை அறிவித்தார்கள். ஏழாம் இடத்தில் இருந்த புத்தகம் எட்டாம் இடத்துக்குப் போய்விட்டது. ஆனாலும், இம்முறை நடுவர்களின் முடிவு ஏற்றுக் கொள்ளப்பட்டது. முதலாம் இடமும் மாறிவிட்டது. 'நள்ளிரவு பயணிகள்' சென்ற ஆண்டின் நடுவர்களால் அறிவிக்கப்பட்டது. இம்முறை 'பித்தன் கதைகள் அறிவிக்கப்பட்டது. எனவே ஏனைய முடிவுகளைப் போல் இரண்டுக்கும் பரிசு கிடைக்கும் என என்னைப் போன்ற அப்பாவிகள் எதிர்பார்த்தோம். ஆனால், அதிகாரிகள் என்றால் சும்மாவா? தங்களது அதிகாரத்தை ஓரிடத்திலாவது காட்ட வேண்டாமா 'பித்தன் கதைகள்' மட்டும் பரிசு பெறுகிறதாம்!!

'இது நடுவர்களை அவமதிக்கும் செயலல்லவா' என பலரும் சுட்டிக்காட்டியும் பலன் இல்லை. அது ஒரு புறமிருக்க அம்முறை நடுவர்களாகப் பணியாற்றியவர்கள் சென்ற முறை நடந்த தகிடுதத்தங்களை கேள்விப் படவில்லையா? அதிகாரிகளுள் ஒருவர், பிரச்சினை அவர்களுக்கும் அறிவிக்கப்பட்டது எனக் கூறியது உண்மையா? அப்படியானால், இம்முறை நடுவர்களாகப் பணியாற்றியவர்கள் நடந்து கொண்டவிதம் சரியா?

## பரிசுகள் பலவிதம்! ஒவ்வொன்றும் ஒரு விதம்!


அவர்கள் ஆட்சேபித்திருக்க வேண்டாமா? முந்தைய முடிவையே ஏற்றுக் கொள்ள வேண்டும் என அவர்கள் கூற வேண்டாமா? சென்ற வருடம் நடுவராகப் பணியாற்றிய ஒருவருக்கும் இம்முறை பரிசு அறிவிக்கப்பட்டுள்ளது. அவர் என்ன செய்யப் போகிறார்?

எனக்குப் பல விடயங்கள் புரியவில்லை. ஒரே சிதம்பர சக்கரம் போங்கள்!

ஆனால், ஒன்று மட்டும் புரிகிறது. சுதந்திர இலக்கிய விழா சுதந்திரமாக நடைபெறுகிற ஒன்று என இனி யாரும் கருத முடியாது. பத்தோடு பதினொன்று! அத்தோடு இது ஒன்று!!

நன்றி - நூலகத்திட்டம்





விடுதலைப் புலிகளால் கடத்தப்பட்ட பயணிகள் கப்பலான ஐரிஸ் மோனா மற்றும் மிஷன் ஆகிய கப்பல்களைச் சார்ந்த கப்டன் மற்றும் அவற்றின் சிப்பந்திகள் சிலருமாக அண்மையில் புலிகளால் விடுவிக்கப்பட்டமை தெரிந்ததே. விடுவிக்கப்பட்டவர்களிடமிருந்து புலிகளை மோசமாக சித்திரிக்க வென்றே பல சிங்களப் பத்திரிகைகள் செய்திகளை வெளியிட்டிருந்தன. விடுவிக்கப்பட்ட அடுத்த நாள் வெளிவந்த சிங்கள, தமிழ், ஆங்கிலப் பத்திரிகைகளைப் பார்த்தாலே போதும் தென்னிலங்கையில் இனத்துவ சிந்தனைகளின் துருவ மயம் கட்டமைக்கப்பட்டிருக் கின்றன என்பது. புலிகளை மோசமான காட்டு மிராண்டிகளாக சித்திரிப்பதில் காட்டிய ஆரவாரங்களில், விடுவிக்கப்பட்டவர்கள் கொண்டு வந்த முக்கியமான செய்தி, லட்சியம் செய்யப்படாமல் போய்விட்டது. விடுவிக்கப்பட்டவர்களில் ஒருவரான ஐரிஸ் மோனா கப்பல் கப்டன் லொயல் பெர்ணாண்டோ சமாதான பேச்சுவார்த்தைக்கான புலிகளின் தரப்பில் அறிவிக்கப்பட்ட சமிக்ஞை இது என்று லங்காதீபவில் வெளியான செய்தி மறு தினங்களில், சிறிய முக்கியத்துவமற்ற செய்தியாக பிரசுரிக்கப்பட்டிருந்தது. ஆனாலும், அது தான் எமக்கு முக்கியமான செய்தியாக ஆகியது. உடனேயே லொயல் பெர்ணாண்டோவை சந்திப்பதற்கு முயற்சி செய்தோம். அவரது விலாசத்தை தரக்கூட சில சிங்களப் பத்திரிகைகள் உடன்படவில்லை. இறுதியில் அவருக்கு விருதொன்றை வழங்க முன்வந்துள்ள ஒரு அமைப்பாக இனங்காட்டிக் கொண்டு அவரது விலாசத்தை ஒரு சிங்கள நண்பருக்கூடாக பெற்றுக் கொண்டோம். லொயல் பெண்ணாண்டோ 22 வருடங்களாக கடற்படையில் சேவையாற்றி பின்னர் ஓய்வு பெற்றவர். பின்னர் தனியார் போக்குவரத்துக் கப்பலில் கப்டனாக பணியாற்றி வந்தவர்.

மூன்று வருடங்களும் மூன்று மாதங்களுமாக தடுத்து வைக்கப்பட்டிருந்த லொயல் பெர்ணாண்டோவை காலியிலுள்ள அவரது வீட்டில் சரிநிகர் உள்ளிட்ட இரண்டு சிங்கள மாற்றுப் பத்திரிகைகளைச் சேர்ந்த பத்திரிகையாளர்களும் சந்தித்து உரையாடியதன் சுருக்க வடிவமே இங்கு தரப்படுகிறது.

***உங்கள் கப்பல் கைப்பற்றப்பட்டமை குறித்து விபரியுங்களேன்?***

1995 ஒகஸ்ட் 28ஆம் திகதி ஐரிஸ் மோனா கப்பலில் நான் உட்பட சிப்பந்திகளும் பயணிகளுமாக திருகோணமலையிலிருந்து 4.45 அளவில் பருத்தித்துறையை நோக்கிப் புறப்பட்டோம்.

அக்கப்பலில் வடக்குக்குப் பிரயாணம் செல்விருந்த பல தமிழர்கள் இருந்தனர். முல்லைத் தீவு கடற்பிரதேசத்தை அண்மித்து போகையில் புலிகள் படகுகளில் வந்து சுற்றி வளைத்தனர். முதலில் அவர்கள் தாக்க ஆரம்பித்தவுடன் "இது கடற்படைப் படகல்ல. பிரயாணிகள் போக்குவரத்துப் படகு" என்பதைத் தெரிவித்தோம். இதற்கிடையில் தாக்குதலில் ஒருவர் மரணமானார். ஒருவர் காயப்பட்டார். நாங்கள் கப்பலை நிறுத்த வேண்டியதாயிற்று. முல்லைத்தீவிலிருந்து 6 மைல் தொலைவில் விடியற்காலை 2 மணியளவில் தான் இது நடந்தது.

அவர்கள் படகில் ஏறியதும் கப்டன் யார் என்று கேட்டனர். நான் முன்னே சென்றதும் என்னை விசாரித்தனர். கப்பலை முழுமையாகச் சோதனையிட்டனர். கூடவே அவர்களின் கட்டுப்பாட்டு அறைக்கு தகவல் அனுப்பிக் கொண்டிருந்தனர். எனது கைப்பெட்டியைக் கேட்டார் ஒரு பெண்புலி. அதைத் திறக்கின்ற இலக்கத்தையும் கேட்டார். நான் கூறியதும் அதைச் சோதனையிட்டனர். அதில் இருந்த பணத்தையோ எந்தவித பொருட்களையோ அவர்கள் எடுக்கவில்லை திருப்பித் தந்து விட்டனர்.

கப்பலை அவர்களின் பகுதிக்கு கொண்டு செல்வதற்கான வழிகாட்டிக் குறிகளையும் பாதையையும் குறிப்பிட்டனர். அதன்படி கப்பலைச் செலுத்தினேன். வலைமடம் எனும் கிராமத்தை அண்டிய பகுதியில் கப்பல் நிறுத்தப்பட்டது. 5.30 மணியளவில் எங்களை எங்களின் சொந்தப் பொருட்களை மாத்திரம் எடுத்துக் கொண்டு கரையிறங்கக் கூறினர். கப்பலின் சிப்பந்திகள் எட்டுப் பேரையும் தனியாக இருக்கக் கூறிவிட்டு, ஏனைய பிரயாணிகளை தனியாக அழைத்துச் சென்று விட்டனர். அதன் பின் அதிலிருந்த பொருட்களும் இறக்கப்பட்டன. நாங்கள் சோதனைக்குட்படுத்தப்பட்ட பின் தான் இறக்கப்பட்டோம்.

***சோதனையின் போது உங்களை எப்படி நடத்தினார்கள்?***

மிகவும் மரியாதையாகத் தான் நடத்தினார்கள்.

***இறந்தவருக்கு என்ன நடந்தது?***

அவரைப் பின்னர் புலிகள் அடக்கம் செய்தனர். இறக்கிய பின் அதிலிருந்த உணவுப் பொருட்கள் அனைத்தும் இறக்கப்பட்டு எங்களுக்கும் வழங்கப்பட்டன. நாங்கள் 92இலிருந்து போக்குவரத்தை நடத்திக் கொண்டிருந்ததால் எங்களுக்கு இப்படி நேரும் என்று கனவிலும் எதிர்பார்த்திருக்கவில்லை.

சிறிது நேரத்தின் பின்னர் அந்த இடத்துக்கு கடற்புலித் தலைவரொருவர் வரவிருக்கிறார் என்பதை அறிய முடிந்தது. அதே போல் அங்கு சூசை என்பவர் வந்தார். கப்பலுக்குள் சென்று பார்வையிட்டதன் பின்னர் என்னுடன் உரையாடினார். நான் கப்பல் சிப்பந்திகளை அவருக்கு அறிமுகம் செய்தேன். நாங்கள் உரையாடியவை அனைத்தையும் புகைப்படம் மற்றும் வீடியோ கெமரா எடுத்தனர். இது பிரயாணிகள் கப்பல் என்பதை முன்னர் அறிந்திருக்கவில்லையென்றும் இது கடற்படை, தரைப்படை, விமானப்படையைச் சேர்ந்தவர்கள் பிரயாணிக்கிற அல்லது படைக்கான ஆயுதங்கள் கொண்டு செல்லுகின்ற கப்பல் என்ற சந்தேகத்தின் பேரில் தான் இதனைக் கைப்பற்றியதாகவும் அவர் எம்மிடம் கூறினார். உங்களை விடுதலை செய்து விடுவோம் என்றும் கூறினார். நாங்களும் நம்பிக்கையில் இருந்தோம்.

***பின்னர் எங்கு கொண்டு செல்லப்பட்டீர்கள்?***

ஒரு டிரக்டர் வந்தது. என்னுடன் இருந்த சிப்பந்திகளில் ஆறு பேரை வேறு இடத்துக்கு தனியாக அழைத்துச் சென்று விட்டனர். நானும் ஒரு சிப்பந்தியும் டேவிட் என்பவரின் பொறுப்பில் விடப்பட்டோம். அவர் எங்களை நன்றாக நடத்தினார். நாங்கள் பஜிரோ ஒன்றில் இன்னொரு கடற் புலிகளின் முகாமொன்றுக்கு அழைத்துச் செல்லப்பட்டோம்.

***கண்களைக் கட்டி அல்லது வேறு விதமான தொந்தரவுகள் செய்யவில்லையா?***

இல்லை, எதுவித பிரச்சினையையும் எங்களுக்குத் தரவில்லை. உண்மையைச் சொல்லப் போனால், கப்பல் கைப்பற்றப்பட்டு நாங்கள் அவர்களின் பொறுப்பில் இருந்தோமே தவிர நாங்கள் கைதிகளாக இருக்கவில்லை. ஒரு விதத்தில் விருந்தினர்கள் போல நடத்தப்பட்டோம். அவ்வப்போது எங்களுக்கு வசதிகள் குறைவா என பெண் புலிகளும், வந்து விசாரித்து விட்டுச் செல்வார்கள். நேவியா எனக் கேட்பார்கள். நான் முன்னர் நேவியில் இருந்ததையும் பின்னர் விலகிவிட்டுத் தான் தனியார் நிறுவனமொன்றில் கப்டனாக கடமையாற்றி வருவதையும் தெரிவித்தேன்.

சில நாட்களின் பின்னர் வேறொரு முகாமுக்கு, கொண்டு செல்லப்பட்டு அங்கிருந்து கிளாலிக்கூடாக ஏனைய சிப்பந்திகளுடன் யாழ்ப்பாணம் கொண்டு செல்லப்பட்டு அங்கு தான் இருந்தோம். இலங்கைப் படையினரால் சூரியக்கதிர் இராணுவ நடவடிக்கை தொடக்கப்பட்ட போது யாழ்ப்பாணத்திலிருந்த மக்கள் அனைவரையும் வெளியேறுமாறு புலிகள் கூறினர். அது போலவே அங்கிருந்த நாங்களும் மீண்டும் கிளாலிக்கூடாக வன்னிக்கு இடமாற்றப்பட்டோம்.

***சூரியக்கதிர் இராணுவ நடவடிக்கையோடு நீங்கள் எவ்வாறு கவனிக்கப்பட்டீர்கள்?***

சூரியக்கதிர் தொடங்கப்பட்ட போது ஏற்பட்ட களேபரங்களில் நாங்களும் அவஸ்தைக்குள்ளாக நேரிட்டது. யாழ்ப்பாணத்தில் நல்ல ஹோட்டல்களில் தங்க வைக்கப்பட்டு, நன்றாக பராமரிக்கப்பட்டோம். ஆனால் அதன் பின்னர் புலிகளும் இழப்புகளுக்கு உள்ளாக நேரிட்டது. அதன் விளைவாக நாங்களும் உணவு, இருப்பிடம் என்பவை தொடர்பில் சிறிது அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்தோம். ஆனால் அவர்களுக்கிருந்த அப்படியான அசௌகரியங்களின் மத்தியிலும் எங்களுக்கு குறையேற்படக்கூடாது என்பதில் அக்கறையாக இருந்தார்கள். சில நேரங்களில் அப்படியான அசௌகரியங்களின் போது வருத்தம் தெரிவித்தும் இருக்கிறார்கள்.

***நீங்கள் மாறி மாறி வைக்கப்பட்டிருந்த இடங்களில் எங்கேனும் நீங்கள் விலங்கிடப்பட்டிருந்தீர்களா?***

இல்லவே இல்லை!

***சுற்றிவர காவலில் தான் வைக்கப்பட்டிருந்திருப்பீர்கள அல்லவா?***

இல்லை. வீட்டில் இருப்பதைப் போலத் தான் நாங்கள் அங்கிருந்தோம். எங்கும் போய் வர்லாம். நாங்கள் அங்கிருந்த மக்களுடன் நெருங்கிப் பழக வாய்ப்புக் கிடைத்தது. நான் ஒரு கிறிஸ்தவன் அங்கிருந்த தேவாலயத்துக்குப் பிரார்த்தனைக்கும் சென்று வருவேன். ஆரம்பத்தில் எங்களுடன் எவராவது அனுப்பி வைக்கப்பட்டனர். பின்னர் நாங்களாகவே இத்தனை மணிக்கு வந்து விடுவோம் என்று தகவல் வைத்துவிட்டு தனியாகப் போய் வருவோம். ஆரம்பத்தில் மக்கள் எங்களைக் கண்டு விசித்திரமாகப் பார்த்தார்கள். பின்னர் எங்களுடன் நன்றாக பரிச்சயமானார்கள். தேவாலயத்தில் பாதிரியார் எங்களின் விடுதலைக்காகவும் பிரார்த்திக்கும்படி மக்களிடம் கேட்டுக் கொண்டார்.

***அவ்வாறானால் ஆரம்பத்தில் புலிகள் பற்றி நீங்கள் வைத்திருந்த அபிப்பிராயங்களுக்கு முரணாகவா அங்கிருந்த சூழல் உங்களுக்கிருந்தது?***

ஆம், அதற்கு முன்னர் புலிகளென்றால் காட்டுமிராண்டிகள், கொலைகாரர்கள் என்றெல்லாம் தென்னிலங்கையில் எல்லோர் மத்தியிலும் ஒரு கற்பிதம் இருந்தது. என்னை எப்போதும் ஏக வசனத்தில் பேசியது கிடையாது. பலர் என்னை "கப்டன் அண்ணே" என்று தான் அழைப்பார்கள். யுத்தத்தில் பரபஸ்பரம் ஒரு சாராரை மறு சாரார் கொல்வார்கள் தான். ஆனால் யுத்தக் கைதிகளை நடத்தும் விதம் நிச்சயமாக நேரெதிரானது என்பதை நான் தைரியமாகக் கூறுவேன்.

***வீட்டிலிருந்து உங்களுக்கு அனுப்பப்படுகின்ற கடிதங்கள் உங்களை வந்து சேர்ந்திருக்கின்றனவா?***

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்துக்கூடாக அவை புலிகளிடம் ஒப்படைக்கப்பட்டு அவர்களுக்கூடாக எங்களை வந்து சேரும்.

***அவை உடைத்து வாசிக்கப்பட்டதன் பின்னரா தரப்பட்டன?***

இல்லை, ஒருபோதும் அப்படி நடக்கவில்லை. நாங்கள் அனுப்புகின்ற கடிதங்களைக் கூட, 'நீங்கள் வாசித்துவிட்டு அனுப்புகிறீர்களா' எனக்கேட்டு ஒட்டாமல் கொடுத்த சந்தர்ப்பங்களில் கூட ஒட்டியதன் பின் தருமாறு கேட்கப்பட்டிருக்கிறோம்.

(இடையில் மனைவியை நோக்கி...)

***இவர் அனுப்பிய கடிதங்கள் அனைத்தும் உங்களுக்கு கிடைத்திருக்கின்றனவா?***

ஆம், அவை எந்தவித சேதமுமில்லாமல் கிடைத்திருக்கின்றன.

(மீண்டும் லொயல் பெர்னாண்டோவை நோக்கி)

***உங்களை ஏன் உடனடியாக விடுவிக்கவில்லை?***

நாங்கள் எதிர்பார்த்தோம் அவர்கள் உடனே விடுவித்து விடுவார்கள் என்று. ஆனால் அது நடக்கவில்லை. பின்னர் புலிகளின் தலைவர் பிரபாகரனுக்கு 22 கடிதங்களும், இலங்கை ஜனாதிபதிக்கு பல கடிதங்களும் எழுதி எங்கள் விடுதலை குறித்து அக்கறையெடுக்குமாறு கேட்டிருந்தோம்.

***அவற்றுக்கு என்ன பதில் கிடைத்தன?***

தலைவர் பிரபாகரனுக்கு அனுப்பிய கடிதங்களில் இரண்டுக்கு பதில் கிடைத்தது புலி உறுப்பினர்கள் தமிழில் இருந்த அதனை எமக்கு வாசித்துக் காட்டினர். சூரியக்கதிர் காலத்தில் கிடைக்கப்பெற்ற கடிதம் ஒன்றில் கூடிய விரைவில் ஐரிஸ் மோனா ஊழியர்களை விடுவிப்பதில் தாம் அக்கறை கொண்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் எங்களின் விடுதலையில் கொஞ்சமும் இலங்கை அரசாங்கம் அக்கறை கொள்ளவே இல்லை. அரசுக்கு அனுப்பிய கடிதங்கள் ஒன்றுக்கும் பதில் கிடைக்கவே இல்லை. சிறிது நாட்களின் பின் கிளிநொச்சிக்கும், அங்கிருந்து சில நாட்களின் பின்னர் வன்னிக்கும் கொண்டு வரப்பட்டோம். இடையில் பல இருப்பிடங்கள் பல தடவைகள் மாற்றப்பட்டன. இறுதியில் நாங்கள் விடுவிக்கப்பட்ட போது கிளிநொச்சி கோனாவில் எனும் பிரதேசத்தில் வைத்துத் தான் விடுவிக்கப்பட்டோம். எதிர்பாராத சந்தர்ப்பத்தில் ஒக்டோபர் 23ஆம் திகதியன்று சுதா மாஸ்டர் எனும் அரசியற் தலைவர் ஒருவர் வந்து நாங்கள் விடுவிக்கப்படப் போவதாகத் தெரிவித்தார். ஆனால் எங்களின் விடுதலைக்குப் பின்னால் உள்ள நோக்கங்கள், காரணங்கள், விடுவிக்கப்படும் முறை எதையும் ஊகிக்க முடியாமலிருந்தது.

நான் விடுவிக்கப்படுவதற்கு மகிழ்ச்சியையும், நன்றியையும் தெரிவித்தேன். ஆனால் ஒரு கப்டன் என்கின்ற ரீதியில் எனது சக ஊழியர்களுக்கு நான் பொறுப்பானவன். எனவே அவர்கள் விடுவிக்கப்படாமல் நான் மட்டும் விடுதலை பெற்றுப் போவதில் அர்த்தமில்லை, அது முடியாது என்பதை அவர்களுக்குத் தெரிவித்தேன்.

பின்னர் என்னை நாங்கள் தங்கியிருந்த முகாமின் பொறுப்பாளராக இருந்த கலைக் குமாரிடம் அழைத்துச் சென்றனர். எங்களை விடுக்குமாறு தமது தலைவரிடமிருந்து உத்தரவு கிடைத்தது என்றும் இதனை தான் மீறுவது அவரின் மரியாதைக்கு இழுக்கு என்றும் அவர் கூறினார்.

அங்கு வைத்து எனது விடுவிப்பு பற்றி உரையாடினார்கள். அங்கு மிஷன் கப்பலின் கப்டனும் சில சிப்பந்திகளும் இருந்தனர். நான் எனது நிலையை எடுத்துக் கூறினேன். ஆனால் மிஷன் கப்பலின் கப்டன் என்னை நோக்கி "நீங்கள் வர முடியாவிட்டால் அது பற்றி எங்களுக்கு கவலையில்லை. நான் ரெடி" என்றார். அவருடைய கப்பல் சிப்பந்திகள் பலர் விடுவிக்க முடிவு செய்யப்படாத நிலையில் அவர் மாத்திரம் விடுதலையாகத் தயாராக இருந்தது எனக்கு வருத்தமாக இருந்தது. அனைவரது விடுவிப்புக்காகவும் முயற்சி செய்யலாம் என்று நினைத்திருந்தேன். நான் எப்போதும் இறுதியில் விடுதலையாவதாகத் தான் எண்ணியிருந்தேன். எனது சக ஊழியர்களோ என்னை விடுதலையாகும்படியும் விடுதலையான பின் வெளியில் இருந்து கொண்டு தங்களின் விடுதலைக்காக முயற்சி செய்யும்படியும் அரசுக்கு இது குறித்து தெளிவுறுத்தும்படியும் என்னை் வற்புறுத்திக் கொண்டிருந்தனர். இறுதியில் அந்த முடிவுக்கே நான் வரவேண்டியதாயிற்று. எனது சக ஊழியர்களை நான் விட்டுப் பிரிகின்ற போது சகலரும் கட்டிப்பிடித்து அழுதோம். எங்களுக்கிடையில் அதிகாரி-ஊழியர் என்கின்ற உறவு இருக்கவில்லை. நல்ல நண்பர்களாக இருந்த அதே நேரம் நாங்கள் புலிகளின் கீழ் அந்தச் சூழலை இத்தனை வருடங்கள் ஒன்றாகவே அனுபவித்திருந்தோமே. பிரிவு சோகத்தைத் தந்தது.

ஒரு புறம் எனது மனைவி, தாய், பிள்ளைகள் பற்றிய ஏக்கமும், மறுபுறம் பொறுப்பும், ஒன்றும் செய்ய இயலாத நிலையிலும் குழம்பிப் போய் இருந்தேன். அந்த

நன்றி - நூலகத்திட்டம்



ரின் அரசியற்
ஒருவரான
விரைவாகத்
ார்.
களை ஏற்றிக்
பிருப்பு பகுதி-
ரிவு தலைமைக்
டைந்தது. அங்கு
கள் செய்யப்-
விப்பு குறித்து
ப்பட்டிருக்கிறதா
ன். சர்வதேச
கத்துக்கூடாக
ம் தெரிவிக்கப்-
பொறுப்பேற்பது
பாதுகாப்புத்
ந்து பதில்
தக் காத்திருப்பு
. 23 ஆம்
.ஆர்.சி.யின்
ல்ட் என்பவர்
ம் கட்டிப்பிடித்து
த் தெரிவித்து
ளைக்குள் பதில்
நம்புவதாகவும்
செல்வதாகவும்
க்கு பிந்தி வந்த
ம் எங்களிடம்

*கள் அனைத்தும்
டைக்கப்பட்டதா?*
னக்கு எடுக்க
க்கவில்லை.
க்கு அனுப்பி
னார்கள். நான்
ஆர்.சி.யிடம்
றிே


*எப்படி வீட்டுக்கு
ாகக் கூறினார்கள்?
ளவுக்கு தெற்கில்
யதைச் செய்கின்ற
ன நம்புகிறீர்களா?*

தெற்கில்
ாக உள்ளன.
பின்னல் பரந்து
அவர்கள் எனது
ட வீட்டுக்கே
கூடுமென நான்
சிப்பந்திகளில்
முகம் (அவர்
ரின் மகன்
ர்ளார். ஆரம்-
ிய படிவத்தில்
வா கூறியும்
குறி ாமல்
இரு நாட்கள்
கள் இருந்த
னமொன்றில்
கிய புலிகளின்
ர் சண்முகத்தை
பில் வைத்து
போகும் போது
இது குறித்து
தற்காக இவரை
செய்து விடப்
ால் தங்களிடம்
ப்பீர்கள் என்று
வர் தெரிவித்து
அவர்களுக்கு
முடியாது.

விடுதலைக்கு
ப்பு பதிலுக்காக
ாத்திருந்தோம்.
ி. காரியால-
டயினர் வந்து
கொண்டனர்.
செல்லப்படு-
று ஏற்பாடு
தது. அந்த
களின் முக்கிய
ான தமிழ்ச்
கொண்டார்.
விடுதலையின்
க்கியத்துவத்-
ாது தான்

ங்களில் நான்
ந்தேன். தமிழ்ச்
டலைக் கேட்ட
னை ஏனைய
சிங்களத்தில்
செய்தேன்.

# நாங்கள் விடுவிக்கப்பட்டது சமாதானத்திற்கான ஒரு சமிக்ஞையாகவே!



**கப்டன் லொயல் பெர்ணாண்டோ**

அரசுடனான பேச்சுவார்த்தையில் தாங்கள் ஈடுபட பின்நிற்பவர்கள் இல்லையென்றும் தங்களின் நல்லெண்ண சமிக்ஞையாகவே இந்த விடுவிப்பை செய்வதாகவும், அரசு தன் தரப்பில் இந்த சமிக்ஞைக்கு சாதகமான பதிலைத் தரவேண்டுமென்று தாங்கள் எதிர்பார்ப்பதாகவும், குறைந்த பட்சம் மக்கள் மீதான பொருட் தடையில் ஒரு சிலவற்றை நீக்கியோ அல்லது எங்களில் ஒருவரையேனும் விடுவிப்பதன் மூலமாகவோ இதனைச், செய்யலாமென்றும் அதனைத் தொடர்ந்து நல்லெண்ணங்களை வலுப்படுத்துவதற்காக தங்கள் தரப்பில் மேலும் சாதகமான விளைவுகளைத் தருவதாகவும் அவர் கூறினார்.

இதன் ஆரம்ப கட்டமாக, தாங்கள் ஏனைய சிப்பந்திகளையும் விடுவிக்கவிருப்பதாகவும் அரசு இதற்கு விசுவாசமாக இருக்குமா என்பதே தங்களுக்குள்ள கேள்வி என்றும் கூறினார்.

நான் இதற்கு பதில் கூறுகையில், நான் அத்தனை பெரிய விளைவை உருவாக்கக்கூடிய பலமுள்ளவனல்ல என்றும், ஆனாலும் இதற்காக என்னால் இயன்ற முயற்சிகளைச் செய்வதாகவும், கூறினேன். ஆனால் அரச தரப்பில் இதற்கு சரியான சமிக்ஞை இல்லையெனில் எமது ஏனைய சிப்பந்திகளின் நிலை என்ன என்று கேட்டேன். அதற்கு தன்னால் பதில் தர முடியாது என்றும் அதனைத் தலைவர் தான் தீர்மானிப்பார் என்றும் கூறினார்.

***அவர்களின் உயிருக்கு ஏதேனும் நேருமென்று நீங்கள் எண்ணுகிறீர்களா?***

இல்லை, நான் நம்பவில்லை அவர்கள் அப்படி செய்வார்கள் என்று. ஆனால் சிப்பந்திகளின் விடுதலை மேலும் தாமதமாகும். சமாதானத்துக்கான வாய்ப்புகளை தட்டிக் கழிப்பதாக போய் விடும்.

***நீங்கள் விடுதலையானதன் பின்னர் இதற்கான முயற்சிகளில் ஈடுபட்டுள்ளீர்களா?***

ஆம், பத்திரிகையாளர்கள் என்னைச் சந்தித்த போது அவர்கள் மத்தியில் நான் தொடர்ந்தும் இவை குறித்துப் பேசினேன். ஆனால் என்னவோ எந்தப் பத்திரிகையும் இதற்கு முக்கியத்துவம் அளிக்கவில்லை. இவை குறித்துப் பேசவே இல்லை. நான் கூறாதவற்றைப் பிரசுரித்த பத்திரிகைகள் கூட உண்டு. பத்திரிகைகளின் வாயிலாக மக்களுக்கும், அரச தரப்பினர்க்கும் இவற்றை உணர்த்தலாம் என்றிருந்தேன். ஆனால் அது நடக்கவில்லை. இவை எனக்கு மிகவும் கவலை அளித்த விடயங்கள். இப்பத்திரிகைகள் தூர நோக்கில் செயற்பட, எழுதத் தவறுவதேன்? என்னை சந்திக்க வந்த சில அரசியற் பிரமுகர்களுடனும், படையதிகாரிகளுடனும் கூட இவை குறித்து அக்கறையுடன் பேசினேன். ஆனால் இது குறித்து எந்தவித அசைவையும் காணக் கிடைக்கவில்லை என்பது தான் சோகம்.

இந்த யுத்தத்தின் கொடுமைகளை இரு பக்கமும் எவ்வாறு சுமக்கின்றனர் என்பதை நேரில் உணர்ந்தவன் நான். எனக்கு பணி விடைகள் செய்து கூடவே இருந்து கவனித்த புலி உறுப்பினர்கள், பிணமாக வந்து சேருகின்ற போது எனக்கு ஏற்பட்ட வலி சொல்ல முடியாது. அவ்வாறானவர்களின் பிணத்தை அவர்களின் அனுமதியுடன் நான் சென்று பார்த்து விட்டு வந்துள்ளேன். நான் நோய்வாய்ப்பட்டிருந்த போது என்னைக் கிட்ட இருந்தே கவனித்த ஆனந்தன் என்பவர் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியாகியதைக் கேட்ட போது நான் மிகவும் வேதனை அடைந்தேன். இப்படி ஒரு உயிரா...?

***படையினர் செய்கின்ற படையெடுப்புகளின் போதும் தாக்குதல்களின் போதும் சிங்களவரான நீங்கள் உணர்ச்சி வசப்பட்ட எதிர்ப்புகள் எதனையும் அனுபவித்தீர்களா?***

இல்லை, ஒரு போதும் எங்களுக்கு அப்படி நேர்ந்ததே கிடையாது. சில சமயங்களில் அங்கு ஏற்படுகின்ற ஆரவாரங்களையும் குழப்பங்களையும் கொண்டு ஏதோ நடக்கிறது என்பதை எங்களால் ஊகிக்க முடிந்திருக்கிறது. ஆனால் அவற்றால் எம்மீதான கவனிப்பில் மாற்றம் ஏற்பட்டதில்லை. ஒரு போதும், முக்கியமாக சாப்பாட்டில் குறை வைத்ததே இல்லை. ஆனால் எங்களுடன் விடுதலையான மிஷன் கப்பலைச் சேர்ந்த சில சிப்பந்திகள் அப்படிப்பட்ட கருத்துக்களை பத்திரிகைகளுக்கு கூறியிருந்தார்கள். அவர்கள் ஏன் அப்படியான உண்மைக்குப் புறம்பான பொய்களைக் கூறினார்கள் என்று எனக்குத் தெரியாது. ஆனால் அவ்வாறான கருத்துக்கள் ஆரோக்கியமானவையல்ல.

***மாவீரர் நிகழ்ச்சிகளைப் பார்க்கக் கிடைத்ததா?***

நான் மாவீரர் நிகழ்ச்சிகளைப் பார்க்க ஆவலாக இருப்பதாக இரு வருடங்களும் அவர்களிடம் கூறியிருந்தேன். கடிதங்கள் கூட போட்டுக் கேட்டிருந்தேன். இறுதியாக சென்ற வருடம் விஸ்வமடு எனும் இடத்தில் நடந்த மாவீரர் நிகழ்ச்சிகளை நேரில் காணும் வாய்ப்புக் கிட்டியது. ஆயிரக்கணக்கான வீரர்களின் படங்கள், அவர்களின் மாவீரர் துயிலும் இல்லம், கலை நிகழ்ச்சிகள் என எல்லாவற்றையும் காண முடிந்தது. சரியாக 6.10க்கு ஆயிரக்கணக்கான வீரர்களின் புதைகுழிகளுக்கு முன்னால் ஆயிரக்கணக்கான பெற்றோர், உறவினர் ஒரே நேரத்தில் விளக்கேற்றுகின்ற காட்சி எவரையும் புல்லரிக்கச் செய்யும். அந்த அமைதி, அந்த சோகம் என்பன மறக்க முடியாத நினைவுகள். ஒரு பெண் புலி எம்மை நோக்கி வந்து நீங்களும் விளக்கேற்ற விரும்புகிறீர்களா என்று கேட்டார். நான் எனது ஏனைய சிப்பந்திகளைப் பார்த்துக் கேட்டபோது அவர்களும் விருப்பம் தெரிவித்தார்கள். நாங்களும் குறிப்பிட்ட அந்த நேரத்தில் வெவ்வேறாகப் பிரிந்து மாவீரர்களுக்கு விளக்கேற்றி கௌரவம் செலுத்தினோம். இரவு தமிழீழ இசைக் குழுவினரால் நடத்தப்பட்ட இசை நிகழ்ச்சிகள், நாடகங்கள் அனைத்தையும் பார்த்து விட்டு வந்தோம்.

***போர்க்காலங்களில் உங்களின் உள நிலை எவ்வாறிருந்தது?***

கிளிநொச்சியை அரச படைகள் கைப்பற்றுவதற்காக நடத்தப்பட்ட சத்ஜய இராணுவ நடவடிக்கையின் போது அருகிலுள்ள பகுதிகளில் எல்லாம் குண்டுகள், ஷெல்கள் வந்து விழுந்து வெடிக்கும். அப்படியான சந்தர்ப்பங்களில் எம்முடன் உள்ள ஏனைய சிப்பந்திகளான அன்டனி, முனசிங்க, ஜயசேகர, குக் ஒருவருடம் சாப்பிடக் கூட மாட்டார்கள். அவ்வளவுக்கு குழம்பிப் போய் இருப்பார்கள். நான் அதையெல்லாம் பெரிதாக போட்டுக் குழப்பிக் கொள்வதில்லை. பழக்கப்பட்டுப் போய் விட்டது.

சத்ஜயவின் பின் மாங்குளத்தில் இருந்தோம். அப்போது 'ஜயசிக்குறு' ஆரம்பிக்கப்பட்டது. கிளிநொச்சி மீது புலிகளின் 'ஓயாத அலைகள்-2' தாக்குலை நடத்திய போது இரவெல்லாம் பகல் போலத் தான் வெளிச்சமாக இருந்தது. அது ஆரம்பிப்பதற்கு முன்னமே ஏதோ பெரிய தாக்குதலுக்கான ஆயத்தங்கள் செய்யப்படுவதை எங்களால் உணர முடிந்தது. பல பங்கர்கள் புதிதாகச் செய்யப்பட்டதோடு, பழையவை புதுப்பிக்கப்பட்டன. நாங்கள் இருக்க வேண்டிய பங்கர்களை நாங்களே சரி பார்த்துக் கொண்டோம். ஏனைய பங்கர்களை செய்வதற்கு உதவி செய்தோம். பின்னர் கிளிநொச்சி சேதங்களை பார்வையிட விரும்புவதாகக் கூறி கலைக்குமாரிடம் அனுமதி பெற்று நானும் ஏனைய சிப்பந்திகளும் சிலரின் சைக்கிள்களை வாங்கிக் கொண்டு போய் படையினரின் சடலங்கள், கைப்பற்றப்பட்ட ஆயுதத் தளபாடங்கள் என்பவற்றைப் பார்வையிட்டோம். அவற்றைப் பார்வையிட்ட பொது மக்கள் சிலர் "கொல்லப்பட்டவர்கள் எங்களைப் போல ஏழைக் குடும்பங்களைச் சேர்ந்தவர்களல்லவா" எனப் புலம்பியதை நான் கண்ணால் கண்டேன். கிளிநொச்சி தாக்குதல் பற்றிய வீடியோ கெசட்டையும் எங்களுக்கு, பார்க்கக் கிடைத்தது. நடக்கின்ற யுத்தத்தில் புலிகளின் பலத்தைப் பற்றி அரசு குறைத்து மதிப்பிட்டு வருகிறது. அவர்கள் உண்மையிலேயே வெற்றிபெறக் கூடியவர்கள்.

***யுத்தத்திற்கு புலிகள் பலாத்காரமாகத் தான் ஆட்சேர்க்கிறார்கள் என்கின்ற கருத்து குறித்து உங்களின் பார்வை என்ன?***

அதில் ஓரளவு உண்மையும் இருக்கிறது தான். ஆனால், எனது அபிப்பிராயத்தில் அது இரு பக்கமும் இருக்கிறது. தவிர, அங்கு இயக்கத்தில் சேருபவர்களில் பெருமளவானோர் சுயமாகவே இணைகிறார்கள். அதனை மறுக்க முடியாது.

***நீங்கள் விடுவிக்கப்பட்டதன் பின்னர் சமாதானக்குழுக்களோ. அல்லது சமாதானப் பேச்சுவார்த்தை. அரசியல் தீர்வு குறித்து பேசித் திரிபவர்கள் எவரும் வந்து சந்திக்கவில்லையா?***

இல்லை, ஒருவரும் அப்படித் தொடர்பு கொண்டதில்லை.

***உங்களின் விடுதலை குறித்து அரசு தரப்பில் எடுக்கப்பட்ட முயற்சியினைக் கூறுங்கள்?***

அரசு ஒரு போதும் எங்க்ளின் விடுதலையில் அக்கறையோ நடவடிக்கையோ எடுக்கவில்லை. நாங்கள் அனுப்பிய கடிதங்களுக்கு பதிலளிக்கக் கூட இல்லை. எங்களின் வீடுகளுடன் தொடர்பு கொண்டு நிலமையை விசாரித்தது கூட இல்லை. பொறுப்பற்ற விதத்தில் தான் இது வரை சிறைப்பிடிக்கப்பட்டவர்கள் விடயத்தில் நடந்து கொண்டுள்ளது. நடந்து வருகிறது.

***செய்திகளை அறிவதற்கான வாய்ப்புகள் கிடைத்தனவா?***

புலிகளின் பத்திரிகைகள் எல்லாம் எமக்குக் கிடைக்கும். அவற்றிற்கூடாக புலிகளின் சில விடயங்களை அறிந்து கொள்வோம். ஒரு வருடத்தின் பின்னர் எங்களுக்குப் புலிகளால் ஒரு வானொலி கொடுக்கப்பட்டது. அதைக் கொண்டு புலிகளின் செய்திகளையும், லங்காபுவத் பி.பி.சி. போன்றவற்றைக் கேட்போம். இலங்கை வானொலிச் செய்திகளைக் கேட்கையில் சில சந்தர்ப்பங்களில் எமக்கு விநோதமாகவும் சிரிப்பாகவும் இருக்கும் அத்தனை கற்பனைகள் அதில் இருக்கின்றன.

***தென்னிலங்கை செய்தி நிறுவனங்களைப் பற்றிய உங்கள் கருத்தென்ன?***

அவை அரச சார்பாகவோ, உண்மைக்குப் புறம்பானதாகவோ தான் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் நடந்து கொண்டு வந்துள்ளன. நடந்து கொண்டு வருகின்றன. நாங்கள் சகல செய்திகளையும் கேட்போம். ஒன்றுக்கொன்று வித்தியாசம் இருக்கும். சில வேளைகளில் புலி உறுப்பினர்கள் வந்து படையினரின் இறப்புக் குறித்து செய்திகள் என்ன கூறுகின்றன என்பதைக் கேட்பார்கள். புலிகளின் இறப்பை ஐந்தால் வகுத்தும், படையினரின் இறப்பை ஐந்தால் பெருக்கியும் இதுவாகத் தான் இருக்கக் கூடுமென் அவர்களுக்குக் கூறுவோம்.

**நேர்காணல்— ஆனந்தன்**

தமிழ்ச் செல்வன் பேசுகையில், அரசுடனான பேச்சுவார்த்தையில் தாங்கள் ஈடுபட பின்நிற்பவர்கள் இல்லையென்றும் தங்களின் நல்லெண்ண சமிக்ஞையாகவே இந்த விடுவிப்பை செய்வதாகவும், அரசு தன் தரப்பில் இந்த சமிக்ஞைக்கு சாதகமான பதிலைத் தரவேண்டுமென்று தாங்கள் நம்புவதாகவும்,குறைந்த பட்சம் மக்கள் மீதான பொருட் தடையில் ஒரு சிலவற்றை நீக்கியோ அல்லது எங்களில் ஒருவரையேனும் விடுவிப்பதன் மூலமாகக் கூட இதனை, செய்யலாமென்றும் அதனைத் தொடர்ந்து நல்லெண்ணங்களை வலுப்படுத்துவதற்காக தங்கள் தரப்பில் மேலும் சாதகமான விளைவுகளைத் தருவதாகவும் அவர் கூறினார்.
இதன் ஆரம்ப கட்டமாக, தாங்கள் ஏனைய சிப்பந்திகளையும் விடுவிக்கவிருப்பதாகவும் அரசு இதற்கு விசுவாசமாக இருக்குமா என்பதே தங்களுக்குள்ள கேள்வி என்றும் கூறினார்.



நன்றி - நூலகத்திட்டம்



துரிதமாக இரு நபர்கள் விடுதி அறைக்குள் நுழைந்திருந்தனர். இவர்கள் எங்ஙனம் கதவைத் தகர்த்துக் கொண்டு அறைக்குள் வந்தனர் என்பது நத்தாஷாவுக்கு விளங்கவில்லை. அவ்வேளை நான் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்திருக்கலாம் என அவள் எண்ணிக் கொண்டாள்.

நத்தாஷா, போலந்து நகரமான ரொக்லோவில் கழிக்கும் இரண்டாவது இரவிது. கறுத்த கூந்தலும், பச்சை நிறக் கண்களும் கொண்ட 21 வயது பெண்ணான நத்தாஷா, ரஷ்யாவில் மொஸ்கோ நகரப் பாடசாலையொன்றின் ஆசிரியையாக கடமையாற்றியவர்.

'சீக்கிரம் உடைகளை உடுத்துக் கொண்டு தயாராகு!' நத்தாஷா பயந்தாள். பலாத்காரமாக கைகளை காற்சட்டைகளில் திணித்துக் கொண்ட இருவர் அவள் முன் நின்று ஆணையிட்டுக் கொண்டிருந்தனர். "சத்தம் போட்டால் உன்னைக் கொன்று விடுவோம்!" ஒருவன் எச்சரித்தான்.

அவளுக்கு பயத்தில் ஒன்றும் தோன்றவில்லை. மேலே கூறப்பட்ட மாபியா கொலைகாரர்களால் அவளது கடவுச்சீட்டுப் பறிக்கப்பட்டது. செய்வதறியாது அவள் அவர்களைத் தொடர்ந்து சென்று வாகனத்தில் ஏறிக்கொண்டாள். வாகனத்தில் 'பாதுகாப்புடன்' இன்னொரு பெண்ணும் இருந்தது நத்தாஷாவுக்கு ஆறுதலளித்தது.




அவள் பெயர் இரா (Ira). யுக்ரேன் தேசத்து 18வயதுப் பெண். மாபியா கும்பல் ஒன்று அவளை புகையிரத நிலையத்திலிருந்து கடத்திக் கொண்டு வந்திருந்தது.

இதன் பின் போலந்து தேச விடுதியில் இருந்த ஜேர்மனியர்கள் இருவர்களிடம் இப்பெண்கள் கொண்டு செல்லப்பட்டனர். சிக்பிரிட் (Siegfried), பீற்றர் (Peter) ஆகிய பெயர்களை கொண்ட இவர்கள் நத்தாஷாவையும், இராவையும் விடுதிக்குள் அழைத்துச் சென்று பாலியல் வல்லுறவு புரிந்தனர். பின்னர் சில ஜேர்மனியர்களால் இப்பெண்கள் இருவரும் 6000 மார்க்கு விலை கொடுத்து வாங்கப் பட்டனர்.

கடவுச்சீட்டு, விசா, பணம் எதுவுமின்றி, சட்ட விரோதமான முறையில் இப்பெண்கள் போலந்து, ஜேர்மன் நாடுகளுக்கிடையிலான தேச எல்லையினூடு பேர்ளின் விபச்சார விடுதிக்குக் கொண்டு செல்லப்பட்டனர். அங்கு தரகரான பீற்றர், 'நீங்கள் எனக்கு 6000 மார்க் கடன்பட்டுள்ளீர்கள் . அதற்குச் சரியாக வேலை செய்ய வேண்டும்!" என்றான்.

இது ஒரு குறிப்பிட்ட சம்பவம் மட்டுமே. இதுவரை, ஐரோப்பா சங்கத்தைச் சேர்ந்த நாடுகளில் அரை மில்லியன் வெளிநாட்டுப் பெண்கள் இரகசியமான முறையில் விபச்சாரத் தொழிலில் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றனர். வருடாந்தம் பல ஆயிரக்கணக்கான பெண்கள் பலவந்தமாக இக்கூட்டத்தில் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர். பெரும்பாலான பெண்கள் ஏமாற்றப்பட்டுக் கொண்டு வரப்படுகின்றனர். சிலர் பயமுறுத்தப்பட்டு (நத்தாஷா, இரா போன்று) பலவந்தமாக இக்கூட்டத்தில் சேர்க்கப்படுகின்றனர்.

ஜேர்மன் குற்றவியல் திணைக்கள அறிக்கையின்படி இது வரையில் கொண்டு வரப்பட்டவர்களில் 1/4 பங்கினர் முன்னாள் சோவியத்தைச் சேர்ந்த நாடுகளில் இருந்தே கொண்டு வரப்பட்டுள்ளனர். 1/5 பங்கினர் போலந்து, பல்கேரியா மற்றும் செக் குடியரசைச் சேர்ந்தவர்கள். பேர்ளினில் விபச்சாரிகளாக பணிபுரிவோர் பெரும்பாலும் கிழக்கு ஐரோப்பா நாடுகளைச் சேர்ந்தவர்கள்.

பெண்ணுடல் வர்த்தகத்துக்கென பெண்களை அழைத்துவர ஆகாய, தரை, புகையிரத மார்க்கங்கள் பயன்படுத்தப்படுகின்றன. சில வேளைகளில் விபச்சார விடுதி உரிமையாளர்களிடம், கிழக்கு ஐரோப்பிய தொழில் பங்காளிகளினால் பெண்கள், பெரும் குழுவாக உல்லாசப் பயணிகள் போர்வையில் சேர்க்கப்படுகின்றனர்.

ஜேர்மனியில் மட்டும் பெண்ணுடல் விற்பனையின் மூலம் கிடைக்கும் வருமானம் வருடாந்தம் 2 பில்லியன் மார்க்காகும் எனக் கருதப்படுகின்றது. இக்கால எல்லைக்குள் (ஒரு வருடம்) நத்தாஷா, இரா போன்றவர்கள், தமது உரிமையாளருக்கு 75,000 மார்க்கை உழைத்துக் கொடுக்கின்றனர். ஜேர்மன் குற்றவியல் விசாரணைத் திணைக்களத்தின் தகவலின்படி இக்கொள்ளை இலாபம், ஜேர்மன் விபச்சார விடுதி உரிமையாளர்களுக்கு 43வீதமும், துருக்கி இனத்தவர்களுக்கு 10 வீதமும், போலந்தவர்களுக்கு 7.5வீதமும் பிரித்து வழங்கப்படுகின்றது.

ஜேர்மன் விபச்சார விடுதி உரிமையாளர்கள் உயர்ந்த விலையில் கொள்ளை இலாபம் பெறும் அதேவேளை, டெப்லொயிட் பத்திரிகைகளும், அவற்றில் பிரசுரிக்கப்படும் 'காம யுக்ரேனிய பெண்', 'அழகிய ரஷ்ய தேவதை' போன்ற தலைப்புக்களைக் கொண்ட விளம்பரங்கள் மூலமும் அவை நாள் தோறும் லட்சக்கணக்கான பணத்தை உழைத்துக் கொள்கின்றன.

20 வயதுப் பெண்ணான லீனா(Lena) அதிர்ச்சியும், சோகமும் தரக்கூடிய சம்பவங்கள் பலவற்றை அனுபவித்துணர்ந்து துன்பத்துக்குள்ளானவள்.

லீனாவுக்கு அந்த நரகத்திலிருந்து விடுபட்டு தனது நாட்டை நோக்கிச் செல்லும் சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. எனினும், தனது எதிர்கால வாழ்க்கை தொடர்பான பயம் காரணமாக தன்னை சித்திரவதைப்படுத்திய காமுகர்களின் பெயர்களை அடையாளப்படுத்த அவள் மறுத்து விட்டாள். அவளை ஜேர்மனிக்கு கடத்திக் கொண்டு வந்தவேளை, மாபியா கும்பல் அவளுக்கு Subbotnik எனப் பெயர் சூட்டியது.

சோவியத் மொழியில் இவ் ஆங்கிலச் சொல்லுக்கான விளக்கம் சம்பளமின்றி சனிக்கிழமைகளில் தொழில் செய்வது என்பதாகும். ஆனால், விபச்சார விடுதி உரிமையாளர்களுக்கான விளக்கம், பெண்கள் எந்தவித கொடுப்பனவும் இன்றி கால எல்லையின்றி தொழில் செய்வது. லீனாவின் கூற்றின்படி "உங்கள் முகத்தில் மலம் கழிக்கவும் அவர்களால் முடியும். ஏனெனில், நீங்கள் அவர்களுக்கு உரித்தானவர்கள்."


லீனாவை ஜேர்மனியர்கள் ஒரு மிருகத்தைப் போன்று நடத்தினர். அவளை சித்திரவதைப்படுத்தி, கொடூரமாகத் தாக்கியது மட்டுமல்லாமல், அவளை மிருகங்களுடன் புணருமாறும் கொடுமைப்படுத்தியுள்ளனர் காமுகர்கள்.

யுரோபோலின் (புதிய ஐரோப்பா பொலிஸ் உள்நாட்டு தொடர்பு சேவை) தலைவர், இவ்வாறான சம்பவங்களின் பிரதான சாட்சியாக குற்றவாளியின் சுய மன்னிப்பு மட்டுமே நீதிமன்றில் நமக்கு சாதகமாக இருக்கும் என்கின்றார்.

இதுவரை இந்த இரகசிய வியாபாரம் தொடர்பாக சரியான தகவல்கள், தரவுகள் எதுவும் கிடைக்கவில்லையெனவும், எவரும் இவ்வாறான நடவடிக்கைகளைத் தடுப்பதற்கு முயலவில்லையெனவும் கூறப்படுகின்றது.

சாட்சிக்காரர்களுக்கு பாதுகாப்பளித்தல், சட்ட உதவிகள், சட்டத்துக்குப் புறம்பாக பெற்றுக்கொடுக்கப்பட வேண்டிய விடயங்கள் என்பன பேச்சளவில் மட்டுமே வரையறுக்கப்பட்டுள்ளதாகத் தெரிகின்றது.

இதன் விளைவாக ரஷ்யாவில், போலந்தில், அல்பேனியாவில் பெரும்பாலான குற்றவாளிக் குழுக்கள் இந்த வியாபாரத்தில் தயக்கமின்றி ஈடுபடுகின்றன. இந்த வியாபாரத்தின் மூலம் அவர்களது போதைப்பொருள், ஆயுத விற்பனையையும் ஊக்குவிக்க முடிகின்றது என்பதும் குறிப்பிடத்தக்கது.




அத்துடன், இவ்வாறான குழுக்களின் அதிகார மோதல்கள் நகரத்தின் திறந்த வெளிகளில் தாராளமாக இடம் பெறுகின்றன.

ஊட்டா லுட்விக் பெண்கள் உரிமை செயற்பாட்டாளர், அதேபோல் சமூக ஊழியர். பெண்களை நெருக்கடியிலிருந்து விடுவிக்க எங்ஙனம் செயற்படுவது என்பது அவருக்கு பெரும் பிரச்சினையாகவுள்ளது. 45 வயதுடைய இப்பெண், தனது ஆலோசனைக் குழு மூலம் விபச்சாரிகளுக்கு முழுமையான சட்ட உதவிகளை பெற்றுக் கொடுக்கின்றார். உதாரணமாக, தரகர்களினால் பாலியல் வல்லுறவுக்குள்ளான பெண்களுக்கு சட்ட உதவி வழங்கியு வருகிறார்.

பெலடோனா அமைப்பைச் சேர்ந்த 250 விபச்சாரிகளில் பெரும்பாலானோர் மீண்டும் தாம் அந்நிலையை அடைய வேண்டி ஏற்படுமோ எனப் பீதியடைந்துள்ளனர். அதனால் இவர்களில் பலரை ஜேர்மனியிலிருந்து வெளியேற்ற வேண்டியேற்பட்டுள்ளது. இவ்வாறு வெளியேற்றப்படும் சந்தர்ப்பத்தில், மாபியா கும்பல்களிடம் இவர்கள் சிக்கும் வாய்ப்பும் அதிகம் உள்ளது. ஏனெனில், மாபியா கும்பலது ஆட்கள் எல்லைகளில் ஆயுதங்களோடு காவல் புரிகின்றனர். பெண்களின் உடல் வர்த்தகத்தின் குரூரமான பங்காளிகளினால் பெண்களை மீண்டும் பிடிக்கும் நடவடிக்கை கிரமமாக நடைமுறைப்படுத்தப் பட்டு வருகின்றது.

ஊட்டா லுட்விக் , 'பெரும்பாலானவர்கள் தரகர்களின் வன்மையான பலாத்காரத்தினால் போலந்தில் விபச்சாரத் தொழிலை மேற்கொள்ள வேண்டியுள்ளது ' என்கின்றார்.

பிராங்பேர்ட்க்கு அண்மையில் உள்ள போலந்து நகரமான ஸ்லுபிஸ் (Slubice) மூலம் ஜேர்மன் வாடிக்கையாளர்களை கவர்ந்திழுக்க பல நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. ஸ்லுபிசில் உள்ள பல பெண்கள் கிழக்கு ஐரோப்பியாவுக்கு செல்லக் காத்திருக்கும் ரஷ்யப் பெண்களாவர்.

நத்தாஷா, இரா ஆகியோர் ஜேர்மனுக்கு கடத்தி வரப்பட்ட பின் பல வாரங்கள் தரகரின் வீட்டினுள் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர். அவர்களது காலை ஆகாரம் பாண் துண்டு மட்டுமே. அது முழு நாளுக்குமான ஆகாரமாகிப் போனது தான் துன்பகரமானது. பசியைப் பொறுக்க முடியாத நத்தாஷா, நாயின் உணவுத் தட்டில் உள்ள காய்ந்த நாய் உணவினை கூடத் தனது ஆகாரமாக்கிக் கொண்டாள்.

விபச்சார விடுதியில் சில சந்தர்ப்பங்களில், 8 மணித்தியால கால எல்லையில் 10 வாடிக்கையாளர்களை சந்தோஷப்படுத்த நேர்ந்தது.

"அப்பொழுது உங்களுக்கு எந்தவித உணர்வும் எஞ்சியிருக்காது. நீங்கள் கண்களை மூடிக்கொள்வீர்கள். அதன்பின் கேட்கும் ஒரே சத்தம் விடுதியின் சங்கீதம் மட்டுமே. உங்களுக்கு எதுவும் நினைவிலிருக்கப் போவதில்லை." என்பது இவ் அனுபவம் தொடர்பான நத்தாஷாவின் வெளிப்பாடு.

இறுதியில் அயலவர்கள் சிலரால் அவர்கள் இருவருக்கும் தமது நாட்டை நோக்கிச் செல்ல உதவியளிக்கப்பட்டது.

நத்தாஷா இன்று மொஸ்கோவில் விபச்சாரி. அன்று போல் அவள் இன்று ஓர் ஆசிரியை அல்ல. பணம் படைத்த வாடிக்கையாளர்களிடம் மணித்தியாலத்திற்கு 150 டொலர் அறவிட்டு, தொழில் செய்ய நத்தாஷா பழகி விட்டாள்.

"சில வேளைகளில் உங்களுக்கு எதிலும் மாற்றம் இருக்காது. நீங்கள் சீக்கிரமே உணர்ச்சியற்ற பிண்டமாகி விடுவீர்கள். அப்பொழுது உங்களுக்கு எது பற்றியும் அக்கறையிருக்காது . அது நீங்களே ஆயினும்." என்கிறாள் நத்தாஷா.

□

நன்றி - நூலகத்திட்டம்





வடக்கு கிழக்கு யுத்தத்தில் சிக்கிக் கொண்ட எல்லைக் கிராமங்களின் தகவல்களைத் தேடும் பிரஜைகள் ஆணைக்குழு, சனிக்கிழமை மற்றும் ஞாயிறு தினங்களில் புத்தளம் மாவட்ட புளியங்குளம், மஹாகம, இலவங்குளம் பிரதேசங்களில் சாட்சிகளை விசாரித்தது.

முதல் தினம் சாட்சிகளை விசாரிக்கவென விரிவுரையாளர் லீலா ஐசெக், சட்டத்தரணிகள் நிமல்கா பெர்ணான்டோ, பாயிஸ் ஆகியோர் கலந்து கொண்டனர். இரண்டாம் நாள், பேராசிரியர் காலோ பொன்சேகா, சட்டத்தரணி பாயிஸ், மாலினி, பொன்னையன் ஆகியோரினால் சாட்சிகள் விசாரிக்கப்பட்டனர். ஆணைக்குழுவின் செயலாளராக எஸ். சிவகுருநாதன் செயற்படுகின்றார்.



## "வாழ்வதற்கு வழியில்லாததால் சிலர் காட்டை அழிக்கின்றனர்"

- சமிந்த ருவன்சிறி, கறோலகஸ்வெவ.

"நான் உ/தரம் வரை கற்றுள்ளேன். எல்லைக் கிராமத்தில் வாழும் இளைஞன் என்ற வகையில், இங்கு வாழும் இளைஞர்கள் தொடர்பாக அரச அதிகாரிகள் எதுவித அக்கறையும் காட்டுவதில்லை என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகின்றேன்.

இங்கு வாழும் இளைஞர்கள் வேலையில்லாப் பிரச்சினைக்கு முகம் கொடுக்கின்றனர். இந்தப் பிரதேசங்களில் உள்ள தொழில்களில், அதிகாரிகளுக்கு தெரிந்தவர்களை சேர்ப்பதால், இளைஞர்கள் வேறு வகையில் பணம் உழைக்கப் பழகிக் கொண்டனர்.

சிலர் பாதுகாக்கப்படும் வனப்பிரதேசங்களுக்கு சென்று கள்ளத்தனமாக மரங்களை வெட்டி உழைக்கின்றனர். சிலர் இராணுவத்தில் சேர்கின்றனர். இவர்கள் தமிழ் மக்கள் மீதான வெறுப்பினால் இராணுவத்தில் சேரவில்லை. பணம் இல்லாததே இதற்கான மிகப் பெரும் காரணம். இளைஞர்களாகிய நாம் எந்நாளும் இப்படி வாழமுடியாது. இந்த யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வந்து, வேலை வாய்ப்பைப் பெற்றுத்தருமாறு நாம் அரசாங்கத்தை தாழ்மையுடன் கோருகிறோம்."

## "ஆயுதமும் வேண்டாம்! யுத்தமும் வேண்டாம்!!"

புத்தளம் மாவட்டத்தின் புளியங்குளம், இலவங்குளம், மகாகம மக்கள்.



## "யுத்தத்தினால் பாதிப்புறும் சிறுவர்களுக்கு பாடசாலைகளிலும் ஆதரவில்லை."

எம். ஏ. அனில் புஷ்பகுமார - ஆசிரியர்.

"எனது ஊர் சிலாபம். நான் இங்கு ஆசிரியராக 9 வருடங்களாக சேவை செய்கின்றேன். குறிப்பாக புத்தளம் மாவட்டத்தில் பெரும் ஆசிரியர் பற்றாக்குறை காணப்படுகிறது. தற்போதைய நிலையில் ஆயிரக்கணக்கான ஆசிரியர் வெற்றிடங்கள் காணப்படுகின்றன. இந்தப் பிரச்சினை புத்தளம் கல்வி வலயத்தைப் பெரிதும் பாதித்துள்ளது. இந்தப் பிரிவுகளில் குறிப்பாக கரோலகஸ்வெவ, வனாத்தவில்லு பிரதேச பாடசாலைகளில் யுத்தம் காரணமாக பெரும் வெற்றிடம் நிலவுகின்றது.

எனினும், குருணாகலை மாவட்டத்தில் பல ஆசிரியர்கள் இருக்கின்றனர். அவர்கள் மோசமான பிரதேசங்களில் ஒருநாளும் சேவை செய்யாதவர்கள். அவர்களை ஒரு போதும் புத்தளம் மாவட்டத்துக்கு அனுப்ப மாட்டார்கள்.

அவர்களை அனுப்பும் வேலைகள் அரசியல் தலையீட்டினால், தடைப்படுகின்றது. அரசியல்வாதிகள் தமது வாக்குகளைப் பற்றியே பெரிதும் எண்ணுகின்றனர்.

இந்த யுத்தத்தினால் தாக்குதலுக்குள்ளாகும் பிள்ளைகளை கவனத்திலெடுத்து, கல்வி அதிகாரிகள் சரியான ஆசிரியர் இடமாற்ற கொள்கைகளைத் தயாரிக்க வேண்டும் எனக் கூற விரும்புகிறேன்."

## "தேர்தல் இல்லாவிட்டால், புலிகள் தாக்கியவுடன் தாம் மந்திரி எம்மைப் பார்க்க வருவார்."

ஆர். இந்திராணி, இலவன்குளம்.

"நானொரு தமிழ்ப் பெண். ஆனால், நாம் அனைவரும் ஒன்றாகவே இருக்கிறோம். எம்மிடம் இனபேதம் எதுவுமில்லை. ஒற்றுமையாக இருக்கிறோம். இருப்பினும், எமது வாழ்க்கை மிகவும் கடினமாக உள்ளது. எம்மைப் பார்க்க அரசாங்க அதிகாரிகளோ, பாராளுமன்ற உறுப்பினர்களோ வருவதில்லை. குறைந்தது, புலிகள் எம்மைத் தாக்கினால், இல்லாவிட்டால் தேர்தல் நடந்தால் தான் எம்மைப் பார்க்க வருவார்கள். எம்மைப் பார்க்க அரசியல்வாதிகள் கூட இங்குள்ள அதிகாரிகளை ஊக்குவித்து நடவடிக்கை எடுப்பதில்லை".


## "புத்தளத்தின் அரச மொழி ஆங்கிலமா?"

டி.எம்.செனவிரத்ன, மஹாகம.



"சுமார் 1 1/2 மாதங்களுக்கு முன் பொலிசார் பெற்றோல், டீசல் கொண்டுவரப்படும்போது தம்மிடம் அனுமதி பெறவேண்டும் எனச் சட்டம் கொண்டு வந்தனர். இதற்கு முன் 8 லீற்றர் கொண்டு வரலாம். இப்பொழுது அப்படிக் கொண்டு வர முடியாது.

பெற்றோல் கொண்டு செல்ல புத்தளம் பொலிசில் பேர்மிட் கேட்டால், நாமறியாத ஆங்கில மொழியில் படிவம் தருகிறார்கள். அதைக் கொடுத்து விட்டு, பிரதி பண்ணி விட்டு மீண்டும் ஒப்படையுங்கள் என்கிறார்கள். நாமும் பிரதி செய்துவிட்டு கொடுக்கிறோம். அவ்வாறு செய்யாவிட்டால் பேர்மிட் கிடைக்காது."



## 'ஆயுதமும் வேண்டாம், யுத்தமும் வேண்டாம்!

- ஜே.என். மெட்டில்டா, அறுவைக்காடு.

"என் கையிலிருக்கும் குழந்தை யுத்தத்தினால் பெற்றோரை இழந்துவிட்டது. இவ்வாறாக எத்தனை குழந்தைகள் இங்கு உள்ளன தெரியுமா? இந்தப் பிள்ளை வளர்ந்தவுடன் நான் அதன் சொந்தத் தாயில்லை என்பதை அறிந்தால், அது கட்டாயம் யுத்தத்தைச் சபிக்கும்.

எங்களது கிராமத்தில் வாழும் சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்களுக்கிடையில் எந்தவித பேதமும் இல்லை. அதனால், ஒவ்வொருவரது தனிப்பட்ட தேவைக்காக இந்த யுத்தத்தை மேற்கொள்ளாமல் உறுதியான தீர்வின் அடிப்படையில் யுத்தத்தை நிறுத்த வேண்டும். ஏனெனில், நிராயுதபாணிகளான நாம் யுத்தத்திற்காக வாழ்க்கையை தியாகம் செய்ய முடியாது".


நன்றி: யுக்திய
தமிழில்: ரத்னா

நன்றி - நூலகத்திட்டம்



# தேவதையின் சமாதானம்

சம்மாந்துறை எம். எம். நௌபாத்



செய்தி காட்டுத்தீ போல வேகமாய் பரவியது.

வெள்ளிக்கிழமை காலை எழுந்திருந்த மக்கள் எல்லோரும் ஒருவகை எதிர்பார்ப்புடன் மற்றவர் முகத்தை நோக்கினர். ஒவ்வொரு குடும்பத்திற்குள்ளும் செய்தி உறுதிப்படுத்தப்பட்ட பின்னர் மெல்ல மெல்ல வெளிவர ஆரம்பித்தது.

மூட நம்பிக்கைக்குள் புதைந்து போயிருந்த மக்கள் தாம் முதன் முதலில் இந்தச் செய்தியினை நம்பினர். வீட்டின் அகல நீளத்தில், செல்வமும் வறுமையும் வரும் என நம்பியவர்களும் சாமூலை, நாட்களின் வெற்றி தோல்வி என்பவைகளில் நம்பிக்கை கொண்டவர்களும் இவர்கள் தாம். பூனை ஒன்று குறுக்கால் போவதால் காரியம் தோல்வியுறுவது போல இந்தச் செய்தி உண்மையிலும் உண்மை என மார் தட்டிக் கொண்டனர்.

சோதிடக்காரர்கள் காலை எழுந்த கையுடன் தமது பழைய சோதிட ஏடுகளைப் புரட்ட ஆரம்பித்தனர். அந்த ஏடுகள் எதிலும் இந்தச் செய்தி பற்றிய அறிவிப்பு எதுவுமிருக்கவில்லை. வார, மாத பலன்கள் பத்திரிகைகளுக்கு எழுதும் அவர்களின் எந்தக் கணக்குகளுக்குள்ளும் இந்த புதிர் அகப்பட்டுக் கொள்ளவே இல்லை. போர்த் தலைவர்களின் மரணக் கெடுவையும் அதிகாரம் கொண்டவர்களின் வெற்றியையும் சொல்லி காத்து ஏமாந்து போன மக்களைப் பற்றிய எந்தக் கவலையும் அவர்களுக்கில்லை. அதனால் சளைத்துப் போகாமல் ஏதேதோ கணக்குகள் காட்டி செய்தியை நிரூபணமாக்கிக் காட்டினார்கள்.

இத்தகையதான விடயங்களை முற்றாக நிராகரித்துத் திரிந்தவர்களின் நிலை தான் மிகக் கவலையாக இருந்தது. அவர்கள் பகிரங்கமாக பேசுபவர்கள். முன்னிரவைய நிகழ்வு அவர்கள் மனதிலும் சலனத்தை ஏற்படுத்தியிருந்தது. பால் குடிக்கும் சிலைகள் பற்றியும், குர்ஆனுக்குள் முடி இருப்பது பற்றியும் வந்த செய்திகளை நிராகரித்து விட்டது போல, இதனை அவர்களால் பகிரங்கமாக நிராகரித்து விட முடியவில்லை. பத்துப் பைத்தியக்காரர்களுக்குள் ஒரு நல்லவன் போல - பத்துப் படித்தவர்களுள் ஒரு மூடனின் நிலைபோல இங்கு எதுவும் நடக்கவில்லை. எல்லோருமே ஒரு வகையில் சுய் அறிவை இழந்து தான் போனார்கள்.

தங்கள் அறிவியல் சித்தாந்தத்துக்குட்படாத இந்நிகழ்வு பற்றி விஞ்ஞானிகள் அனைவரும் தலைமுடியினைப் பியத்துக் கொண்டிருந்தார்கள். உலகத்தின் ஆரம்பம், இரவு - பகல் உண்டாதல், அண்டவெளிப்பாதை, சூரிய வெப்பம், சந்திர ஈர்ப்பு விசை என ஆய்வு ரீதியாக நிரூபித்த அவர்களால் இதற்கு தெளிவொன்றைக் காண்பதற்கு முடியவில்லை. உலக பாரத்தைக் கூட அளந்து விட்ட அவர்களால் இந்த மர்மத்தை மட்டும் புரிய முடியவில்லை. "இது தீர்க்க முடியாத தெரியாக் கணியம்" என அவர்களின் தினக்குறிப்பில் எழுதிக் கொண்டனர்.

வானம், நீலமும் இல்லாமல் வெள்ளையும் இல்லாமல் ஒருவகை ஊதா நிறத்தில் காட்சி தந்தது. ஆளளவு உயரமான ஆயிரக்கணக்கான ஈர்க்குகள் நடப்பட்டிருந்தன. அவைகளுக்கு நடுவே மலர்களால் குவிக்கப்பட்ட மேடை ஒன்று உருவாக்கப்பட்டிருந்தது. கண்கள், கால்கள், அலகு மற்றும் இறக்கை எல்லாம் தனி தூய்மையான வெண்ணிறங் கொண்ட புறாக்கள் ஆயிரக்கணக்கில் பறந்து கொண்டிருந்தன. சிறு சிறு துண்டுகளாக வெட்டப்பட்ட ஒலிவ் மரத்தின் கிளைகள் நிலமெல்லாம் தூவி விடப்பட்டிருந்தன.

இனிமேலும் இதைவிட ஒரு அழகான உடையை உருவாக்க முடியாது. அத்தகைய வேலைப்பாடுகள் கொண்ட வெண்ணிறத்தாலான பஞ்சுபோன்ற நீள சட்டை ஒன்றை அவள் அணிந்திருந்தாள். கழுத்துக்கு மேற்புறமும் மணிக்கட்டு வரையான கையும் அதேயளவு காலும் தெரியக் கூடியதாக இருக்க, அவள் உடம்பின் அனைத்துப் பகுதிகளும் மூடப்பட்டிருந்தன. அழகுக்கு உயர் இலக்கணமான அவள் பாதங்களில் கொலுசைத் தவிர பாதணிகள் எதுவுமே காணப்படவில்லை.

மேடையில் நின்றவாறே மிக மெல்லியதான மென்மையான சாரீரத்தில் அவள் பேசினாள். "அன்பான உங்களை நான் நேசிக்கிறேன். உலகம் சமாதானத்தை விட்டும் தூர சென்று விட்டது. நான் உலகத்தில் இதுவரை ஏற்படாத சமாதானத்தை ஏற்படுத்தப் போகிறேன். இந்தத் திங்கள் இருபத்தியேழாம் நாள் மாலை இமய மலையடிவார தென் பகுதியில் அனைவரும் ஒன்று கூடுங்கள். அங்கே நீங்கள் நம்ப முடியாத அளவில் நான் தோன்றுவேன். சமாதானத்திற்கான எனது முதற்குரல் அங்கொலிக்கும். வருக சமாதானம்..." என்று கூறியவாறே அவள் மறைந்து போனாள். பூமேடை, புறாக்கள், ஈர்க்குகள், ஒலிவ் மரக்கிளைகள் அத்தனையும் மறைந்து போயின.

பஞ்சு மெத்தைக் கட்டிலினிலும், ஓலைப் பாயினிலும் விமானம், பாதையோரம், குடிசை, பங்களா என தூங்கிக் கொண்டிருந்த உலகின் அனைத்து மக்களும் கண் விழித்துக் கொண்டனர். பின் தாங்கள் கண்டது வெறும் கனவு என்பது அவர்களுக்குப் புரிந்து போனது. கனவான சமாதானக் கவலையுடன் அவர்கள் தூங்கியும் போயினர். காலை எழுந்ததும் தூங்கிய மானிடருக்கெல்லாம் பெரும் அதிர்ச்சியாகிப் போனது. சமகாலத்தில் ஒத்த தன்மையுள்ள கனவை சகல மக்களும் எவ்வாறு காண முடியும்? இது உண்மையில் நடக்கக் கூடிய விடயம் தானா? எத்தகையதான நிகழ்தகவு? எந்தக் கணிதக் குறியீட்டுக்குப் பொருந்தும்? என விடை தெரியாத கேள்விகளால் தங்களை வதை செய்து கொண்டிருந்தனர்.

வெள்ளிக்கிழமை விடியல் உண்மையில் பேரதிர்ச்சி கொண்டதாகத் தான் இருந்தது.

அரசு தொடக்கம் சுயாதீனம் வரையான அத்தனை தொலைக்காட்சி, வானொலி, பத்திரிகை நிறுவனங்களும் போட்டா போட்டியுடன் - உணர்ச்சி கலந்த வசனங்களுடன் செய்திகளை வெளியிட்டன. தேர்தல், யுத்த காலங்களை விடவும் அதிகமாக பத்திரிகைகள் விற்றுத் தீர்த்தன. தொலைக்காட்சி, வானொலி பிரதிபலிப்பு பெட்டிகளின் முன் மக்கள் குமுறினர். எவராலும் வதந்திகளைப் பரப்ப முடியவில்லை. சமாதானம் வரும் பற்றியதான செய்தி ஏககாலத்தில் யாவர்க்கும் அறிவிக்கப்பட்டிருந்தது. கனவு வந்தவேளை தூங்காத உலகின் ஒரு பகுதி மக்களுக்கும் இந்தச் செய்தியினை நிராகரிக்கக் கூடிய எவ்வித்த் துணிவும் இருந்ததாகத் தெரியவில்லை. சுற்றிவர தொடர்பு சாதனங்களை வைத்துக் கொண்டு நடுவில் அவர்கள் அமர்ந்து கொண்டனர்.

தேவதையின் சமாதானத்தில் அசைக்க முடியாத நம்பிக்கை கொண்ட கூட்டமொன்று, மக்கள் கூடியிருக்கக் கூடியதான ஒரு பெரும் நிலப் பகுதியை இமய மலையடிவாரத்தில் சுத்தம் செய்யவாரம்பித்தனர். சமாதானம் என்பதனை விட விளம்பரத்தில் நாட்டம் கொண்ட - ஒலிபெருக்கிகளை வாடகைக்கு விடும் பாரிய நிறுவனமொன்று மலையடிவாரத்தில் தமது சகல சாதனங்களையும் கொண்டு வந்து இலவசமாய் பொருத்தினார்கள். தேவதையின் வருகை பற்றிய கனவுச்செய்தி உண்மையாகினும் பொய்யாகினும் கூடப்போகும் மக்களுக்கு மின், நீர் மற்றும் பாதுகாப்பு வசதிகளை அரசாங்கம் சிரத்தையுடன் செய்தது. புகழ்பெற்ற செய்மதி தொலைக்காட்சி, வானொலி நிறுவனங்கள் சமாதானத்தின் முதற்குரலை உலகமெல்லாம் நேரடி ஒலிபரப்புச் செய்ய சகல ஏற்பாடுகளையும் செய்தன. உலகின் பல பகுதிகளில் இருந்தும் பத்திரிகையாளர்கள் ஆர்வமாய் இமயமலை நோக்கிப் படையெடுத்தனர். ஒரு பெரும் யுகப்பிரளயம் ஒன்றுக்கான ஏற்பாடுகள் அங்கு நடந்து கொண்டிருந்தன.

தோன்றும் சமாதானத்தின் நம்பிக்கையில் மக்களின் முகங்கள் பெரும் பிரகாசம் கொண்டதாய் மாறியது.

தங்களை கனவான்கள் என்று வர்ணித்துக் கொள்ளும் உலகின் சக்தி வாய்ந்த சிலர் அதிர்ச்சியுடன் ஒன்று கூடினர். பில்லியன் கணக்கான வருமானம் கொண்ட அவர்கள் தான் இன்று உலகின் மிகக் கலவரம் கொண்டவர்களாக இருந்தனர். கணக்கை மீறிய தங்கள் ஆயுத விற்பனை வருமானம் மண் கவ்வும் துக்கம் அவர்கள் முகத்தில் தெளிவாகத் தெரிந்தது.

மிகப்பருமனாகவும் முகம் ஊதிப்போயும் இருந்த ஆயுத உற்பத்தியாளர்கள் சங்கத் தலைவர் தன் பேச்சை ஆரம்பித்தார். "அன்பின் கனவான்களே! நாம் ஆயுத விலை ஸ்திரத்துக்காக ஒன்று கூடினோம். அதில் நாம் பலமுறை தர்க்கம் செய்து கொண்டதுண்டு. ஆனால், இப்போது இங்கே யாரும் தர்க்கம் செய்து கொள்ளக் கூடவில்லை. உலகத்தில்

→

நன்றி - நூலகத்திட்டம்



சமாதானம் தோன்றிவிடும் என்ற பயங்கரத்தில் இன்று நாம் கூடியுள்ளோம். உலகில் இன்று பேசப்படும் ஒரே செய்தியான அந்த தேவதையின் வருகை உண்மையாகிப் போனால் எமது நிலை மிகப் பரிதாபகரமானதாகி விடும். எமது மிக முக்கிய எதிரி சமாதானம் ஒன்றே தான்...."

"என்னைக் குறுக்கீடு செய்வதற்காக மன்னிக்கவும். இது பற்றி கவலைப்படத் தேவையில்லை என நினைக்கின்றேன். அந்தத் தேவதை தேவையில்லை. நாம் நினைத்திருந்தால் சமாதானம் என்பது எப்போதோ வந்திருக்கும். அதனால் எம்மை மீறி எந்த தேவதையாலும் சமாதானம் கொண்ட உலகை உண்டாக்க முடியாது..." என்று தலைவரின் பேச்சை இடைமறித்தார் உலக முன்னணி ஆயுதக் கம்பனியின் தலைவர்.

"ஆம். அதைத் தான் நான் சொல்கின்றேன். ஒரு கற்பனைக்காக அந்தச் சமாதானத்தின் குரல் இருபத்தியேழாம் திகதி ஒலிக்குமானால் - அரசாங்கங்களுக்கும் பயங்கரவாதிகளுக்கும், மலிவு விலையிலும் இலவசமாகவும் ஆயுதங்களை நிறையக் கொடுப்போம். ஆயுதம் கொண்ட எவரும் அடங்கி விடப் போவதில்லை. தொடர்வதும் பழைய கதை தான். யுத்தம் அன்றி சமாதானம் இங்கு இனி வரப்போவதில்லை..." என்று சொன்ன மற்றொரு ஆயுதக் கம்பனி உரிமையாளரின் கூற்றை அனைவரும் ஆமோதித்தனர். ஆரம்பத்தில் இருந்த கலவரம் குறைந்த நிலையில் கூட்டத்தை முடித்துக் கொண்டனர்.

தேதிக்கு முன்னதாகவே ஒரு கோடியை நெருங்கிய மக்கள் இமயமலையடிவாரத்தில் குழுமினர். தேவதை அமர்ந்து பேசுவதற்காக உயர் பூ மேடை ஒன்று உருவாக்கப்பட்டிருந்தது. கனவில் வந்த அதே காட்சியை அங்கே சிரமத்துடன் அமைத்திருந்தார்கள். புறாக்களின் கண்கள் கறுப்பாகவும், கால்கள் பல நிறங்கொண்டதாகவும் இருப்பதனை அவர்களால் தவிர்க்க முடிவில்லை. ஈர்க்குகளும் ஆளளவு இருக்கவில்லை. முந்நூறு அடி உயரமான சமாதானப் புறா ஒன்றின் 'கட்டவுட்' நிறுவப்பட்டிருந்தது. அதன் நடுவே கையை உயர்த்தியவாறு நிற்கும் சமாதான தேவதையின் உருவம் கைதேர்ந்த ஓவியன் ஒருவனால் வரையப்படிருந்தது. மக்கள் முகத்தில் எதிர்பார்ப்பு தெளிவாய்த் தெரிந்தது.

சில நாட்களாக மனித மாமிசங்களை மட்டுமே உண்டு பழகி விட்ட நாய்களும், காகங்களும், கழுகுகளும் கவலை கொண்ட நிலையில் "தேவதை வரவில்லை" என்ற நற்செய்திக்காக காத்திருந்தன.

மெல்லிய தென்றல் காற்றுடன் ஒரு இனிய சுகந்தம் மலையடிவாரம் முழுவதும் மெதுவாகப் பரவியது. மின்னும் நட்சத்திரங்கள் இரவில் மட்டும் தெரிகின்ற பொழுதினும் இன்று மாலையிலே தெரிந்தன. அவைகள் மக்களை நோக்கி வேகமாய் வந்தன. வரும் போதே உருண்டையாகி வானிலே மறைந்து போயின. பறவைகள் சிலவற்றின் மெல்லிய கீச்சிடல் மக்கள் இரைச்சல் முன் காணாமல் போயின. ஒளி வட்டம் ஒன்று தோன்றி மறைய அதனுள் இருந்து அனைவரும் எதிர்பார்த்துக் கொண்டிருந்த அந்த சமாதான தேவதை அந்தரத்தில் தோன்றினாள். குழுமியிருந்த மக்கள் கத்தி ஆரவாரம் செய்தனர். மக்களை நோக்கி வேகமாய் இறங்கிய தேவதை சுமார் இருபது அடி உயரத்தில் அங்குமிங்குமாக மிதந்து கொண்டிருந்தாள். அவளின் அழகிய முகத்தை கண்ட மக்களின் ஆரவாரச் சத்தம் மேலும் அதிகரித்தது.

புன்முறுவல் பூத்த முகத்துடன் அமைதியாக இருக்கும்படி தேவதை கைகளை அசைத்துக் காட்டினாள். இறுதிச் சத்தம் சுமார் பத்து நிமிடங்களில் நின்றது. அவளின் அந்த அமைதிக் குரலுக்காக அனைவரும் காத்திருந்தனர். ஒலிபெருக்கும் சாதனங்கள் எதனையுமே பயன்படுத்தாது அனைத்துக் காதுகளினிலும் விழுமாறு அவள் உரையாற்றினாள். அவள் பேசியது எந்த மொழியென எவருக்கும் புரியவில்லை. ஆனால், அனைவருக்கும் உரையின் சமகால மொழிபெயர்ப்பு அவ்ளின் குரலினிலேயே வந்தது. ஆச்சரியத்தில் மக்கள் கிறங்கிப் போயினர்.

"யுத்தம் என்ற இராட்சனால் ஒடுங்கிப் போயிருக்கும் உலகத்தின் மாந்தர்களே....! போனவை போக வரும் நாட்கள் நல்லதாகட்டும். நீங்கள் ஆவலாய் எதிர்பார்த்திருக்கும் அந்த யுத்தம் அல்லாத சமாதான பூமியை சில நாட்களுக்குள்ளாகவே உங்களுக்குத் தருவேன் என்ற இனிப்பான செய்தியை முதன் முதலாக உங்களுக்குத்..." தேவதை முடிக்கவில்லை. மக்களிடமிருந்து வந்த கரகோஷமும், வெற்றி பெற்றதான இன்பக் கூக்குரலும் உச்ச ஸ்தாயில் ஒலித்தது. தேவதை தொடர்ந்தும் பேசினாள்.

"நீங்கள் சமாதானத்திற்கான தேவதையுடன் இருக்கின்றீர்கள். ஆனாலும், நீங்கள் மனிதன் என்ற கட்டுக்கோப்பிலிருந்தும் தூரச்சென்று விட்டதாக நினைக்கின்றேன். மதத்தின் பெயராலும் இனம், மொழி, நாடு, ஊர் என்றும் உங்களுக்குள் அடித்துக் கொள்கின்றீர்கள். அது உண்மை தானே...?" என்ற கேள்வியுடன் பார்த்த தேவதையை எதிர்நோக்கக் கூச்சப்பட்ட மக்கள் தலை குனிந்து நின்றனர். "சரி போகட்டும் நான் உங்களிடம் ஒரு கேள்வி கேட்கிறேன். அதற்கு உங்கள் பதில் என்ன...?" வினாவுடன் மக்கள் மீண்டும் தலையை உயர்த்தினர். சில வினாடிகள் மௌனமாயிருந்த தேவதை சற்று உயர் தொனியில் கேட்டாள்.



"உங்கள் இரத்தத்தின் நிறம் என்ன...?"

கேள்வி கேட்ட மாத்திரத்தில் மக்கள் பதிலின் ஓசை அலையலையாய் வந்தது.

தமிழைத் தாய் மொழியாய் கொண்டவர்கள், "சிவப்பு.. சிவப்பு..." என்று கத்தினர். ஹிந்தி மொழியினரோ "லால்.. லால்..." என்றனர். "புலா.. புலா..." என்று பிலிப்பைன் மொழிக்காரர்களும், "ரெட்.... ரெட்.." என ஆங்கில மொழியினரும் கத்தினர். சிங்கள மொழி பேசுபவர்கள் "ரத்து... ரத்து..." எனவும், கொங்கனி மொழியினையுடையோர் "தம்முட.. தம்முட..." எனவும், தெலுங்கு மொழி பேசுபவர்கள் "எருப்பு.. எருப்பு.." என்வும் சத்தமிட்டுக் கூறினர். இன்னும் தசக் கணக்கான பல மொழிகளில் இரத்தத்தின் உண்மை நிறம் உயர் குரலில் ஒலித்தது.

"நூறு வீதம் உண்மை கூறினீர்கள். உங்கள் இரத்தத்தின் நிறம் சிவப்பு என்பதை நானறிவேன். அப்படியாயின் உங்கள் இதயத்தில் தான் பிரச்சினை இருக்கின்றது. ஆனால், அது சிவப்பு நிறம் சம்பந்தப்பட்டதல்ல. கண்களுக்குப் புலப்படாத ஏதோவொரு விஷம் பரவியுள்ளது. அது என்ன? அதனைக் கண்டு பிடிக்கும் முயற்சியில் இப்பொழுதிலிருந்தே தீவிரமாக ஈடுபடப் போகின்றேன்...." வியப்புடன் பார்த்த மக்களைப் பார்த்து தேவதை மீண்டும் கூறினாள்.

"அந்த யுத்தமற்ற சமாதான பூமியை இன்னும் சில நாட்களுக்குள் தருவேன்...." முன்பைப் போலவே வேகமாய் ஒலித்த கரகோசம் திடீரென நின்றது. மக்கள் தேவதையை பயத்துடன் பார்த்தனர். அவளது வலது கை கத்தி போன்ற கூரிய ஆயுதமாக மாறியது. அவளைச் சுற்றி ஒரு வகை பயங்கரமான ஆயுதத்துடன் முரட்டு மனிதர்கள் தோன்றினர். தேவதையின் புன்னகை மாறவில்லை. அதே உடை, அதே அழகு எதிலுமே மாற்றம் இல்லை.

"நான் அந்த அழகிய சமாதானத்திற்கான நிகழ்வை இப்போதே தாமதமின்றி ஆரம்பிக்கப் போகின்றேன். கையை கத்தியாக்கிக் கொண்டு சமாதானம் பற்றி பேசுவதாக எண்ண வேண்டாம். சில நேரங்களில் ஆயுதம் மூலம்தான் சமாதானத்தை ஏற்படுத்த வேண்டியுள்ளது. நான் உங்கள் நெஞ்சங்களைப் பிளந்து இதயங்களை சோதனை செய்யப் போகிறேன்..." என்று சொன்னவள் திடீரென்று கீழே இறங்கினாள். கையில் முதலில் அகப்பட்ட மனிதனை இழுத்து அவன் நெஞ்சைப் பிளந்து இதயத்தை வெளியே எடுத்தாள். அதனை நாட்புறமும் திருப்பிப் பார்த்து விட்டு தூக்கி எறிந்தாள். இதயம் தனியே துடிக்க அவன் இறந்து போனான். சமாதானத்திற்காகக் கூடிய மக்கள் அபயக் குரல் எழுப்பியவாறே திக்குத்திசை தெரியாமல் ஓட ஆரம்பித்தனர். சன நெரிசலில் விழுந்து நசுங்குண்டு ஆயிரக்கணக்கானவர்கள் அவ்விடத்திலேயே மாண்டு போயினர். மக்கள் பாதுகாப்புக்காக நின்ற காவல் படையினர் தேவதையை நோக்கி தம் துப்பாக்கிகளை நீட்டினர். அவையோ தோல்வியில் கண்களை கசக்கின. சொற்ப வேளைக்குள்ளேயே ஆயிரத்தை தாண்டிய இதயங்கள் மைதானமெங்கும் நிறைந்தன.

உலகம் அதிர்ச்சிக்குள்ளாகி பிரமித்துப் போய் நின்றது. ஆயுத பலம், மூளைப்பலம், மனித வளம் என்று சக்தி பெற்ற மக்கள் கூட்டம் தேவதையை அழிக்க சகல வகையான முயற்சிகளையும் செய்தனர். அவர்களின் முயற்சிகள் எதுவுமே பலிக்கவில்லை. எந்த ஆயுதங்களும் அவளை அழிக்க முடியாது திணறின.

புத்திசாலித்தனம் எல்லாம் பொய்த்தன. அவளைப் பிடிக்க உலகில் சடுதியாக உருவாக்கப்பட்ட பல பொறியமைப்புகள் எதுவுமே வெற்றியைத் தரவில்லை. அரசாங்கம், போராளிகள், பயங்கரவாதிகள் எல்லோரினதும் ஒரே எதிரியாய் தேவதையைத் தான் கண்டன. எனினும், எல்லா முயற்சிகளும் தேவதையிடம் செல்லுபடியற்றதாயின.

சமாதான தேவதையின் இதயப் படுகொலை ஆரம்பித்து மூன்று நாட்களுக்கு மேலாகிவிட்டன. இந்தியாவின் இமய மலையடிவாரத்தில் ஆரம்பித்த அவளது பயங்கரமான கொலைவெறி ஒவ்வொரு நாடாக முன்னேறியது. அவளைச் சுற்றி அந்த முரட்டு மனிதர்கள் எந்நேரமும் காவல் காத்தனர். இடையிடையே இளமிதயங்களை சுவைத்துப் பார்த்தனர்.

தேவதைக்கு எதிரான எந்தப் போராட்டமும் தோல்வியே என்பதை மக்களிற் சிலர் உணர்ந்தனர். அவர்கள் ஓடுவதை விட்டும் அவளின் முன் அமைதியாகச் சென்றனர். அவளைக் கொல்லும் வெறி மனதில் இருந்தது. எனினும், வெளிக்காட்டாது "எமது அன்பான தேவதையே..." என அழைத்தனர். அவளும் புன்முறுவல் பூத்தவாறே "சொல்லுங்கள்.." என்றாள். மக்களுக்கு மகிழ்வுடன் தைரியமும் வந்தது. அவர்களில் ஒருவர் "நீங்கள் எங்களுக்கு சமாதானத்தையும் அமைதியான பூமியையும் தருவதாகக் கூறினீர்கள். ஆனால், ஓரிரண்டு நாட்களுக்குள் கோடிக்கும் அதிகமானவர்களை கொன்று விட்டதாக அறிகின்றோம். இது எந்த வகையில் நியாயமானது..." என்று நடுங்கியவாறே கேட்டனர்.

அதே புன்னகையுடன் அவள் சொன்னாள். "நான் அந்த சமாதானத்தை இந்த உலகுக்குத் தந்து விட்டுத் தான் போவேன் இது சத்தியம். நீங்கள் கவலை கொள்வது அனாவசியமானது. என் இலட்சியம் சீமர்தானமே. எனினும் அதற்காக சில தியாகங்களைப் புரிய வேண்டியுள்ளது. அதனால், அழகிய நானும் ஆயுதம் ஏந்தும் துர்ப்பாக்கியத்துக்குள்ளாக்கப்பட்டுள்ளேன்.." என்று மக்களைப் பார்த்தவள்.. "உங்கள் இதயம் தூய்மை கொண்டதா என நான் அறியேன். அதை உங்கள் இதயம் தான் அறியும். எனவே...." அவள் முடிப்பதற்கிடையில் ஓட ஆரம்பித்தவர்கள் ஒவ்வொருவரையும் துரத்திப் பிடித்தாள்.

யுகப் பிரளயத்தின் பதினொராவது நாள்.

கடல் செந்நீல நிறமாய் இருந்தது. மரம், மலை என பூமி எங்கும் இரத்தத்தின் சிவப்பு நிறமும் வாடையும் நிறைந்திருந்தன. காட்டு ஜீவராசிகள் முதல் நாட்டு விலங்குகள் வரை அனைத்தும் காட்டுக்குள் ஒளிந்திருந்தன. தேவதையின் உடலில் சிவப்பைத் தவிர எந்நிறத்தையும் காணமுடியவில்லை. உச்சந்தலையில் தொடங்கி உடம்பு முழுவதும் புது இரத்தம் வழிந்து கொண்டிருந்தது. கத்தியான கை, சாதாரண கையாய் மாறியது. முரட்டு மனிதர்கள் மாயமாய் மறைந்து போயினர்.

சமாதானம் வருமா வராதா என்ற நாட்கள் முடிவுக்கு வந்தாகி விட்டன.

தேவதை மீண்டும் பேசினாள். குரலில் முன்னைய மென்மை இருக்கவில்லை கடூரமாய் இருந்தது. சத்தமாய் கூக்குரலிட்டாள்.

"வெற்றி! வெற்றி..!! என் இலட்சியம் வென்றது. உலகில் ஒரு போதும் இல்லாத சமாதானம் வந்தது. வாழ்க சமாதானம்...!!

அவளின் கடூரக்குரலை கேட்பதற்கு உலகில் எந்தவொரு மனிதனும் உயிருடன் இருக்கவில்லை. கத்தியவாறே மேலெழுந்த தேவதையின் உடம்பில் இருந்து வீழ்ந்த மனித இரத்தத்துளிகள் அரை உயிராய் துடித்துக்கொண்டிருந்த என் இதயத்தில் பட்டுத் தெறித்தன.

□

நன்றி - நூலகத்திட்டம்



# இலக்கியப் பிரதி வாசகனின் பன்முக அடையாளங்களை மோதி அழிக்கும் கவச வண்டியா?

அ.மார்க்ஸ்

'விஷ்ணுபுரம்' நாவலில் பாராட்டத்தக்க கூறுகளைப் பாராட்டியும் விமர்சனமாகச் சொல்லப்பட வேண்டியவை எனத் தான் கருதியதை சுட்டிக் காட்டியும் மிகவும் பொறுப்போடு எழுதப்பட்ட ரஞ்சகுமாரின் விமர்சனத்திற்கு (சரிநிகர் 147, 148) ஜெயமோகன் அவரது வழக்கமான பாணியில் எதிர்வினை புரிந்துள்ளார். வழக்கம்போல பேராசிரியர் கைலாசபதி அவர்களது பெயரையும் தேவையில்லாமல் இழுத்துக் காய்ந்துள்ளார்.

கை லாசபதி அவர்களது ஆய்வுகளிலும், அவர் ஏற்றுக் கொண்ட ஆய்வு முறையிலும் நிறை குறைகள் இருக்கலாம். ஒரு இலக்கிய ஆக்கத்தை அணுகுகின்ற பல்வேறு நெறிமுறைகளில் ஒன்றாக வர்க்கப்பார்வையும் வரலாற்றுப் பொருளியல் அணுகல் முறையும் உள்ளது என்பதையும், அடித்தள மக்கள் நோக்கில் அவை ஆற்றத்தக்க பங்களிப்பையும் புறக்கணித்துவிட இயலாது. இது ஒன்றே எல்லாச் சூழலுக்கும் எல்லாக் காலங்களுக்குமான ஒரே ஆய்வு முறை எனக்கருதிக் கொண்டதே மார்க்சியர்கள் மேற்கொண்ட பெரும்பிழை.

இந்நாவலின் முதற்காண்டத்தின் 'ஞானாதிபதி'யாகிய சூரியதத்தரின் கூற்று ஒன்றின்படி அவரது காலத்தைக் கி.பி. 700 எனவும் அஜிதனுக்கும் பவதத்தனுக்கும் நடைபெற்ற 'மாபெரும் விவாதத்தின்' காலத்தை சுமார் கி.பி. 1ம் நூற்றாண்டு எனவும் கணிக்கலாம். அக்னிதத்தன் இந்த ஆலயத்தை நிறுவியது அதற்கும் முந்தி. விஷ்ணு புரண்டு படுத்து பிரளயம் நிகழ்வது சுமார் கி.பி. 13ம் நூற்றாண்டு. ஆக, ஒரு ஆயிரத்து முன்னூறு ஆண்டு வரலாற்றுப் பின்னணியில் ஒரு வைணவக் கோயிலை மையமாகக் கொண்டு எழுதப்பட்ட வரலாற்று நாவல் இது. இந்த நாவலில் காணப்படும் பல வரலாற்றுப் பொருத்தமின்மைகளைப் புனைவு என்னும் அடிப்படையில் பெரிதுபடுத்தாமல் விட்டு விடுவோம். ஆனால், இவ்வளவு பெரிய கோவிலையும், அதைச் சார்ந்துள்ள சடங்கு மற்றும் அதிகார வர்க்கங்களையும் படை மற்றும் ஊழியர்களையும் தாங்குகின்ற உபரி என்பது உருவாகியது. அதை உருவாக்கிய உழைக்கும் மக்களின் வாழ்க்கை, அது சார்ந்த கேள்விகள் என்பன ஏன் இந்நாவலில் ஒரு பொருட்டாகக் கருதப்படவில்லை என்கிற ரஞ்சகுமாரின் எளிய ஒரு கேள்வியைக் கண்டு ஜெயமோகன் ஏன் இவ்வளவு கோபம் கொள்ள வேண்டும்?




இலக்கியப் பிரதி குறித்த நவீனமான சில சிந்தனைகளைத் தனக்குத் தோதாகத் திரித்து 'இலக்கியம்', 'படைப்பு' போன்ற கருத்தாக்கங்களின் புனிதத் தன்மையை மீண்டும் உயர்த்திப் பிடிக்க முயல்கிறார் ஜெயமோகன். 'படைப்பாளி இல்லை' என்னும் கருத்தாக்கம் வாசகனுக்கு இதுகாறும் இல்லாத முக்கியத்துவத்தைச் சுட்டும் நோக்கில் புரிந்து கொள்ளப்பட வேண்டும். பிரதியின் இறுதி அர்த்தம் என்பதற்குப் பதிலாக வாசிப்பு அரசியலின்பால் கவனத்தை ஈர்க்கும் மிகவும் ஆழமான சிந்தனை இது. பிரதி, சகபிரதிகள் மூலமாக வாசிப்பில் எத்தகைய கட்டுத்திட்டங்கள் (Constraints) திணிக்கப்படுகின்றன, இந்த அதிகாரத் திணிப்புகளுக்கு எதிராக வாசகத் தன்னிலை நடத்துகிற ஒரு போராட்ட நிகழ்வாக வாசிப்பு எவ்வாறு அமைகிறது என்பன போன்ற சிந்தனைகளை உசுப்புகிற கருத்தாக்கம் 'படைப்பாளி இல்லை' என்பது. இந்த அதிகாரப் போராட்டத்தில் வாசகத் தன்னிலை தனது அடையாளத்தைக் கைவிடாது நிற்கும் நிலையை "அகங்கார தரிசனம்" என ஒதுக்கும் ஜெயமோகன், 'படைப்பாளி இல்லை' என்பதை வாசிப்பின் அரசியல் என்னும் தளத்திலிருந்து "படைப்பாக்கம்" என்னும் தளத்திற்கு மாற்றி,

> "(படைப்பாளி) ஒரு ஊடகமே. ஒரு சமூகத்தின் அதற்குமப்பால் மானுட குலத்தின் ஒட்டு மொத்தமான ஆழ் மனத்தின் (Sub Concious) ஒரு வெளிப்பாடுதான் அவனுடைய படைப்பு"

என விளக்கம் தருவது கவனிக்கத் தக்கது.

சாதாரண எழுத்துக்கள் போத மனத்துடன் (Concious) உரையாடுகின்றன எனவும் இலக்கியப் படைப்பு அபோத மனத்துடன் (unconcious) உரையாடுவதாகவும் அவர் மேலும் விளக்குகிறார். உடனடி அரசியல் நிகழ்வுகளுக்கு அப்பாற்பட்டதாக இந்த அபோத மனதின் உரையாடலைக் குறிப்பிடுகிறார். எனவே ஆழ்மனது, அபோத மனது முதலியவை அன்றாட சமூக இருப்பிற்கு (Social being) அப்பாற்பட்டது என்றாகிறது. படைப்பாளி இவற்றுக்கெல்லாம் அப்பாற்பட்ட ஒட்டுமொத்த மனத்தின் பிரதிநிதியாக இனம் காட்டப்படுகிறார். நவீன உளவியல்கூட இதனை ஏற்றுக்கொள்ளாது. சமூக இருப்பு மனதை நேரடியாகவும், ஆழ்மனதை மறைமுகமாகவும் பாதிக்கிறது என்பதே நடைமுறை. எனவே, 'போத மனது' மட்டுமே இனம், மதம், சாதி, வர்க்கம் ஆகியவற்றின் அடிப்படையில் மாறும் என்பதும் 'அபோதமனது' இவற்றுக்கெல்லாம் அப்பாற்பட்டது என்பதும் ஏற்றுக் கொள்ள இயலாத ஒன்று. ஒரு சமூகத்தின் ஒட்டு மொத்தமான ஆழ்மனத்தின் பிரதிநிதியாக ஒரு 'படைப்பாளி' உரிமை கொண்டாடுவது மிகப் பெரிய வன்முறை. இனங்களாகவும், சாதிகளாகவும், வர்க்கங்களாகவும் பிளவு பட்டிருக்கும். ஒரு சமூகத்திற்கு ஒட்டு மொத்தமான பிரக்ஞை சாத்தியமில்லை. டாக்டர் அம்பேத்கர் அவர்கள் (இவரும் ஒரு இந்தியச் சிந்தனையாளர் தான். எனினும் ஜெயமோகன் போன்றவர்கள் இதனை ஏற்பதில்லை.) குறிப்பிட்டது போல இந்தியச் சமூகம் ஒரு சமூகமே இல்லை. அது ஒரு எதிர்ச்சமூகம் என்கிற போது மூன்றாம், நான்காம் வருணத்தவர்கள், அதற்கும் அப்பால் நிறுத்தப்பட்டுள்ள பஞ்சமர்கள், இனக்குழுவினர் உள்ளிட்ட எல்லோருடைய ஆழ்மனத்தின் பிரதிநிதியாக நான் உள்ளேன் என ஒருவர் கூறுவதன் பொருளென்ன?

"பல்வேறு விதமான முடிவற்ற வாசிப்புக்கு இடமளிப்பதே சிறந்த இலக்கியப் படைப்பு" என ஜெயமோகன் சொல்வதில் நமக்கு கருத்து மாறுபாடு இல்லை. ஆனால், முடிவற்ற வாசிப்பு என்பதை எல்லையற்ற முறையில் நீட்டிக்கொண்டே போவதில் பல பிரச்சினைகள் உள்ளன. பிரதியின் வாசகங்கள் துண்டுக் காகிதங்களில் எழுதப்பட்டு 'லேபிள்' இல்லாத போத்தலில் போடப்பட்டு வாசகனிடம் வழங்கப்படுவதில்லை. பிரதியை (Text), குறிப்பான சூழலில் (Context), சக பிரதிகள் (Inter texts), கூட்டுப் பிரதிகள் (Co - texts), ஆகியவற்றோடு பொதிந்து தான் வழங்குகிறோம். எனவே முன்னுரைகள், அட்டைக் குறிப்புகள், விமர்சனங்கள், நிறுவனச் செயற்பாடுகள் என்பனவெல்லாம் பிரதியின் மீது செயற்படும் நிர்ணயங்களாகின்றன.

தவிரவும் ஆசிரியரின் நோக்கம் (Intention of the Author) வாசகனின் நோக்கம் (Intention of the Reader), என்பவற்றிற்கு அப்பால் பிரதியின் நோக்கம் (Intention of the text) என என்று உள்ளது என்கிற உம்பர்டோ ஈகோவின் கருத்து மிக முக்கியமான ஒன்று. கதையாடல் மற்றும் பிரதியியல் செயல்திறங்களின் (Narrative and Textual Stratagies) மூலமாக பிரதியின் நோக்கம் என்று உருவாகிறது. பிரதியின் இந்த அதிகாரத்தோடு வாசகத் தன்னிலை எதிர்வினை புரிவது தவிக்க இயலாததாகிறது. ஜெயமோகனின் வாசகங்களிலிருந்தே இதை நிறுவ முடியும்.

"விஷ்ணுபுரம் என்ற சொற்களனுக்குள் பல்வேறு வகையான படிமங்கள் உள்ளன. வழமையான படிமங்கள், மாற்றியமைக்கப்பட்ட பழம் படிமங்கள், புதுப்படிமங்கள். இவை ஒவ்வொன்றும் ஒன்றோடொன்று ஊடுருவித்தொடர்ந்து மாறுகின்றன"

என்று ரஞ்சகுமாருக்குப் பதில் சொல்லும் ஜெயமோகன் நூன் முகத்தில் சொல்வதென்ன?

"1982 மார்ச் 22ம் திகதி இந் நாவலின் மையப் படிமம் என்னை வந்தடைந்தது. துறவியாக ஆகும்பொருட்டு அன்று காலை தான் வீட்டை விட்டுக் கிளம்பியிருந்தேன்"

என்கிற கூற்றின் மூலம் விஷ்ணுபுரம் என்கிற சொற்களனுக்குள் காட்டப்படும் பல்வேறுவகையான படிமங்களையும் மீறி ஒரு மையப் படிமம் இயங்குவதை ஜெயமோகன் ஏற்றுக்கொள்கிறார். அந்த மையப் படிமம் 'விஷ்ணு'தான் என்பதை பிரதிக்குள் புகுந்து நாம் மிக எளிதில் நிறுவிவிட முடியும். உன்னை நோக்கி நாவலைச் சுருக்கின் கொள்ளாமல் (உனது அடையாளத்தை அழித்துக் கொண்டு) நாவலின் மூலம் விரிவடை என நூன் முகத்தில் ஜெயமோகன் 'மன்றாடு'வதன் பொருள் இதுதான். 'மையப் படிமத்தைத் தவறவிட்டு விடாதே"

"நமது வாசிப்பைக் காவியத்தின் மீது ஏற்றலாகாது. இடத்தையும், மனத்தையும் மாற்றியபடி மீண்டும் மீண்டும் காவியத்தைப் பார்க்க வேண்டும், ஒரு வாழ் நாள் முழுக்க அது நம்முன் வீழ்த்தும் பிம்பங்களின் ஒட்டு மொத்தம் தான் காவிய தரிசனம் என்பது"

என நூலுக்குள் பாத்திரக் கூற்றாக வரும் வாசகங்களையும் நாம் இத்தோடு இணைத்துப் பார்க்க வேண்டும். எதார்த்த ஆசிரியன் (Empirical Author) மனதில் கொண்டிருந்த மையப் படிமத்தை அடையாளம் கண்டு, பிரதியின் நோக்கை உள்வாங்கிக் கொண்ட பணிவு மாதிரி வாசகனாக (Model Reader) இரு என்பதே 'மன்றாட்டு' என்கிற பெயரில் ஜெயமோகன் வாசகனுக்கு அளிக்கும் அறிவுரை.



இதைத்தான் நாம் ஆசிரியனின் அதிகாரம் அல்லது வன்முறை என்கிறோம். இவ்வளவும் சொல்லிவிட்டு "பல்வேறு படிமங்கள்", "முடிவற்ற வாசிப்பு" என்றெல்லாம் முழக்குவதன் பொருளென்ன?

விஷ்ணுபுரம் பலகுரல் பிரதி போல (Poly Phony) காட்டிக் கொள்ளும் ஒரு குரல் பிரதியாக (Homo Phony) விளங்குவது தான் உண்மை. அந்தக் குரல், வைதீக மதத்திற்கு மாற்றாகவும் எதிர்ப்பாகவும் தோன்றிய புத்த மதத்தையும், பார்ப்பனீயத்தால் வீழ்த்தப்பட்ட இனக்குழு மக்களையும் அவர்களது வழிபாடுகளையும் இந்துத்துவத்திற்குள் நிறுத்தும் குரல். ஆத்மாவையும், இறைவனையும் மறுத்த புத்தனையே விஷ்ணுவின் அவதாரமாக்கும் குரல். பறையருக்கு ஒரு நீதி, தண்டச் சோறுண்ணும் பார்ப்பனுக்கு வேறொரு நீதி என அரசு அமைந்த போதிலும், பறையரும், மறவரும், பார்ப்பனரும் ஒன்றாக அமர்ந்து சாப்பிட்டுக்கொண்டு, "நீர் பறையரா?" என சர்வ சாதாரணமாகப் பேசிக்கொண்டு மக்கள் வாழ்ந்த (!) பாரத வர்ஷத்தைப் படம் காட்டும் குரல். பல்வேறு அடக்கு முறைகளும் ஊழல்களும் நிறைந்த ஊராக விஷ்ணுபுரத்தைச் சித்திரிக்கும் ஜெயமோகன், ஒரு புலர்காலைப் பொழுதின் சுகமான வேளையில் நடந்து சென்று கொண்டிருந்த தருணத்தில் விஷ்ணுபுரத்தின் வீதி ஒன்றில் நடப்பது போன்ற பரவசம் ஏற்பட்டது பற்றி (நூன்முகம்) அவர் குறிப்பிடுவதை நாம் மறந்து விட முடியாது. விஷ்ணுபுரம் ஒரு பரவசம் நிறைந்த நகரமாகவே அவரது ஆழ்மனதில் படிந்திருப்பதை இது காட்டுகின்றது. விஷ்ணுபுரம் ஒரு மகா தர்மம். மகா காலத்தில் நாமும் (அக்கிரமமாய் கண்கள் பறிக்கப்பட்ட) தச்சனும் வெறும் துளிகள் தான் என்பன போன்ற பாத்திரக் கூற்றுகளும் கவனிக்கத்தக்கன. மகாகாலப் பிரவாகத்தில் இந்தச் சிறு அநீதிகளெல்லாம் புறக்கணிக்கத்தக்க சிறு துளிகள்!

இறுதியாக: ஒரு ஆயிரத்து முன்னூறு ஆண்டு கால 'பாரத வர்ஷத்தை' திரைச்சீலையாகக் கொண்டு ஏற்கெனவே எழுதப்பட்ட வரலாறுகள் மீது முற்றிலும் புனைவான பாத்திரங்களையும், சம்பவங்களையும் ஒருவகை மாய யதார்த்தத்தில் உலவ விடும் Palimpset History ஆக, விஷ்ணுபுரத்தைச் சொல்ல முடியுமா? இந்த வகை எழுத்திற்குப் பலரும் அறிந்த இரு எடுத்துக்காட்டுகள்: சல்மான் ருஷ்டியின் Satanic Verses மற்றும் உம்பர்டோ ஈகோ வின் The Name of the Rose. முன்னது இஸ்லாமிய அடிப்படைவாதிகள் அதன் ஆசிரியருக்கு மரணதண்டனை வழங்கக் காரணமாக அமைந்தது. ஈகோவின் எழுத்து கிறிஸ்தவ மடாலயங்களை அதிரடித்த ஒன்று. இவை முன்னிறுத்திய வரலாறு, மத அடிப்படை வாதங்களுக்கெதிரான ஒரு வன்மையான மாற்று வரலாறாக அமைந்ததன் விளைவாகவே இத்தகைய எதிர்ப்புகளைச் சந்திக்க வேண்டியவையாயின. ஜெயமோகன் எழுதியுள்ள வரலாறோ இந்துத்துவ சக்திகள் உயர்த்திப் பிடிக்கிற, கடைவிரித்து விற்கிற வரலாறு. இது மாற்று வரலாறல்ல. ஏற்கெனவே எழுதப்பட்ட - இந்து அடிப்படை வாதிகளுக்கு உகந்த - ஒரு வரலாறே இன்று விஷ்ணுபுரமாக மீண்டும் வழங்கப்படுகிறது.

எந்த ஒரு ஆய்வாக இருந்தாலும் அது வரலாற்றாய்வாக இருந்த போதிலும் குற்றவியல் ஆய்வாக இருந்த போதிலும், ஆய்வு என்பது வித்தியாசங்களையும், அடையாளங்களையும் கையாள்வதே. குற்றம் செய்தவர்கள், செய்யாதவர்கள், உடந்தையாயிருந்தவர்கள், கண்ணால் பார்த்தவர்கள்..... இப்படியாக "குற்ற"மாக முன்கூட்டி வரையறுத்துக்கொண்ட வரையறையின்படி, இந்த வித்தியாசங்களும் அடையாளங்களும் கையாளப்படுகின்றன. வரலாறு என்னும் பெயர் அடையாளத்தை நிலைநிறுத்தும் நோக்குடன் வரலாற்றாசிரியன் வித்தியாசங்களைக் கையாள்கிறான். எனவே எத்தகைய கூறுகளை, பொருட்களை, சம்பவங்களை முன்னிறுத்துவது, ஒரு பொருளை வித்தியாசமானதாகக் காட்டும்போது எத்தகைய அடையாளங்களை வித்தியாசத்திற்குரியனவாகக் காட்டுவது, வித்தியாசமான பொருட்களின் எத்தகைய 'பொருத்தமான' கூறுகளை ஒற்றுமையாக முன்னிறுத்துவது என்பவற்றில் வரலாறு எழுதுகிறவனின் தேர்வுகள் முக்கியம் பெறுகின்றன. புத்த மதத்தை வேத மதத்திற்கெதிரான புரட்சியாகவும் மீண்டும் பார்ப்பனியம் வெற்றிபெற்றதை (கி.பி. 150) எதிர்புரட்சியாகவும் வாசிக்கிறார் அம்பேத்கர். அத்தகைய முரணான மதங்களிரண்டையும் ஒரே விஷ்ணு ஆலயத்தைப் பெரிய மாற்றங்கள் இல்லாமல் வணங்கி, நிர்வகிக்கக் கூடியனவாகச் சித்திரிப்பதும், வென்று புறம் ஓட்டிய பழங்குடிக் கடவுளரை வைதீக ஞானாதிபதிகள் வணங்கி ஏற்பதாகக் காட்டுவதும் கவனிக்கத்தக்கன. முழுமை (Totality) என்பது வித்தியாசங்களற்றதல்ல. வித்தியாசங்களைக் கீழ்நிலைப்படுத்தி (Subordinat) உள்ளடக்குவதே முழுமை. எனவே இதில், பல வித்தியாசங்கள் காட்டப்படுகின்றனவே எனப் பெருமை கொள்வதிற்கில்லை. "வேற்றுமைக்குள் ஒருமை" (Unity in Diversity) என்பது தான் முழுமையின் பெயரால் ஆதிக்கம் செலுத்தும் சக்திகளின் குரலாக அதுவரை இருந்து வந்துள்ளது என்பதையும், தங்களின் உரிமைகளுக்காகப் போராடுகிறவர்கள். ஒருமைக்குள் உள்ளடக்கப்பட்டுள்ள வித்தியாசங்களை முதன்மைப்படுத்துவதையும் நாம் மறந்துவிடலாகாது. விஷ்ணுபுரம் ஒருமைக்குள் வேற்றுமைகளை வலியுறுத்துகிறதா, வேற்றுமைக்குள் ஒருமையை அழுத்திச் சொல்கிறதா என்பதைச் சிந்தித்தல் அவசியம்.

விஷ்ணுபுரத்தை அழிக்க முயலும் அவ்வளவுபேரும் இறுதியில் தோல்விகளையே தழுவுகின்றனர். கால முடிவு - ஏற்கெனவே விதிக்கப்பட்ட நியமத்தின்படி - ஏற்படும்போது தான் விஷ்ணு புரண்டு படுக்கிறார், பிரளயதேவியின் கண்கள் திறக்கின்றன: பேரழிவு அதனை உட்கொள்கிறது. ஞானாதிபதி வேததத்தன் மட்டும் தாமரை இதழ்களில் பொதித்து காக்கப்படுகிறான். எத்தனை கூர்ந்த மதிப்டைத்தவனானாலும் பவுத்த அஜிதன் பார்ப்பனச் சித்தனின் (பவதனின் மகன்) பார்வையில் வீழ்கிறான். மகா அஜிதனின் பார்ப்பன கால தரிசனத்தால் ஆட்கொள்ளப்பட்டு வருகிறவர்கள் பிரம்ம வாகனமான கால பைரவனின் கண் வழிப் பார்வையில் உண்மையான கால தரிசனம்பெற்று, அஜீத தரிசனத்தை மாயை என ஒதுக்கி ஓடுகின்றனர். பார்ப்பனீயத்தை வென்று ஞானாதிகாரத்தைக் கைப்பற்றிய (திராவிட உடற் கூறுகளுடன் கூடிய) சந்திர கீர்த்தி விஷ்ணுபுரத்தை ஏழைகளுக்குத் திறந்துவிட்டபோதிலும், அவனது ஆட்சியும் இன்னும் மோசமான அதிகாரத்துவ ஆட்சியாகவே அமைகிறது. பிரதியில் ஆட்சி புரியும் மையப் படிமம் வாசகனை இப்படித் தான் வழிநடத்துகிறது.

—19

நன்றி - நூலகத்திட்டம்





# கம்யூனிஸ்ட் கார்த்திகேயன் -

# ஒரு நினைவுக் குறிப்பு

-ஸ்ரீபதி

யாழ்ப்பாணத்தில் கம்யூனிஸ்ட் கட்சி ஆரம்பிக்கப்படுவதற்கு முக்கிய காரண கர்த்தாவாக இருந்தவரும், கம்யூனிஸ்ட் கட்சியின் ஆங்கில ஏடான Forward இதழின் ஆசிரியரும், பெருமதிப்புக்குரிய ஆசிரியருமான தோழர் கார்த்திகேயன் மாஸ்டர் அவர்கள் காலமாகி இரண்டு தசாப்தசங்கள் முடிந்து விட்டன. உறுதிமிக்க ஒரு கம்யூனிஸ்ட்டாகவும், கட்சியின் தலைமைத்துவ பண்புகள் நிறைந்த ஒரு புரட்சித் தோழராகவும், வழிகாட்டியாகவும் வாழ்ந்து மறைந்த தோழர் கார்த்திகேயன் மாஸ்டர் தமிழ் மக்கள் மத்தியில் கம்யூனிச சிந்தனை கொண்ட ஒரு இளம் தலைமுறை உருவாகி வளர்வதற்கு ஆற்றிய பங்களிப்பு மிகவும் காத்திரமானது. அவரது அயராத உழைப்பும், அர்ப்பணிப்பு மிக்க செயற்பாடும் இரண்டு தசாப்தங்கள் கடந்துவிட்ட இன்றைய நிலையிலும் நினைவு கூரத்தக்க சிறப்பு மிக்கவை.


கார்த்திகேயன் மாஸ்டரின் தாய்தந்தையர் யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டையைச் சேர்ந்தவர்கள். பழமையில் ஊறிக் கிடந்த இந்தக் கிராமத்திலிருந்து ஆங்கிலம் படித்தவர்கள் மலேஷியா சென்று தொழில் பார்க்கும் போக்கு நிலவிய அன்றைய காலகட்டத்தில், மாஸ்டரின் பெற்றோரும் மலேஷியா சென்றிருந்தனர். சாதிவெறியும், தீண்டாமையும் தலைவிரித்தாடிய காலம் அது. மாஸ்டரின் தாய் தந்தையர் மலேஷிய தைப்பிங் நகரில் இருந்த காலத்தில், உலகைக் குலுக்கிய ரஷ்ஷியப் புரட்சி நடைபெற்று இரண்டு ஆண்டுகளுக்குப் பின், அதாவது 1919ம் ஆண்டு கார்த்திகேயன் மாஸ்டர் பிறந்தார். ஆயினும், பழமையும், மரபு இறுக்கங்களும் மூட நம்பிக்கைகளும் மலிந்து கிடந்த அன்றைய யாழ்ப்பாணத்தின் வட்டுக்கோட்டையிலேயே மாஸ்டரின் ஆரம்பக் கல்வி தொடங்கியது. தனது இடைநிலைக் கல்விக்குப் பின் மலேஷியாவிலும், பட்டப்படிப்பை கொழும்பு பல்கலைக்கழகத்திலும் பெற்று 1941இல் ஒரு பட்டதாரியானார்.

அன்றைய ஆங்கிலம் கற்ற படித்த வர்க்கத்தினர், 1947ல் சுதந்திரம் என்ற பெயரில் கறுப்புத் துரைமாரிடம் கைமாறிய வேளையில், அதில் சேர்ந்து கொள்வதற்காக போட்டிப் போட்டுக் கொண்டிருந்தனர். இந்த மேட்டுக்குழாத்துடன் தன்னை இனங்காட்டிக் கொள்ள விரும்பாத இளம் கார்த்திகேயன், தன்னை அன்று வேகமாக பரவி வந்த சர்வதேச கம்யூனிஸ்ட் இயக்கத்துடன் இணைத்துக் கொண்டார்.

இவருடைய பணியின் மகத்துவம் பற்றிப் புரிய வேண்டுமாக இருந்தால், அவர் பொதுப் பணியில் ஈடுபடத் தொடங்கிய 1943இல் நிலவிய யாழ்ப்பாண சமூக சூழ்நிலை பற்றி நன்கு புரிந்திருக்க வேண்டும். இந்நூற்றாண்டு ஆரம்பகாலத்தில் சாதிப்படியமைப்பை அடிப்படையாகக் கொண்ட சிறுவீத உற்பத்தி முறைமையே யாழ்ப்பாண வாழ்க்கை முறையில் மேலோங்கி இருந்துள்ளது. மிஷனரிமாரின் தாக்கத்தினால் ஆங்கிலம் கற்ற ஒரு குழாம் உருவாகி இருந்தும் கூட சமூகத்தின் குணாம்சத்திலே பாரிய மாற்றம் ஏற்பட்டிருக்கவில்லை. ஆங்கிலக் கல்வி பெறும் வாய்ப்புக்கூட வசதிபடைத்த நிலவுடைமையாளர்களாக இருந்த உயர் சாதியினருக்கே கிடைத்தது. எனவே அரசாங்கத்துறை, பெருந்தோட்டத்துறை, மலேஷியா போன்ற இடங்களில் தொழில் பெறும் வாய்ப்பு இழிசாதியினர் என்று இவர்களால் அழைக்கப்பட்ட தாழ்த்தப்பட்ட மக்களுக்குக் கிடைக்கவில்லை. சாதியை அடிப்படையாகக் கொண்ட ஒடுக்குமுறை தொடர்ந்து நீடிக்கவே செய்தது. கல்வி, சமயத் துறைகள் கூட சாதி ஒடுக்குமுறையில் இருந்து தப்பமுடியவில்லை. 1920களின் பிற்பகுதியில் "யாழ்ப்பாண வாலிபர் காங்கிரஸ்" என்னும் அமைப்பு துளிர்விட்டு சிறிது காலம் சாதி அமைப்புக்கு எதிரானதும், தேசபக்த உணர்வு மிக்கதுமான நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளது. பின்னர் உருவான இடதுசாரி இயக்கமான லங்கா சமசமாஜக் கட்சியின் தாபன உறுப்பினர்களில் ஒருவராக யாழ்ப்பாண வாலிபர் காங்கிரசின் முக்கிய உறுப்பினரான ஹன்டி பேரின்பநாயகம் இருந்துள்ளமை இங்கு குறிப்பிடப்பட வேண்டும். இராம கிருஷ்ண மிஷன் துறவியான சுவாமி விபுலானந்தர், கொழும்பு ஆனந்தா கல்லூரியைச் சேர்ந்த பி. எஸ். குலரட்ன போன்றோர் இந்த வாலிபர் காங்கிரசுடன் தொடர்பு கொண்ட தேசபக்த ஜனநாயகவாதிகளாவர். இலங்கையில் முதல் தடவையாக நடைபெற்ற சட்டசபைத் தேர்தலை பகிஷ்கரிக்கும் பணியில் ஓரளவு வெற்றிகரமாகப் பணியாற்றிய இவ்வமைப்பு தொடர்ந்து யாழ்ப்பாணத்தில் சேவையாற்ற முடியவில்லை. சீர்திருத்தப்பண்பு கொண்ட இராமகிருஷ்ண மிஷன் இலங்கையில் தனது முதல் பாடசாலையை யாழ்ப்பாணத்தில் ஆரம்பித்தும் கூட அதிபர் நியமனங்களின் போது (இன்னும் கூட) விண்ணப்பதாரியின் சாதியை உரைத்துப் பார்க்கும் பாடசாலைகளே பெரும்பாலும் உருவாகியுள்ளன. சைவம், தமிழ் என்ற சொற்கள் உரக்க உச்சரிக்கப்பட்டபோதும் ஆட்சியாளரின் தேவையை உணர்ந்து குறிப்பறிந்து நடக்கும் அடிமைப்போக்கே யாழ்ப்பாணத்தின் அரசியலைத் தீர்மானிக்கும் சக்தியாக இருந்தது. இந்த சக்திகள் யாழ்ப்பாண மண்ணில் தமது ஆதிக்கத்தை ஆழமாகப் பதிக்கத் தொடங்கியிருந்தன. இது முழு இலங்கைக்குப் பொதுவானதாக இருந்தபோதும் கூட இதன் செறிவு யாழ்ப்பாணத்தில் கூடுதலாக இருந்தமை முக்கிய அவதானிப்பிற்குரியது. இச்செறிவின் அளவு வித்தியாசத்தை 1950, 1960களில் இலங்கையில் காணப்பட்ட அரசியல் போக்குகளிலே நாம் காணமுடியும். இந்தச் சூழ்நிலையில் தான் இலங்கையின் வடபகுதியில் கம்யூனிஸ்ட் கட்சிக் கிளையை அமைக்க வேண்டுமென்ற முடிவைக் கட்சி எடுக்கின்றது. அந்த நோக்கத்தை செயற்படுத்துவதற்காகவே தோழர் கார்த்திகேயன் யாழ்ப்பாணத்திற்கு அனுப்பப்படுகின்றார். அவர் யாழ்ப்பாணம் வந்து யாழ். இந்துக் கல்லூரியின் ஆங்கில ஆசிரியர் பதவிக்கு விண்ணப்பித்தார். அப்பதவிக்குரிய எல்லாத் தகுதிகளும் மேம்பாடாக இருந்தபோதும் அவர் ஒரு கம்யூனிஸ்ட் என்ற நிலையில் விண்ணப்பம் கேள்விக்குரியதாகிறது. எனினும், இவரின் பாடம் சார்ந்த புலமையும், சிறந்த அர்ப்பணிப்பு மனப்பாங்கும் அவருக்கு அப்பதவி கிடைப்பதைத் தவிர்க்க முடியாததாக்கியது. அவரைப் பதவியில் அமர்த்துவதில் ஏற்பட்ட சிக்கலைத் தீர்க்கவேண்டி யோகர் சுவாமிகளிடம் சிலர் இது பற்றி விசாரித்தபோது அவருடைய கூற்று பின்வருமாறு அமைந்தது. "எடேய் அந்த கம்யூனிஸ்ட் நல்லாப் படிப்பிப்பான் அவனை எடுங்கடா". அன்று யோகர் சுவாமிகளிடம் எதிர்க் கருத்துள்ளவரின் நேர்மையை, பண்பை, தியாகத்தை மதிக்கின்ற ஒரு மனிதப் பண்பு இருந்தமையால் கார்த்திகேயனுக்குப் பதவி கிடைத்தது.

யாழ்ப்பாணத்தில் உருவாக்கப்பட்ட ஆரம்ப கம்யூனிஸ்ட் குழுவில் தோழர் கார்த்திகேயனுடன் சு.வே. சீனிவாசகம், ஏ.கே.கந்தையா, எம்.ஏ.காதர், ராமசாமி ஐயர், எம்.சி. சுப்பிரமணியம், க. மகாலிங்கம் ஆகியோர் அங்கம் வகித்தனர்.

இவர் கொழும்பிலிருந்த காலத்தில் டொக்டர் எஸ்.ஏ. விக்கிரமசிங்கா, ஏ.வைத்திலிங்கம், பொன். கந்தையா, பீட்டர் கெனமன் ஆகியோரால் அமைக்கப்பட்டுக் கொண்டிருந்த கம்யூனிஸ்ட் கட்சியில் இணைந்து அதன் ஒரு தாபக உறுப்பினரானார். பொது மக்கள் மத்தியில் பிரச்சாரம் செய்வதிலும், கட்சி அமைப்புகளைக் கட்டுவதிலும் முக்கிய பங்கு வகித்தார். கட்சியின் உத்தியோகபூர்வ பத்திரிகையான போவேட் (Forward) இன் ஆரம்ப ஆசிரியராகப் பணிபுரிந்தார். கம்யூனிஸம் பற்றிய தெளிந்த அறிவும், கொழும்பின் நகர்ப்புற அரசியல் அனுபவமும் கொண்ட இளைஞரான தோழர் கார்த்திகேயன் கிராமப் பண்புகள் கொண்ட யாழ்ப்பாணத்திற்கு கட்சிப்பணிக்காக 1946இல் அனுப்பப்பட்டார். அங்கு சென்ற அவர் தனது செயற்பாடுகளுக்காகத் தேர்ந்து கொண்ட தொழிலே ஆசிரியர் தொழிலாகும். அவர் ஆசிரியப் பணியுடன் பல்வேறு சமூகப் பணிகளிலும் ஈடுபட்டார். ஆங்கில ஆட்சியாளர்களுக்கு எதிரான அரசாங்க ஊழியர்களின் பொது வேலை நிறுத்தம் 1947இல் நடைபெற்றது. இதற்கு ஆதரவான வேலைகளின் முன்னணியில் நின்று பணிபுரிந்தார். பொதுத்தேர்தலில் பருத்தித்துறை தொகுதியில் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் நின்ற பொன் கந்தையா அவர்கள் வெற்றியீட்டியது இங்கு மிக முக்கியமாகக் குறிப்பிடத்தக்கது. நடைபெற்ற பாராளுமன்ற, உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களின் போதும் கட்சியை முன்னெடுக்கும் பணியில் மிக முக்கிய பங்காற்றினார். யாழ். மாநகர சபையில் போட்டியிட்டபோது அன்று "தமிழ் மக்களின் தனிப் பெரும் தலைவர்" என்று மார்தட்டிக் கொண்டிருந்தவரின் ஆதரவாளரைத் தோற்கடிக்கக்கூடிய அளவிற்கு மக்களின் அன்பும், ஆதரவும் அவருக்கிருந்தது. மாநகர சபை உறுப்பினராக இருந்த போது தமிழ், முஸ்லிம் மக்களின் ஒற்றுமையை வளர்ப்பதில் கணிசமான பங்காற்றிய பண்பாளன், ஒரு உண்மையான ஜனநாயகவாதி. 1960ம் ஆண்டு பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டு கணிசமான வாக்குகளைப் பெற்றார். அன்று அக்குறிப்பிட்ட தொகுதியிலே இடதுசாரிகள் மத்தியிலே ஒற்றுமை நிலவியிருந்தால் தோழர் கார்த்திகேயன் வென்றிருப்பார் என்ற கருத்து பலரிடம் உண்டு.



மொழி உரிமைப் போராட்டமாக மேற்கிளம்பிய தமிழ்த்தேசிய இனப்போராட்டத்தில் ஈடுபட்டுக்கொண்டிருக்கும் அதேவேளை, தமது மக்களின் ஒரு பகுதியினரின் (தாழ்த்தப்பட்ட மக்களின்) ஜனநாயக உரிமைகளை மறுக்கும் போக்கு தீண்டாமை என்னும் வடிவில் மேற்படி தலைமைகளிடம் காணப்பட்டது இங்கு நோக்கத்தக்கது. 1966ம் ஆண்டு நடைபெற்ற தீண்டாமை ஒழிப்புப் போராட்டத்தில் வி.ஏ. கந்தசாமி, ஏ.சி.இக்பால், மார்க், கே.ஏ. சுப்பிரமணியம், எஸ். ரி. நாகரெத்தினம், சலீம், கே. டானியல், முத்தையா போன்றோருடன் இணைந்து போராட்டத்தை வெற்றிகரமாக வழிநடத்தினார். ஆலயப் பிரவேசத்தின் போது சமயம் சார்ந்த ஆதிக்கக் குழுவினர் பொலிசின் உதவியுடன் மக்களுக்கு எதிராக நின்ற போது, மக்கள் சார்பாக போராட்டத்தை முன்னெடுப்பதில் முக்கிய பங்காற்றினார்.


இவர் ஆசிரியர் சேவைக்காக யாழ். இந்துவிற்கு வந்தபோது ஆரம்பத்தில், அவர் அன்றைய கல்விச்சமூகத்தால் வேண்டப்படாதவராக இருந்ததை ஏற்கெனவே நாம் பார்த்தோம். பிற்காலத்தில் அதிபராக இருந்தபோதும் கூட இது போன்றதொரு நிலையே அவருக்கு ஏற்பட்டது. அன்றைய யாழ். இந்துக் கல்லூரிச் சமூகம் அவர் அதிபராக இருப்பதை விரும்பவில்லை.

எனவே, கார்த்திகேயன் மாஸ்டர் யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரிக்கு மாற்றப்பட்டார். ஆனால் அவ் இடமாற்றத்தையும் கூட இன்முகத்துடன் ஏற்றுக்கொண்டு கல்லூரியின் வளர்ச்சியில் புதுப்பொலிவூட்டினார். அவர் தனது கற்பித்தலின் போது மாணவர்களை வெறும் புத்தகப் பூச்சிகளாக மட்டும் உருவாக்கவில்லை. அவர்களை சமூக நோக்குள்ளவர்களாகவும் ஆக்குவதற்கு பெரும் பணியாற்றினார். தான் தன்னுடைய வாழ்க்கை முறையாக வரித்துக்கொண்ட தத்துவத்தினூடாகவே கல்வியையும் நோக்கினார். சமூகத்தைப் புரிந்துகொண்டு சமூக மாற்றத்திற்கு உழைத்துக் கொண்டிருந்த தோழர் கார்த்திகேயன் தன்னுடைய அனுபவத்தை நகைச்சுவை உணர்வுடன் வெளிப்படுத்துவதில் மிகவும் கெட்டிக்காரர். பின் வாங்கு மாணவர்களை முன்னுக்குக் கொண்டு வருவதை தனது முக்கிய பணியாகக் கொண்டிருந்தார். அவருடைய பல மாணவர்கள் இடதுசாரிக் கொள்கையை நாட்டத்தோடு கற்கவும் அதன் ஊடாக சமூக உணர்வையும், ஆழ்ந்த ஆய்வு மனப்பாங்கையும் பெறுக் கொள்ள காரணகர்த்தாவாக விளங்கினார். தன்னுடைய ஆசிரியத் தொழிலையும், அரசியல் தொழிற்பாடுகளையும் பிரித்துப் பார்க்காது அவரின் சிறப்பான அம்சமாகும். தன்னுடைய காலத்தில் பல மாணவர்களைச் சமூக அக்கறை உள்ளோராய்ப் பயிற்றுவித்துள்ளார். இவருடைய அரசியற் கொள்கையை ஏற்காத மாணவர்கள் கூட அவரை ஒரு வீரனாகவும், நேர்மையுள்ள மனிதனாகவும் நேசிக்கத் தவறவில்லை. சொல்லிலும், செயலிலும் முரண்படாத வாழ்க்கை முறை, விடயங்களை நகைச்சுவை உணர்வுடன் வாழைப்பழத்தில் ஊசி ஏற்றுவதுபோல் இலகுவாக மனதில் தைக்கும்படி கூறும் பண்பு என்பன இதற்கான காரணங்களாகும். பல்கலைக்கழக பேராசிரியர்கள் உட்பட பல துறைகளில் உள்ளோர் மாணவராய் இருந்தபோது இவருடைய செல்வாக்கிற்குட்பட்டமையால் அவர்களிற் பலர் சமூகப் பொறுப்புடன் தொழிற்பட்டனர். இவர்களில் மிக முக்கியமானவராக பேராசிரியர் கைலாசபதியை இங்கு குறிப்பிடலாம்.

மார்க்ஸியப் புத்தகங்களைப் படித்துவிட்டு தம்மை அறிவாளிகளாகக் காட்டுவதற்காக புரட்சி பேசும் கூட்டமொன்றும் அன்று இருந்தது. மார்க்ஸியத்தை உரத்து பேசுவதன் மூலம் தம்மை மேதாவிகளாகக் காட்டிக்கொள்ள விரும்பியது. ஆனால், கார்த்தியேன் அப்படியல்ல. மார்க்ஸியத்தை வாழ்க்கைத் தத்துவமாகப் புரிந்துகொண்டு அதன் அடிப்படையில், தான் வாழ்ந்த சமூகத்தை மிக உன்னிப்பாக அவதானித்தார். இந்தப் பின்னணியில் மாணவர் மத்தியிலென்றாலென்ன, பொதுமக்கள் மத்தியிலென்றாலென்ன, மார்க்ஸியத்துவத்தில் மூழ்கி அதன்

-19

நன்றி - நூலகத்திட்டம்



## நீதி முரசு '98

வெளியீடு:
சட்ட மாணவர் தமிழ் ஒன்றியம்

இலங்கை சட்டக்கல்லூரி சட்டமாணவர் தமிழ் மன்றத்தின் வெளியீடான "நீதிமுரசு 98" உயர்ரகத் தாளில், சிறந்த விடய தானங்களை 115 பக்கங்களில் தாங்கி மிக நேர்த்தியாக மலர்ந்திருக்கிறது.

பிரதம நீதியரசர் ஜி. பி.எஸ்.டி சில்வா, சட்டமா அதிபர் சரத் என் சில்வா ஆகியோரதும் மன்றத் தலைவர் எம். றிஸ்வி ஜவ்ஹர்ஷா, பொருளாளர் ஆர். சிவகுருநாதன் ஆகியோரது ஆசிச் செய்திகளைத் தாங்கி "நீதிமுரசு 98" மலர்ந்திருக்கிறது. செயலாளர் கே.வி. ஸ்ரீகணேசராஜன் தனது ஆண்டறிக்கையைத் தமிழிலும் ஆங்கிலத்திலும் சமர்ப்பித்திருக்கிறார்கள்.

யுத்த அனர்த்தங்களை விளக்கும் முகப்பும், அதற்கான கவிதையும் இரா. செந்தில்குமாரால் உள்ளத்தைத் தொடும் வகையில் ஆக்கப்பட்டிருக்கிறது. சமர்ப்பணத்தில் இளநெஞ்சங்களின் நியாயமான உணர்வும், சமூகப்பற்றும் பளிச்சிடுகின்றது.

இம்மலரின் கட்டுரைகள் ஆங்கிலம், தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் காணப்படுகின்றன. மேன்முறையீட்டுமன்ற நீதிபதி சி.வி. விக்னேஸ்வரனின் "மனுவும் நான்கு வருணங்களும்" சொலிசிட்டர் ஜெனரல் உபவன்ஸ் யாப்பாவின் ''நற்பண்பு - பொருத்தமான அறிவு - சக்தி", ஜனாதிபதி சட்டத்தரணி கே. கனகஈஸ்வரனின் சட்டத்தின் கீழ் பங்குடமையாளர்களின் பாதுகாப்பும் உரிமையும்", சட்ட விரிவுரையாளர் காலிக்க இந்ததிஸ்ஸவின் "குற்றவியல் நடைமுறைக் கட்டுமானமும் அதில் இளஞ் சட்டத்தரணியின் பங்கும் ஆகிய நான்கு கட்டுரைகள் ஆங்கிலத்தில் உள்ளன.

தமிழ்க் கட்டுரைகளாக முதுநிலை விரிவுரையாளர் வி.ரி. தமிழ்மாறனின் "பெரும்பான்மை ஆட்சியும், மனித உரிமைகளும்" விரிவுரையாளர் சத்யவோஷனா தேவராஜாவின் "அபயசுந்தர வழக்கின் தீர்ப்பு நியாயமும் - அண்மைக்காலச் சட்டதிலெழுந்த அதன் தாக்கங்களும், ரவூப் ஹக்கீம் பா.உவின் ''பெர்னாண்டோபுள்ளே வழக்கில் உயர் நீதிமன்றத் தீர்ப்பு - பாராளுமன்றச் சிறப்புரிமைக் கோட்பாடும்" கம்பன் கழக அமைப்பாளர் இ. ஜெயராஜின் வர்ணாச்சிரம தர்மம் ஆகியவை வெளிவந்திருக்கின்றன.

சட்டமாணவர்களான அ. பிரேமலிங்கம், "நொத்தாரிசு ஒருவரின் தத்துவமும் கடமைகளும் உறுதி வரைதலும்", ப.ச. மௌலீஸ்வரன் "நீளும் யுத்தத்தில் குடியியல் சமூகம்", எம். ஹில்மி ஆதம் லெப்பை "எமது நீதிமன்றங்கள் கூண்டில் இருந்து கொடுக்கும் கூற்றுக்களை ஏற்குமா?", செல்வி பரீதா ஜலீல் "இலங்கை அரசியலமைப்பின் அடிப்படை உரிமைகள்", சுவர்ணராஜா நிலக்ஷன் "பாலியல் வல்லுறவுக் கெதிராகக் கடுமையாகப் பாய்கின்ற சட்டம்", செல்வி. ராஜபாலினி ராஜ. சுந்தரம் "நீதித்துறைச் சுதந்திரம்", எம். முகம்மத் மிஹான் "பண்டை கண்டிய விவாக முறைகள்", க. ஜெயநீதி "தேசத்தின் வழமைகள்", செல்வி. எம். நடராஜன் "பொன்விழாக் காணும் மனித உரிமைகள் பிரகடனங்களும், இலங்கையும்", செல்வி அகமட் மு. ஹுசைன் "மனித உரிமைப் போராட்டங்களும் உரிமை மீறல்களும்", ஷகீனா மொகமட் "பாதுகாக்கப்பட வேண்டிய ஒரே செல்வம் குழந்தைகளே" ஆகிய கட்டுரைகளைத் தமிழில் எழுதியுள்ளாகள்.


சட்டமாணவர் க. பிரபாகரனால் "இணை இதயங்கள்" என்ற சிறுகதையும், குமரன் என்பவரின் கவிதையும் மலருக்கு அழகு சேர்க்கின்றன.

இம்மலரில் சட்டமா அதிபர் சரத் என். சில்வாவுடனான பேட்டி ஒன்றும் ஆங்கிலத்தில் வெளியாகியுள்ளது. எஸ். துரைராஜாவின் வழிகாட்டலுடன் சட்டமாணவர்களான எஸ். நிலக்ஷன், ஏ.கே.ஜெயநீதி, வி. சசிதரன் ஆகியோரால் இப்பேட்டி காணப்பட்டிருக்கிறது. இப்பேட்டியில் மக்கள்படும் இன்னல்களை சட்ட வார்த்தைகள் கொண்டு சட்டமா அதிபர் நியாயப்படுத்த முனைவது நெஞ்சில் எங்கோ நெருடல்களை ஏற்படுத்துவதாக உள்ளது.

சட்டத்துறை சாராதோரும் ஆவலுடன் படித்துப் பயனடையும் விதத்தில் அமைக்கப்பட்ட "நீதிமுரசு 98" இதழாசிரியர் விவேகானந்தன் சசிதரனும், உதவியாளர் செல்வி. ராஜபாலினி ராஜசுந்தரமும் பாராட்டுக்குரியவர்கள்.

-வீவேகி





(1) தோட்டப்புற அமைப்பில்
மனித உரிமைகள்

(2) அடையாள அட்டையைப்
பெற்றுக் கொள்ளும் முறைகள்

வெளியீடு:

இனங்களுக்கிடையே நீதிக்கும்
சமத்து வத்திற்குமான இயக்கம்

இல. 04, ஜயரத்ன வழி, கொழும்பு-05

மேர்ஜ் இயக்கம் மலையக மக்கள் தொடர்பாக மேற்கொண்டு வரும் செயற்றிட்டத்தின் அடிப்படையில் இந்நூல் வெளிவருகின்றது. தோட்டப்புற அமைப்பில், மீறப்பட்டு வரும் மனித உரிமைகள் அது தொடர்பான அறிவுறுத்தல்கள், மனித உரிமைகள் பற்றிய விளக்கங்கள் என்பன முதலாவது நூலிலும்,

மலையக மக்கள் முகங்கொடுத்துவரும் அடையாள அட்டைப்பிரச்சினைக்கு தீர்வு காணும் பொருட்டுஅடையாள அட்டைகளைப் பெற்றுக் கொள்ளும் வழிமுறைகள் பற்றி இரண்டாவது நூலிலும் விளக்கப்பட்டுள்ளன.

ர.சுவாமி

## இறுதித் தீர்ப்பெழுதி

இப்படித்தான் இடைக்கிடை நிகழும்
இயற்கையே,
இப்படித்தான் இடைக்கிடை அழும்

எங்கனும் பறந்து திரியும்
பட்சிகள் எதையேனும் காணோம்
நகர மத்திக் கடைத்தெரு
வெறிச்சோடிக் கிடக்க,
நாய்கள் மட்டும் ஒன்றிரண்டலையும்,
தெருக்கோடியில்,
வெறுமனே பாதி திறந்து
இடுக்கில் சாப்பாட்டுக்கடை.

அம்மரத்துக் கிளையில் ஓரிலையேனும்
அசையவேயில்லை அதிக நேரமாய்,
புழுங்கித் தகிக்கிறது உடம்பெல்லாம்
சூடாகி,
காதோர உரோமக் கண்களைத்
திறந்து கொண்டு
கனலாய்க் கொதித்து,
வெளியேறிற்று வெப்பம் கழுத்துவழியே....

தெருச் சந்துகளில்,
என்னவெல்லாமோ ஏந்திப் பதுங்கியபடி
ஒளிந்து ஒருசிலர்.
மனமெங்கனும்
ஓடும் ரயிலின் தண்டவாளச் சத்தங்களாகி,
மூளையின் ஒரு தொங்கலில்
சுள்ளிட்டுப் போயின நினைவுச் சிதைவுகள்.
அந்த நேரத்து,
உணர்வுகள் உயிரின் கல்லறையினின்று
விசும்பினதைப்போல,
சிலிர்த்து அடங்கின உடலினொடு மறுபடியும்,
நோக்கின் சூழலை உற்று
இயற்கை அழுதிட்டு.

சில மணிகட்கு முன்தான்
நகர மத்திச் சந்தியில் துடிதுடித்து வீழ்ந்ததாம்,
சல்லடைத் துளைகளாய்,
சரமாரியாய்ச் சுடப்பட்ட மனித உடலொன்று.
தூரத்தே இன்னொன்றும்,
நெற்றிப் பொட்டிலிருந்து நேராய்க்
கழுத்துவரை கீழிறங்கிற்று அச்சன்னங்கள்
தலைபிளந்தபடி...

இப்படித்தான் இடைக்கிடை நிகழும்.
இயற்கையே,
இப்படித்தான் இடைக்கிடை அழும்,
அந்த ஊரில்.

**ஆரெஸ்சிபி**

## பேய்களின் கோரம்!

பேய்கள்
எங்கள் தெருக்களில்
தம் கூரிய நகங்களால்
நிலத்தை பிறாண்டிக் கொண்டு
அலைந்து திரிகின்றன.

அவைகள்,
மனிதர்களை அச்சப்படுத்தும் படியான
ஏதோவொன்றை
தம்முடன் எந்நேரமும் வைத்திருந்தன.

இரவுகளின்.... நிசப்தங்களில்
அவை
அதிகமாக வெறி கொண்டு
வீடுகளின் கதவுகளை தட்டுகின்றன
நடுச்சாமத்தில்
எவையென்று துல்லியமாக தெரிந்தும்
அச்சத்தினால் திறந்திடுவோம்.

அது
ஆவேசமாக பாய்ந்து
வக்கிரமான பசியை தீர்ப்பதற்கு
தமக்குவேண்டியதை பிடித்து
ஆடைகளை கிழித்துவிட்டு
அதன்மேல் படருகின்றன்.

தம் கூரிய நகங்களால் கீறி
பற்களால் பலம்கொண்டவரையும்
கடித்துக் குதறும்

இப்படித்தான்
இரவுகளிலும் சில பகல்களிலும்
பேய்களின் கோரம்
நிகழ்த்தப்படுகின்றது.

சுடலைகளிலும்
சாம்பல் குவிந்தும்
தரவைகளில்
புதைகுழிகள் நிறைந்தும்
இருக்கின்றது
எங்கள் தேசம்.

**ம. கிருபாகரன்**

## யதார்த்தம் இப்படியும்

துப்பாக்கி முனையில் என் அந்தரங்கம் யாவும்
துருவித் துருவிப் பார்த்த போது
அனல்பட்ட புழுவாய் என் தன்மானம்
துடித்து சுருண்டு செத்து விழுந்தது.

அவர்களில் ஒருவன்
இயேசுவை நினைத்திருக்க வேண்டும்
என் கன்னத்தில் அறைந்து கொண்டான்
திருப்பிக் காட்டாமலேயே
மற்ற கன்னத்திலும் அறைந்து வைத்தான்.

வந்தவர்கள் போகும்போது
என் பெறுமதி வாய்ந்த உடைமைகள் சிலதையும்
சுருட்டிக் கொண்டார்கள்.

'அவர்கள்' வந்தார்கள்
எனக்கு சலித்துப் போயிற்று
இத்துடன் இது மூன்றாவது முறை
என் உடைமைகளை பிய்த்தும், கலைத்தும்
காட்டியும்
என்னை நம்பாமல் முறைத்துப் பார்ப்பது
இது மூன்றாவது முறை.


அவர்கள் தந்த அடையாள அட்டையையே
கசக்கி தேய்த்து உராய்ந்தும்
பார்த்துக் கொண்டார்கள்.
பின்,

'அவர்கள்' வந்தார்கள்
எனக்கு சலித்துப் போயிற்று
இத்துடன் இது நான்காவது முறை

அவர்கள் திரும்பவும் வருவார்கள்

**கஸ்ரோ**

நன்றி - நூலகத்திட்டம்

# தவறும் சரியும்!

ஐயா உங்கள் பத்திரிகையின் 158 வது இதழில் "கூட்டணி புலி பிடிக்கிறது" என்ற தலைப்பின் எனது கைது சம்பந்தமாக வெளியான செய்தியில் உண்மைக்குப் புறம்பான தகவல்கள் வெளிவந்துள்ளமை எனக்கு மிகுந்த வேதனையைத் தருகிறது. நான் எஸ். கணேந்திரன் அவர்களால் கைது செய்யப்பட்டதாகவும், அவர் என்மீது தாக்குதல் நடத்த முற்பட்டதாகவும், அதை ஒரு சப் இன்ஸ்பெக்டர் தடுத்து நிறுத்தியதாகவும், கணேந்திரன் அவர்கள் எனது பிரயாணச் சீட்டை பறித்தெடுத்ததாகவும், என்னை அவர் பின் தொடர்ந்து வாகீகன் ஹோட்டலுக்கு வந்து என்னோடு அமர்ந்து உணவு அருந்தி எனது பணத்தை அவர் கட்டிச் சென்றது என்று நீங்கள் குறிப்பிட்டிருப்பதும், நரேந்திரன் என்பவரும் கணேந்திரன் என்பவருடன் சேர்ந்து இப்படியான செயல்களை எனக்குப் புரிந்தார்கள் என்றும், ஆனந்த சங்கரி அவர்களை எனது தந்தையார் தொடர்பு கொண்டு கேட்ட போது தங்களைத் தொல்லைப் படுத்தினால் ஒன்றும் செய்ய முடியாது என்று ஆனந்த சங்கரி அவர்கள் கூறியதாகக் குறிப்பிட்டிருப்பதும், கணேந்திரன் அவர்கள் எனது பஸ் டிக்கட்டை கிழித்ததற்காக ரூ.500 எனக்கு தந்ததாகவும் நீங்கள் எழுதி இருப்பதும் முற்றிலும் உண்மைக்கு புறம்பானதே.

அத்துடன் கணேந்திரன் அவர்களும், ஆனந்த சங்கரி அவர்களும் எனது விடுதலைக்காக வேண்டிய உதவிகளைச் செய்ததை இந்தச் சந்தர்ப்பத்தில் உங்களுக்கு நான் இத்தால் தெளிவு படுத்திக் கொள்கின்றேன். இப்படியான கருத்துக்களை வெளியிடுவதால், அவர்களுக்கு அனாவசியமான முறையில் உயிராபத்துக்களை நீங்கள் தேடிக் கொடுப்பதாகவே நான் கருகின்றேன். உண்மையில் இச்செய்தியை உங்களுக்கு வழங்கியவர்கள் எனக்கும், கணேந்திரன், ஆனந்தசங்கரி ஆகியோருக்கும் இடையில் உள்ள நல்லுறவை முறிக்கும் நோக்குடனே வழங்கியிருக்கிறார்கள் என்பதை என்னால் உணர முடிகிறது. எனவே எனது இந்த மறுப்புக் கடித்தை தங்களது பத்திரிகையில் பிரசுரிப்பீர்கள் என எதிர்பார்க்கிறேன். இக்கடிதம் எவரது வற்புறுத்தலும் இல்லாமல் எனது சொந்த விருப்பத்தின்படியே சொந்தக் கையெழுத்தில் எழுதியுள்ளேன் என்பதையும் இதில் குறிப்பிட்டுக்கொள்கின்றேன்.

ஆர். ரகுபதி,
ஆரையம்பதி

ரகுபதி அவர்கள் நடந்த சம்பவம் எதனையும் மறுக்கவில்லை. ஆனால் கணேந்திரனின் சம்பந்தம் தொடர்பாக சில அபிப்பிராயங்களைத் தெரிவித்திருக்கிறார்.

சரிநிகர் இவ்விடயம் சம்பந்தமாக ரகுபதி தடுத்து வைக்கப்பட்டிருந்த பம்பலப்பிட்டிப் பொலிஸாருடன் தொடர்பு கொண்டது. அவர்கள் மீளவும் நடந்த சம்பவங்கள் அனைத்தையும் உறுதிப்படுத்தியிருக்கிறார்கள்.

ரகுபதி கைது செய்யப்பட்ட பின்னர் தான், அதுவும் ரகுபதியின் தந்தை த.வி.கூட்டணியுடன் தொடர்பு கொண்ட பின்னர் தான் த.வி.கூட்டணியின் தீவிர ஆதரவாளரின் மகனைத் தவறுதலாகப் பிடித்துக் கொடுத்திருக்கிறோம் என்பது கூட்டணியினருக்குத் தெரிய வந்திருக்கிறது.

ரகுபதியை விடுதலை செய்யுமாறு பம்பலப்பிட்டிப் பொலிஸாரிடம் கூட்டணியினர் கேட்டிருக்கிறார்கள். பொலிஸாரோ ரகுபதியைக் கைது செய்ய உதவிய கணேந்திரனே வந்து ரகுபதி புலி உறுப்பினரோ, புலி ஆதரவாளரோ இல்லை என உறுதிப்படுத்தினால் தாம் விடுதலை செய்வதாகக் கூறியிருக்கிறார்கள். அதன்படி கணேந்திரன் பம்பலப்பிட்டிப் பொலிஸ்க்குச் சென்று ரகுபதியை விடுவித்திருக்கிறார்.

இவற்றை பம்பலப்பிட்டிப் பொலிஸார் உறுதிப்படுத்தியிருக்கிறார்கள்.

ஆக, தவறான தகவல்களை சரிநிகர் வழங்கவுமில்லை. ஆனந்த சங்கரியுடனும், கணேந்திரனுடனுமான ரகுபதியின் நல்லுறவுகளை முறிக்க முற்படவுமில்லை. ஏனெனில் இதழ்158இல் வெளியான அனைத்துத் தகவல்களையும் சரிநிகர் செய்தியாளருக்கு வழங்கியது ரகுபதியின் தந்தையாரான இராமச்சந்திரன் தான். அவ்வாறானால் ரகுபதியின் உறவுகளை முறிக்கும் நோக்கம் சரிநிகருக்கல்ல. அவருக்கே இருந்திருக்கிறது என்று கொள்வதா?

இதற்கு மேல் யாருடைய வற்புறுத்தலுமின்றி இக்கடிதம் எழுதப்பட்டது என்பதைப்பற்றி நாம் என்ன சொல்வது?

ஆ-ர்.

# நடந்தது இதுதான்!

'யார் இந்த உரிமையைக் கொடுத்தது?"-மேற்குறிப்பிட்ட தலையங்கத்துடன் வந்த செய்தியில் ஒரு பிழை உள்ளது எனபதைக் குறிப்பிட விரும்புகின்றேன்.

செய்தியில் குறிப்பிடப்பட்ட நபர் எமது கிளையகத்திற்கு வந்து தன்னை ஈ.பி.டி.பி. இயக்கத்திலிருந்து விடுவித்து விடுமாறு கூறினார். நான் அவரின் சம்மதத்துடன் ஈ.பி.டி.பி. காரியாலயத்திற்குச் சென்று ஜெகன் என்பவருடன் கதைத்தேன். விடுவித்து விடுமாறு கேட்டவர் பின்னர் தொடர்ந்தும் ஈ.பி.டி.பி. இயக்கத்தில் இருக்கப் போவதாகச் சொன்னார். இந்தச் சம்பவம் தான் நடந்தது.

தவிர நான் வேறு எந்த விதமான கூற்றுக்களையும் தெரிவிக்கவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

எஸ். சிறிதரன், யாழ்ப்பாணம்

# கம்யூனிஸ்ட்...

அடிப்படையில் புரிந்துகொண்ட பிரச்சினைகளை எளிமையான உதாரணங்களுடன் நகைச்சுவைத் ததும்ப விளக்கினார். அவற்றில் ஒரு சிலவற்றையேனும் அறிந்து செய்வது அவருடைய ஆழ்ந்த புலமையை அறிய உதவியாக இருக்கும்.

அன்று யாழ்ப்பாண மக்கள் மத்தியில் மத்தியதர வர்க்க தத்துவமாக கந்தபுராணக் கலாசாரம் செல்வாக்குப் பெறத் தொடங்கியிருந்தது. இவ்வாறு கந்தபுராணப் படிப்பு தொடங்கிய மடங்களெல்லாம் பிற்காலத்தில் முருகன் ஆலயங்களாக உருமாற்றம் அடைந்தன என்பதும் இங்கு முக்கியமான அவதானிப்பிற்குரியதாகும். குறிப்பிட்ட ஆலயங்களிற்கும் அவற்றின் வழிபாட்டில் ஆதிக்கம் செலுத்தியோரின் மன ஆசைகட்கும் ஏற்ப அன்ன தானக் கந்தன், அலங்காரக் கந்தன் போன்ற பெயர்களால் பெரும்பாலான முருகன் ஆலயங்கள் அழைக்கப்பட்டன.

ஆலயப் பிரவேச வெற்றியின் கால ஒழுங்கை அடிப்படையாகக் கொண்டு ஒவ்வொரு கோவில் முருகனினதும், பண்பைப் பற்றி அவர் அற்புதமான நகைச்சுவையுடன் இப்படிக் கூறுவார்.

"சன்னிதிக் கந்தன், ஏழைகளின் கந்தன், அன்னதானக் கந்தன் ஆகவே ஆலயப் பிரவேசம் முன்னதாக நடந்தது. நல்லூர்க் கந்தன், நகரக் கந்தன், பணக்காரக் கந்தன், முதலாளித்துவக் கந்தன் அவனுக்குப் பணம்தான் முக்கியம். ஆகவே, நல்லூரானின் ஆலயப்பிரவேசப் போராட்டம் பெரும் சிக்கலைத் தரவில்லை. ஆனால், மாவிட்டபுரக் கந்தன் நிலப்பிரபுத்துவக் கந்தன், அதனால்தான் இவ்வளவு போராட்டமும் இத்தனை தடங்கலும்"

21ம் நூற்றாண்டு பிறக்கும்போது வெளியுலகுடன் பிரயாணத் தொடர்பு கொள்ள முடியுமோ என இன்று ஏங்கித் தவிக்கும் யாழ். குடாநாடு, 20ம் நூற்றாண்டு ஆரம்பிக்கும்போதே பிறபகுதிகளுடன் புகையிரதம் மூலமான பிரயாணத் தொடர்புடன் இருந்த அன்றைய ரயில் பிரயாணம் யாழ்ப்பாணத்தாரின் எத்தனையோ கதைகளைக் கூறும். அதை ஒரு நாவலாக எழுதினால் சுந்தர ராமசாமியின் தமிழ்த் தலைமைகள் தமிழ் மக்களின் அடிப்படை ஜனநாயக உரிமைகளை மதிக்காமல் விட்டாலும் கூட இன உணர்வுகளைத் தூண்டிவிட்டு அதில் குளிர் காய்ந்து கொண்டிருந்தகாலம் அன்றும் இருந்தது. தமிழனென்று சொல்லடா! என்று தனிப்பெரும் தலைவன் ஒருவர் பவனி வந்த காலம். காத்திரர் வகுப்பறைக்குச் சென்றபோது "நித்திரையாகக் கிடந்த தமிழனை தட்டி எழுப்பியவர் யார்?" என்று ஒரு கேள்வி கேட்டார். ஒவ்வொருவரும் ஒவ்வொரு பதிலைக் கூறினார்கள். "பொன்னம்பலம், செல்வநாயகம்....... என பட்டியல் நீண்டது. அவர் சிரித்துக் கொண்டு சொன்னார். "வேறு யாருமல்ல, அனுராதப்புரத்துச் சிங்களவன் தான்". அன்று யாழ்ப்பாணம் - கொழும்பு மெயில் ரயிலில் சீற்றொன்றில் இடம் கிடைத்தால் சீற்று முழுவதையும் உரிமையாக்கிப் படுத்துக்கொண்டு பயணம் செல்லும் போக்கே எம்மவரிடம் காணப்பட்டது. ரயில் பிரயாணத்தில் இடையில் ஏறிய ஒருவர் ஒரு நோயாளியாக அல்லது ஒரு வயோதிபராக இல்லை, ஒரு கைக்குழந்தையைத் தாங்கிய பெண்ணாக இருந்தாலும் கூட யாராவது வந்து தட்டி எழும்ப மாட்டார்கள். நித்திரை போல் நடித்துக்கொள்வர். எழுப்பமாட்டார்கள். ஆனால், அனுராதபுரம் வரும்போது ஏறுகின்ற சிங்களவர்கள் வந்து சிங்களத்தில் ஏசி எழுப்பும்போது துடித்து பதைத்து எழும்புவார்கள். இதையே காத்தார் நகைச்சுவையாகக் குறிப்பிட்டார்.

1940களின் பிற்பகுதியில் இருந்து வடக்கினதும், தெற்கினதும் அரசியல் போக்குகள் வெவ்வேறான திசைகளில் செல்லத் தொடங்கியதையும் சேர்த்தே இக்கூற்றை நாம் நோக்க வேண்டும். தனிப்பெருந் தலைவரை அடுத்துவந்த தந்தை காட்டியவழி சற்று வித்தியாசமானது. அவருக்குக் கொழும்பிலே ஒரு முகம் யாழ்ப்பாணத்திலே வேறொரு முகம். வடக்கே தூண்டியது இனவெறி கொழும்பிலே காட்டிய எஜமானாரின் மீதான விசுவாசம். இதனை விளக்கக் காத்திரர் பாவித்த உவமை இதுதான் "யாழ்ப்பாணம் இருந்து கொழும்பு நோக்கிச் செல்லும் ரயிலில் பயணம் செய்யும் ஒருவர் அவரது பெட்டிக்குபின் பெட்டியிலுள்ள சிற்றுண்டிச் சாலைக்குச் செல்கின்றார். அவரை அண்டிய ஒருவர் என்ன ஐயா! கொழும்பிற்கோ போகிறீர்கள்? என்று கேட்கவும், இல்லை நான் இப்போ யாழ்ப்பாணம் அல்லவா போகிறேன்" என்று பதிலளித்தாராம். உண்மைதான் தெற்கு நோக்கி ரயில் சென்றாலும் அதற்குள் அவர் பின்னோக்கி செல்வதால் வடக்கு நோக்கித்தானே போகின்றார். எப்படி தந்தையின் பம்மாத்து.

இது இன்று வெட்ட வெளிச்சமாகிவிட்ட பம்மாத்து அல்லவா அது! பாராளுமன்றப் பாதையில் கேள்விகள் எழுந்தபோது நடந்த இன்னொரு சம்பவம் இது. தனது தொகுதியில் வெற்றிவாய்ப்புக் குறைந்த நிலையில் தளபதி ஒருவர் தந்தையின் செல்வாக்கை பயன்படுத்தி தேர்தலில் வெல்ல காங்கேசன்துறையில் போட்டியிட்டார். இதற்குக் காத்திரர் கொடுத்த விளக்கம் "அவர் (தளபதி) சீற்பிடிக்க காங்கேசன்துறைக்குச் சென்றுவிட்டார்" என்பதாகும். அன்று கொழும்பு செல்லும் பயணிகள் ரயிலில் இடநெருக்கடி இன்றி ஏறிவர இருக்கைபிடிக்க காங்கேசன்துறை செல்வதுண்டு. இதையே கார்த்திகேயன் தேர்தலில் நின்றதுடன் ஒப்பிட்டார். இவ்வாறு தோழர் கார்த்திகேயனின் நகைச்சுவை கருத்துக்கள் சிந்தனையைத் தூண்டுவனவாக இருந்தன.

இவருடைய குடும்ப வாழ்க்கையும் ஏனையோருக்கு முன்மாதிரியாகவே அமைந்தது. பொதுவாழ்வையும், குடும்ப வாழ்க்கையையும் சமாந்தரமாகவும் அதேநேரத்தில் ஒன்றையொன்று விழுங்காமலும் சம நிலையில் பேணியுள்ளார். சாதாரண யாழ். மத்திய தரவர்க்கத்தில் பிறந்து, ஒரு ஏழைப் பெண்ணைக் கரம்பிடித்து வாழ்க்கை ஆரம்பித்தார். அவர் இறக்கும்போது கூட அவருக்குச் சொந்தமான ஒரு வீடு இருந்ததில்லை. வாடகை வீடுகளிலும், உறவினர் வீடுகளிலும் தான் வாழ் நாளின் பெரும் பகுதியை கழித்தார். ஆசிரியத் தொழிலும், கட்சிப் பணிகளிலும் ஈடுபடுத்தியதால், வீட்டுமுன்னேற்றம், பிள்ளைகள் முன்னேற்றம் என்று செலவழித்த நேரம் மிகக் குறைவு. அவரைப் புரிந்து கொண்ட மனையாள் வாய்த்திருந்ததால் பிள்ளைகளின் முன்னேற்றம் குறைந்ததாக இல்லை. ஏனையோரைப் போல ஐந்து பிள்ளைகளைப் பெற்றுவிட்டேனே என்று சீதனத்திற்கு பணம் சேர்க்க ஆலாய் பறந்து அவதிப்பட்டதில்லை. யாழ்ப்பாணத்தில் வழமையாக பயன்படுத்தப்பட்ட ஒரு சொல்லான "வான்பயிர்கள்" என்று தன் பிள்ளைகளைக் குறிப்பிடுவது வழக்கம். அவர்களும் வான் பயிர்போன்று வளர்ந்தது மட்டுமல்ல சமூகப் பிரக்ஞை உள்ளவர்களாக இன்னும் வாழ்கின்றனர். அவர் ஆரம்பத்தில் ஏனைய கம்யூனிட்ஸ் கட்சியின் ஊழியர்களுடன் பழகிக் கொண்ட கம்யூனிட்ஸ் வாழ்க்கைபோன்ற வாழ்க்கை நெடுகவும் தொடர்ந்ததென்றே கூற வேண்டும். இதற்கு அவருடன் கூடிக்குலவி வாழ்ந்த நண்பர்களும் உறவினர்களும் சாட்சிபகவர். இவர் தனது நேரத்தின் பெரும் பகுதியை சமூகப்பணியில் செலவிட்டபோதும், மனைவி, பிள்ளைகள், உறவினர்கள் , நண்பர்களுடன் பாசத்துடன் நல்லுறவைப் பேணினார்.

யானையைப் பார்த்த குருடரைப் போன்று எதற்கும் நியாயம் கற்பிக்கவும், பூசி மெழுகவும் மாத்திரமே தெரிந்து கொண்ட புத்திஜீவிகள் பவனிவரும் இக்காலத்தில் அவரது சமூக நோக்கு பற்றிய புரிந்துணர்வை நாம் முக்கியமாக கவனத்தில் எடுக்க வேண்டும். வடகிழக்கிற்கு பிரதேச சுயாட்சி வழங்கப்பட வேண்டுமென்ற கம்யூனிட்ஸ் கட்சியின் தீர்மானத்திற்கு இவரது பங்களிப்பும் உண்டு. பின்னாளில் இடதுசாரிகள் உட்பட அனைத்துப் பாராளுமன்றக் கட்சிகளும் இனவாத நிலையை எடுத்துச் சீரழிந்தபோதும், தமிழ் மக்களின் ஜனநாயக உரிமைகளை வென்றெடுக்க ஒரு மக்கள் ஜனநாயக அமைப்பின் தேவையை தனது கடைசிக் காலத்தில் நன்கு உணர்ந்து அதற்கான பணியையும் தொடங்கி வைத்தார்.

இவருடைய வழிகாட்டலில் சமூக வளர்ச்சிக்காக உழைத்தோர் பலர். அதேவேளை போலிகளும் உருவாகமலுமில்லை. அவரிடம் பயின்றமையும், அவருடன் சமூகப் பணியாற்றியதையும் வைத்து தமது சமூக அந்தஸ்தை மட்டும் உயர்த்தியுள்ளோரும் உள்ளனர். இன்று இந்த நபர்கள் சமூகத்திற்கு துரோகம் இழைத்து தமது பொறுப்பைத் தட்டிக் கழிக்கின்றனர். நவீன கறுப்புத் துரைகளாக உலாவரும் இவர்களிடமிருந்து தோழர் கார்த்திகேசனை மீட்டெடுப்பது, இன்றைய கிரிமினல் மயப்படுத்தப்பட்ட சமூக யதார்த்தங்களை புரிந்துகொண்டு

# இலக்கியப்...

ரஞ்சகுமார் சரியாகவே சுட்டிக்காட்டியிருப்பது போல 'விஷ்ணுபுரம்' அடித்தள மக்கள் தவிர்ந்த ஏனைய மேட்டிமைச் சாதிகள் மத்தியில் ஞானம் பற்றிய, வாழ்கை பற்றிய கேள்விகளை பல்வேறு கோணங்களில் எழுப்பியுள்ள நாவலாக மட்டுமே அமைகிறது. அதுவும் கூட வாசிக்கும் மேட்டிமைச் சக்திகளுக்குத் தங்களின் மேட்டிமை அடையாளங்களை பிரதின் வெளிச்சத்தில் சுயபரிசோதனை செய்து கொள்ளும் சாத்தியங்களை உள்ளடக்கியதாக இல்லை.

ரஞ்சகுமார் சொல்லியிருப்பதுபோல பெரியாருக்குப் பிந்திய மேட்டிமைச் சக்திகளின் புதிய அரசியல் தந்திரங்களின் இலக்கிய வடிவமாக விஷ்ணுபுரத்தை நாம் காண முடியும். பாரத வர்ஷ மரபை உயர்த்திப் பிடிக்கும் இன்றைய வரலாறு எம். வி. வெங்கட்ராம் அல்லது கல்கி எழுதியவை போல அத்தனை அப்பாவித்தனமான பிரதியியற் தந்திரங்களைக் கொண்டதாக இருக்க முடியாது. புதிய பொன்னியின் செல்வர்கள் ஆசன வாயில் கட்டி இருக்கிறது என்று சொல்லிக் குதிரை ஏற்றத்தைத் தவிர்ப்பவர்களாகச் சித்திரிக்கப்பட்டபோதும், புதிய ஆழ்வார்கள் பாராத வர்ஷத்தின் மேன்மை இவற்றுக்கெல்லாம் அப்பாற்பட்டது. இதுவே விஷ்ணுபுரம் காட்டும் காவிய தரிசனம்.

நன்றி - நூலகத்திட்டம்

Registered as a newspaper in Sri Lanka.

சரிநிகர்

இரு வாரங்களுக்கு ஒரு முறை

"சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே"
-பாரதி

இல.04, ஜயரதன வழி, திம்பிரிகஸ்யாய, கொழும்பு 05.
தொலைபேசி : 593615, 584380 தொலைமடல் : 594229

# தேவை: ஒரு மூன்றாவது சக்தி!

தமிழீழ விடுதலைப் புலிகளை அரசியல் ரீதியாக தாம் ஆதரிப்பதாக அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் தலைவர் குமார் பொன்னம்பலம் அவர்கள் அண்மையில் சுவர்ணவாஹினியில் நடைபெற்ற "ரத்து இர" நிகழ்ச்சி ஒன்றின் போது தெரிவித்திருந்தார்.

குமார் பொன்னம்பலம் அவர்கள் இந்தக் கருத்தை இதற்கு முன்பே பலதடவை பகிரங்கமாகப் பேசியும் எழுதியும் வந்துள்ளார். ஆயினும் அப்பொழுதெல்லாம் ஒன்றில் அவர் தமிழில் அல்லது ஆங்கிலத்தில் தான் தனது கருத்தைத் தெரிவித்து வந்தார். ஆனால் இந்தப் பேட்டியில் தான் முதன் முறையாக அவர் சிங்கள மொழியில் தனது கருத்துக்களை தெரிவித்திருந்தார்.

அவரது இந்த அறிவிப்பு சிங்கள தொடர்பு சாதனத் துறையை குறிப்பாகப் பத்திரிகைகளை மிகவும் ஆத்திரத்திற்கு உள்ளாக்கி விட்டுள்ளது. தடைசெய்யப்பட்டுள்ள ஒரு இயக்கத்திற்கு தான் ஒரு ஆதரவாளர் என்று தெரிவித்த பின்பும் அவரை அரசாங்கம் கைது செய்யாமல் இருப்பது ஏன் என்று எழுதியது ஒரு சிங்களப் பத்திரிகை.

உடனே அரசாங்கம் அவசர அவசரமாக அவரை விசாரிக்கும்படி உத்தரவிட்டது. சுவர்ணவாஹினி தொலைக்காட்சி நிலையத்திற்குச் சென்ற புலன் விசாரணை அதிகாரிகள் அங்கு கடமையில் இருந்த 25பேரை விசாரணை செய்துள்ளார்கள்.

குமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ள கருத்துக்கள் பற்றி மாற்றுக் கருத்துக்ளை யாரும் கொண்டிருக்கலாம். ஆனால் அவருக்கு தனது கருத்தைத் தெரிவிக்க உள்ள உரிமையை மறுக்க யாருக்கும் உரிமை கிடையாது. புலிகள் இயக்கம் தடை செய்யப்பட்ட ஒரு இயக்கம் என்ற காரணத்திற்காக அதன் அரசியலுடன் உடன்பட ஒருவருக்குள்ள உரிமையை மறுப்பதை எந்த விதத்திலும் நியாயப்படுத்திவிட முடியாது.

இந்த காரணத்திற்காக அவர் மீது விசாரணையைத் தொடங்கியிருப்பதும் எந்த விதத்திலும் ஓர் நியாயமான நடவடிக்கையாகக் கொள்ள முடியாது.

அப்படிச் செய்வதானால் புலிகள் பற்றிய செய்திகளை வெளியிடும் பத்திரிகைகள், வானொலி ஏன் அரசதரப்பு தொடர்பு சாதனங்கள் அனைத்துமே விசாரிக்கப்பட வேண்டியவை தான். தடைசெய்யப்பட்ட ஒரு அமைப்பின் நடவடிக்கைகள் பற்றிய தகவல்களை வெளியிடுவதும் அவர்களுடன் தான் பேசத் தயாராக இருப்பதாக அரசாங்க உயர் மட்டத்தினர் அறிவிப்பதும் கூட குற்றங்களாகக் கொள்ளப்பட முடியும்.

ஆனால் அவையெல்லாம் ஒரு போதும் செய்யப்படவில்லை, செய்யப்படவும் கூடாது என்பது வேறு விடயம். ஆனால் குமார் பொன்னம்பலத்தின் விவகாரத்தில் மட்டும் ஏன் இந்த அவசரம்?

காரணம் வேறொன்றும் இல்லை. இனவாதிகளும் சிங்களப் பத்திரிகைகளும் எழுப்பியுள்ள பேரிரைச்சல் காரணமாக அவர்களுக்கு அடிபணிந்து போயுள்ளது அரசாங்கம்.

இந்த சிங்களப் பத்திரிகைகளும், இனவாதிகளும் வேறுயாருமில்லை. புலிகளை எதிர்பதாகக் கூறிக் கொண்டு அவர்கள் தீவிரமாக யுத்தத்தை ஆதரிக்கின்றார்கள். யுத்தத்தின் மூலம் தமிழ் மக்களது அரசியல் உரிமைக் கோரிக்கையை பலவீனப்படுத்தி விட விரும்புகிறார்கள்.

சமாதானம் வேண்டும். இனப்பிரச்சினைகு அரசியல் தீர்வு வேண்டும் என்று கோரும் ஏகப்பெரும்பான்மையான மக்களின் வேண்டுகோளுக்கு (அண்மையில் நடைபெற்ற ஒரு கருத்துக்கணிப்பு படி 91 வீதமானவர்கள் யுத்தத்தை விரும்பவில்லை) எதிராக இப்பத்திரிகைகள் எழுதி வருகின்றன.

அண்மையில், ஐரிஸ்மோனா கப்பல் கடத்தலின் போது கைது செய்யப்பட்ட சிலரை சமாதான சமிக்ஞையாக புலிகள் விடுதலை செய்திருந்த போதும் அது பற்றிய செய்திகளை இப்பத்திரிகைகள் திட்டமிட்டே இருட்டடிப்புச் செய்தன. புலிகளை மிக மோசமானவர்களாக் காட்டவும் யுத்தம் தொடர்வதை நியாயப்படுத்தவுமே இந்தச் சந்தர்ப்பத்தை இப் பத்திரிகைகள் பயன்படுத்தின. அவர்களது சமாதான சமிக்ஞை பற்றி அவை முடிந்தளவிற்கு அடக்கி வாசித்தன. அல்லது மௌனம் சாதித்தன.

இந்த நிலையில் தொலைக்காட்சி நிகழ்ச்சியை அவை எப்படி எதிர் கொள்ளும் என்பதை சொல்லித் தெரிய வேண்டியது இல்லை.

ஆக மொத்தத்தில் சாமாதனம் மக்களின் விருப்பமாக இருக்க அதற்கு எதிரான இனவாத சக்திகளும் அவற்றின் தொடர்பு சாதனங்களும் இயங்கிக் கொண்டிருக்கின்றன.

அரசாங்கமும் அவர்களது அடிதொழுது பின் தொடர்கிறது.

ஆங்காங்கு சமாதானத்திற்கான குரல்கள் நம்பிக்கையூட்டும் விதத்தில் எழுகின்ற போதும் அவை ஈனஸ்வரக் குரல்களாகவே ஒலிக்கின்றன.

இந்த நிலையில் இருக்கிறது எமது நாட்டின் நிலை.

இனியும் இந்த அரசாங்கம் மக்களுக்காகப் பேசும் என்று நம்பிக்கை கொண்டு இயங்க முயும் எனக் கருதுபவர்கள் பற்றி என்ன சொல்வது.

அதைச் சார்ந்து நின்று தான் தீர்வோம் என்று மல்லுக்கு நிற்கும் தமிழ்க் கட்சிகள் பற்றி என்ன சொல்வது?

இந்த நாட்டின் சமாதானத்தை நேசிக்கும் மக்களுக்கு வழிகாட்ட இவர்களெல்லாம் மறுத்து நிற்பதால் தற்போதைக்கு நடக்கப் போவது ஒன்று மட்டும் தான்.

ஆம், மீண்டும் ஒரு ஐ.தே.க. ஆட்சி.

இந்த நாட்டின் அரசியல் வரலாறே எதிர்க் கட்சிகளை மாறிமாறி நம்பிக் கெட்ட வரலாறு தான்.

ஆனாலும் அது இன்னொரு தடவையும் அரங்கேறப் போகிறது.

அதற்கேற்ற விளைநிலத்தை இப்போதே பண்படுத்தத் தொடங்கி விட்டார்கள் இவர்கள்.

மக்கள் தமக்கு வழிகாட்ட தாமே ஒரு மூன்றாவது சக்தியாகத் தலை தூக்கப் போவது எப்போது?

# அரசுக்குப் புரியாத புதிர்!

இலங்கை இராணுவம் யுத்தத்தைத் தொடர்ந்து மேற்கொள்வதற்கு உடனடியாக இருபதினாயிரம் இராணுவத்தினர் தேவைப்படுகின்றனர். இதை நிறைவு செய்ய இராணுவத்தை விட்டு அண்மைக்காலங்களில் தப்பியோடிய பதினையாயிரம் பேரை எப்படியாவது வலை வீசிப் பிடித்து விடுவது என்றும் எஞ்சியுள்ள ஐயாயிரம் பேரை புதிதாகச் சேர்த்துக்கொள்வதென்றும் முடிவு செய்யப்பட்டுள்ளது. நவம்பர் 24ம் திகதி மாலை இராணுவத் தலைமையகத்தில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டின் போது இந்தத் தகவலை தெரிவித்த மேஜர் ஜெனரல், கே.ஏ.எம்.ஜி.குணரட்ன தற்போது தொடரும் நடவடிக்கைகளை முன்கொண்டு செல்லவும், புலிகளிடமிருந்து இன்னும் புதிய பிரதேசங்களைக் கைப்பற்றி நிலை நிறுத்தவும் இவ் ஆட்சேர்ப்பு அவசியமாகியுள்ளது என்று தெரிவித்தார்.

இந்த ஆட்சேர்ப்புக்கான வயதெல்லை 18-28 வரையானது என்றும், ஒன்பதாம் வகுப்பு வரை கல்வி கற்றிருந்தால் போதுமானது என்றும் தெரிவிக்கப்படுகிறது. இவ்வாறு சேர்க்கப்படவுள்ளவர்களது சம்பளம் மிகவும் கவர்ச்சிகரமானதாக அறிவிக்கப்பட்டுள்ளது. போர் நடைபெறும் பகுதிகளுக்கு வெளியே கடமையில் ஈடுபடுத்தப்படுபவர்களுக்கு ரூபா 7,000 ஆரம்ப அடிப்படைச் சம்பளமாகவும், யுத்தப் பகுதிகளில் வேலை செய்பவர்களுக்கு ரூபா 11,000 ஆரம்ப அடிப்படைச் சம்பளமாகவும் வழங்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது. இவை தவிர இதர படிகளும் வழங்கப்படும். திருமணமானவர்களுக்கு ரூபா 13,000 ஆரம்ப அடிப்படைச் சம்பளமாகவும் மற்றும் இதர படிகளும் வழங்கப்படுமென்று தெரிவிக் கப்படுகிறது.

இலங்கை அரசாங்கத்தின் சேவையில் புதிதாக சேர்த்துக் கொள்ளப்படும், ஒரு வைத்தியருக்கு ரூபா 7,500உம், பொறியிய லாளருக்கு ரூபா 5,500உம், ஆசிரியர்களுக்கு ரூபா 4,600உமே அடிப்படைச் சம்பளமாக வழங்கப்படுகிறது. பட்டதாரிகளான இவர்களுக்கே இந்தச் சம்பளம் வழங்கப்படுகையில், ஒரு இராணுவ சிப்பாய்க்கு இவ்வளவு அதிக சம்பளமும் வசதிகளும் செய்யப்படுவது ஏன்?

அதுவும் திடீரென்று இப்போது சம்பளம் இவ்வாறு உயர்த்தப்படுவதற்கு காரணம் என்ன?

சம்பளம் மட்டுமல்ல, அவர்களது குடும்பத்தவர்களுக்கு இலவச வைத்திய வசதிகள் செய்யப்படல், இராணுவ சிப்பாய் ஒருவர் காணப்பட்டால் அவர் வெளிநாடு சென்று சிகிச்சை செய்ய வாய்ப்பு என்பனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. இந்தத் தீடீர் கரிசனை இப்போது இராணுவத்தின் மீது அரசாங்கத்திற்கு ஏற்பட்டிருப்பதற்குக் காரணம் என்ன?

இவையெல்லாம் அரசாங்கம், இராணுவ ஆட்சேர்ப்பில் எதிர்கொள்ளும் நெருக்கடிகளை தெளிவாக உணர்த்துகின்றன. கடந்த ஜனவரியில் முதற்கட்டமாக பெருமளவு ஆட்சேர்ப்பு நடத்த அரசாங்கம் முயன்ற போதும் 4776 பேரை மட்டுமே அதன் போது சேர்க்க முடிந்தது. ஆனால் புதிதாக சேரும் இராணுவத்தினர்களில் பாதிப்பேருக்கு மேல், பயிற்சி முடிந்து போர்க்களம் சென்ற சில நாளைக்கெல்லாம் ஓடிப்போய் விடுகிறார்கள். இவ்வளவு சம்பளம் மற்றும் வசதிகளை வாரி வழங்கியும் இருக்கின்ற இராணுவ சிப்பாய்கள் ஏன் தப்பி ஓடுகிறார்கள்? ஏன் புதிதாக இணைகிறார்களில்லை?

இந்த நாட்டின் அனைத்து மக்களுக்கும் புரிந்த இந்த கேள்விகளுக்கான பதில் நமது பாதுகாப்பு அமைச்சருக்கும் அவரது அமைச்சுக்கும் மட்டும் ஏன் புரியவில்லை?

ஆம் சமாதானத்தை மக்கள் விரும்புகிறார்கள் என்பது அவர்களுக்கு ஒரு போதும் புரியப் போவதில்லை.

## 'பெயின்ற்' கேட்ட பொலிஸ்!

கல்கிஸ்ஸ பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட சொய்சாபுர மாடி மனைத் தொடர் பகுதிக்குப் பொறுப்பான சீ. ஐ. டீ. அதிகாரி எனத் தம்மைக் கூறிக்கொள்ளுபவர் ஒருவர் அங்குள்ள சிறுபான்மை இனத்தவர்களின் வீடுகளுக்குச் சென்று கல்கிஸ்ஸ பொலிஸ் நிலையத்துக்கு வர்ணம் பூசுவதற்குத் தேவையான வர்ணப் பூச்சுக்கள் வாங்கித் தருமாறு வற்புறுத்தியுள்ளார்.

ஸ்ரீ லங்கா அரசாங்கம் தனது எல்லா வரவு செலவுத் திட்டங்களின் போதும், பெரும்பகுதி பணத்தை ஒதுக்குவது பாதுகாப்பு அமைச்சின் செலவினங்களுக்காகவேயாகும், அப்படியிருக்க கல்கிஸ்ஸ பொலிஸ் நிலையத்துக்கு வர்ணம் பூச மட்டும் நிதி ஒதுக்கவில்லையா? அல்லது மறந்துவிட்டதா?

எஸ். எஸ்.

சரிநிகரில் விளம்பரம் செய்யுங்கள்!

விளம்பர முகவர்களுக்கு விஷேட விலைக் கழிவுகள் உண்டு

விபரங்களுக்கு-
விளம்பர முகாமையாளர்,
சரிநிகர்
இல. 04, ஜயரத்ன வழி,
திம்பிரிகஸ்யாய, கொழும்பு 05.
தொலைபேசி : 077 - 321527, 01 - 593615.

## வவுனியா...

சுமார் 10 நிமிடங்களின் பின்னர், துப்பாக்கிச் சூட்டுச் சத்தம் கேட்டு, வீட்டிலிருந்தவர்கள் மேலும் சத்தமிட்டுக் குழறியதை அடுத்து, அயலவர்கள் வந்து உதவியுள்ளார்கள். ஓடிச் சென்று பார்த்த போது, வீரசிங்கம் வீதியில் இரத்தம் பெருகிய நிலையில் வயிற்றில் காயங்களுடன் விழுந்து கிடந்துள்ளார். உடனடியாக ஓட்டோ ஒன்றின் மூலம் வவுனியா வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டார். அவர் தற்போது அனுராதபுரம் வைத்தியசாலையில் உயிருக்காகப் போராடிக் கொண்டிருக்கின்றார்.

இவரைத் தாக்கியது யார், ஏன் என்பது இன்னும் புரியாத புதிராகவே உள்ளது.

வழக்கம் போல தமிழ்க்குழுக்கள் அறிக்கை விட்டுள்ளன. பொலிசார் வழமையான தமது விசாரணைகளை மேற்கொண்டுள்ளார்கள். இராணுவம் எல்லோருக்கும் எல்லா இடத்திலும் பாதுகாப்பு வழங்க முடியாது எனக் கூறியுள்ளது. தமது பாதுகாப்பு உறுதி செய்யப்பட்டால் தான் தாங்கள் கடமையைச் செய்ய முடியும் என்று கூறி கடமைக்குச் செல்லாமல் இருந்த கூட்டுறவுச் சங்க ஊழியர்கள், அதிகாரிகள் கடந்த வியாழக்கிழமை முதல் மீண்டும் தமது செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளார்கள்.

ஆயினும் நிலைமையில் எந்தவிதமான மாற்றங்களும் ஏற்படாத நிலையில் மக்கள் பீதியுடன் வாழ்க்கையை நடத்துகின்ற சூழ்நிலையே காணப்படுகின்றது. □

## பெண்களின்...

இதற்கு அடுத்ததாக -நான்காவதாக- சுகாதார உரிமைகளை முன்னெடுக்கவுள்ளோம். யூன் மாதமளவில் இவற்றைத் தொடக்குவோம்.

**இவையனைத்துக்கும் கால எல்லையை வகுத்துள்ளீர்களா?**

இரண்டாண்டு காலத்திற்குள் இந்த நான்கு விடயங்கள் குறித்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளவிருக்கிறோம்.

**நீங்கள் முன்னெடுத்த செயற்பாடுகளின் விளைவுகளை எப்படி அளவிடுகிறீர்கள்?**

எமது அமைப்பு மையப்படுத்தப்பட்ட ஒரு மத்திய அமைப்பு என்கின்ற ரீதியில் அமைப்பினால் மேற்கொள்ளப்படுகின்ற வேலைகளை பரஸ்பரம் ஏனைய அமைப்புகளின் ஒத்துழைபபுடன் பரிமாறுகிறோம்.

அரசியலில் பெண்களின் பிரதிநிதித்துவம் குறித்த விடயத்தைப் பேசுகையில் அதில் கலந்துகொண்ட பல பெண்கள் 'எத்தனை காலம் இக்கட்சிகளை நம்பியிருப்பது? நாங்கள் பெண்களுக்கென்று அரசியற் கட்சியொன்றை ஆரம்பிக்கத் தான் வேண்டுமென ஒருவர் தொடங்க ஏனையோரும் அதனைத் தொடர்ந்து மாறிமாறி உத்வேகம் கொண்டு பேசினர். அதன் விளைவாக நுவரெலியாவில் பெண்கள் அரசியற் குழு போட்டியில் இறங்கியது. இப்படியாக எதற்கும் ஒரு ஆரம்பம் வேண்டும். அதன் பிறகு அந்த உத்வேகத்தில் -தைரியத்தில் ஏனையோரும் ஒருவர்பின் ஒருவராக அல்லது கூட்டாக களத்தில் இறங்குவார்கள். அந்த வகையில் எமது செயற்பாடுகள் பல விளைவுகளை ஏற்படுத்தியிருக்கிறது என்பதில் சந்தேகமில்லை. □

வெளியிடுபவர் : ச. பாலகிருஷ்ணன், இல. 18/02, அலோ சாலை, கொழும்பு 03. அச்சுப் பதிவு : பிறின்ற் இன், இல. 07, கெடிய இடம், சிறிமல் உயன, இரத்மலானை.